பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 15 வியாழக்கிழமை (28.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :153

# பொல்காவலை ரயில் கடவையில் கோர விபத்து
# பயணிகள் பஸ்ஸை மோதிப்பந்தாடியது கடுகதி ரயில்!

## 40 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர் என அச்சம்
## சாரதியின் கவனயீனமே விபத்துக்குக் காரணம்:

கொழும்பு.ஏப்.28

பொல்காவலை ரயில் கடவையில் பயணிகள் பஸ் ஒன்றைக் கடுகதி ரயில் மோதிப் பந்தாடி இழுத்துச் சென்றதில் 40 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. மேலும் 41 பேர் காயமடைந்துள்ளனர். விபத்து நடந்த இடம் ரணகளம் போன்று காட்சியளித்தது. பஸ் உருக்குலைந்து சின்னா பின்னமாகிக்கிடந்தது.

பொல்காவலைக்கும் அலவ்வ என்ற இடத்திற்கும் இடையில் யாங்கல்மோதர என்ற இடத்தில் அமைந்திருந்த ரயில் கடவையிலேயே இந்தக் கோர விபத்து இடம்பெற்றது. அதிகாலை 4.45 மணிக்கு தம்புள்ள, கல்கிரியாகம என்ற இடத்தில் இருந்து புறப்பட்ட தனியார் சொகுசு பஸ்ஸே விபத்தில் சிக்கியது.

ரயில் கடவை ஊழியரின் எச்சரிக்கையை மீறிச் செயற்பட்டதாலேயே விபத்து இடம்பெற்றது எனப் பொலீஸார் கூறுகின்றனர்.

பஸ்ஸை மோதிய ரயில் அதனை சுமார் 500 யார் தூரம் வரை இழுத்துச் சென்றுள்ளது. உடனடியாக மீட்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இராணுவத்தினர் அழைக்கப்பட்டு அவர்களின் உதவியும் பெறப்பட்டது.

காயமடைந்தவர்கள் விரைவாக அருகில் இருந்த வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் சிலரின் நிலை

(02 ஆம் பக்கம் பார்க்க)



சுக்குநூறான பஸ்ஸை மீட்கும் படையினர்



மோதிய கடுகதி ரயில்



பஸ்ஸின் முன் பகுதி

### பொதுக்கட்டமைப்பு விவகாரம்:

# நோர்வே புதிதாக முன்வைத்திருக்கும்
# திருத்த யோசனையையும் புலிகள் ஏற்பு!

## ஆனால் அரசுத் தரப்பிலிருந்து இன்னும் பதில் ஏதும் இல்லை

கிளிநொச்சி,ஏப்ரல் 28

**ஆழிப்பேரலையின் பின்னரான நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக இலங்கை அரசுத் தரப்பும் விடுதலைப் புலிகளும் சேர்ந்து உருவாக்கவிருக்கும் உத்தேச பொதுக்கட் டமைப்பு ஏற்பாடுகள் தொடர்பாக நோர்வே அனுசரணைத் தரப்பு, ஆகப் பிந்திய -கடைசியாக - சமர்ப்பித்திருந்த திருத்த யோசனையையும் விடுதலைப் புலிகள் அப்படியே ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனாலும், உத்தேச திட்டம் குறித்து இலங்கை அரசுத் தரப்பிலிருந்து திட்டவட்டமான பதில் ஏதும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. அரசுத் தரப்பு, பதில் ஏதும் தராமல் காலத்தை இழுத்தடிக்கின்றது.**

**- விடுதலைப் புலிகளின் உயர் வட்டாரங்கள் இவ்வாறு தெரிவித்திருக்கின்றன.**

மேற்படி பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக இலங்கை அரசினதும், விடுதலைப் புலிகளினதும் கருத்துக்களை நோர்வே அனுசரணையாளர்கள் உள்வாங்கி, இரண்டு தரப்பும் இது விடயத்தில் இணக்கத்திற்கு வரக்கூடியதாக யோசனைத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்தனர். அதைப் புலிகள் அப்படியே ஏற்றுக் கொண்டனர். ஆனால், அரசுத் தரப்பு ஏற்க மறுத்தது. அதனால், அந்தத் திட்டத்துக்குத் திருத்த யோசனை ஒன்றைப் புலிகளே முன்வைத்தனர். ஆனால், அதையும் ஏற்க அரசுத் தரப்பு மறுத்தது. இதனையடுத்து, இம்மாதம் இரண்டாம் வாரத்தில் நோர்வே அனுசரணைக்குழுவின் விசேட பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்ம் இலங்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## செங்கலடியில் புலனாய்வாளர் நேற்று மாலை சுட்டுக்கொலை!

ஏறாவூர்.ஏப்.28

ஏறாவூர், செங்கலடி பொதுச் சந்தைக்கு அருகே நேற்று மாலை பொலீஸ் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஏறாவூர் பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றும் செல்டன் நவரத்தின (வயது-33) என்ற பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த பொலீஸாரே கொல்லப்பட்டார் என்று பொலீஸ் நிலைய அதிகாரி தெரிவித்தார்.

நவரத்தின தனது நண்பருடன் செங்கலடிக்குச் சென்றபோது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர் என்று பொலீஸார் கூறினர். மாலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. படுகாயமடைந்த நவரத்தின உடனடியாக ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பயனளிக்காது அவர் மரணமானார். அவரது மார்பிலும்,

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பிக்குமார் முன்னணி சட்ட நடவடிக்கை: உயிரையும் கொடுப்போம் எனச் சூளுரை

கொழும்பு.ஏப்.28

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் செய்து கொள்ளப்படவுள்ள உத்தேச பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக தேசிய பிக்குமார் முன்னணி நேற்று அறிவித்திருக்கிறது.

பௌத்தலோகா மாவத்தையிலுள்ள அலுவலகத்தில் செய்தியாளர் மாநாட்டை நடத்தியது தேசிய பிக்குமார் முன்னணி. பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு தாம் எந்தவித ஆதரவையும் வழங்காமல் முற்று முழுதாக அதனை எதிர்க்கப் போவதாகவும் அது கூறியது.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் தேசிய பிக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுக் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி தீர்மானம்

கொழும்பு.ஏப்.28

மேல்மாகாண முதலமைச்சருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து இறுதி முடிவொன்றை எடுப்பதற்காக அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் முக்கியமான பேச்சு ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளார்.

இந்தப் பேச்சை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும், மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சருமான சுசில் பிரேமஜயந்தவை நேற்று ஜனாதிபதி பணித்திருக்கிறார் என ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வாளர்கள் கொலைகளை கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம் -

கொழும்பு.ஏப்.28

அரசுப் படைகளில் செயற்படும் புலனாய்வு உத்தியோகத்தர்களைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மேற்கொள்ளவேண்டுமென்று வலியுறுத்தி நேற்று கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும், ஊர்வலமும் இடம்பெற்றன. படைகளிலுள்ள புலனாய்வுத் துறையினரை பாதுகாப்பதற்கான அமைப்பு இதனை நடத்தியது. பம்பலப்பிட்டி வஜிரா வீதியிலிருந்து ஊர்வலமொன்றை நடத்திய இந்த அமைப்பு, பின்னர் கொள்ளுப்பிட்டியிலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு முன்பா

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஆள்கள் காணாமற்போதல் சம்பவங்கள்: ஒன்று சேர்ந்து காரணங்களைக் கண்டறிக!

### மனித உரிமை ஆணைக்குழுவின் நூலில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.28

அரசியல் சார் படுகொலைகளும் காணாமற் போதல் சம்பங்களும் இலங்கையர்களாகிய எமக்கு அச்சத்தையும் அகௌரவத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

தர்மதுவீபம் என்றும் நல்வினைத்தீவு என்றும் புகழ்பெற்ற எமது நாட்டின் வரலாற்றில் இந்த மோசமான பகுதியை நாம் துடைத்தெறிய வேண்டும்.

அவ்வாறு செய்யவேண்டுமெனின் நாம் இந்நிலைமைக்கான காரணங்களை ஒன்று

(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இளைஞர் காணாமற் போனமைபற்றி புலனாய்வுத் துறையிடம் விசாரணை

## மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று நடைபெற்றது

யாழ்ப்பாணம்,ஏப்.28

உரும்பிராய்யைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டது தொடர்பான முறைப்பாடு பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் இராணுவப் புலனாய்வுத் துறையினரிடம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்த ஆண்டு முற்பகுதியில் பலாலி வீதி, உரும்பிராயைச் சேர்ந்த, 24 வயதுடைய சுந்தரமூர்த்தி சர்வானந்த் என்ற இளைஞர் காணாமற் போயிருந்தார்.

இது தொடர்பாக அவரது தாயார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டில் தனது மகனை இராணுவப் புலனாய்வுத்துறையினரே கைதுசெய்தனர் என்றும் -

தனது மகன் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னர் 99 ஆம் ஆண்டு படையினரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார் என்றும் -

அதன் பின்னர் 2000 ஆம் ஆண்டு தன்னையும் தனது கணவரையும் கைதுசெய்த படையினர் விசாரணைகளின் பின்னர் விடுவித்தனர் என்றும் தாயார் தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

இந்த முறைப்பாடு தொடர்பான விசாரணை நேற்றுக் காலை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நடைபெற்றது.

விசாரணைகளுக்காக யாழ். மாவட்ட இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரி கப்டன் சங்கப்புகம மற்றும் இளைஞனின் தாயார் ஆகியோர் சமுகமளித் திருந்தனர்.

விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ரூவான் சந்திரசேகரா மற்றும் விசாரணை அதிகாரி எஸ்.பெரோஸ் ஆகியோர் நடத்தினர்.

இதன் போது காணாமற்போன இளைஞனின் தயார், தனது மகனை இராணுவப் புலனாய்வுத் துறையினரே கைதுசெய்தனர் என்று தெரிவித்தார்.

குறிப்பிட்ட இளைஞனை தாம் கைதுசெய்யவில்லை என்று இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரி அடியோடு மறுத்தார்.

இது தொடர்பான அடுத்தகட்ட விசாரணைகளைப் பின்னர் நடத்துவது என மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இராணுவப் புலனாய்வுத்துறையால் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டது தொடர்பான விசாரணைகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நடைபெறுவது புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் இதுவே முதல்முறை எனத் தெரிவிக்கப்பட்டது.(ஐ-7)



சாவகச்சேரியில் காணபடும் கிணறு இது. இதனைத் தோண்டிக் கொண்டிருந்த ஐந்து இளம்வாலிபர்கள் காணாமற்போயினர். அயலில் யாரையோ தேடிக கொண்டு வந்த இராணுவம் அவரைக் காணாதபடியால் இந்த ஐந்து பேரையும் கொண்டுசென்றது. அவர்களது உறவினர்கள் கிணற்றுக்கு அருகே கவலை தோய்ந்த முகத்துடன் காணப்படுகின்றனர்.

1996-1997 காலப்பகுதியில் குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் இந்தப் படம் வெளியிடப் பட்டிருக்கிறது. (ஐ)

# நெடுந்தீவில் சனியன்று சத்தியவான் சாவித்திரி

யாழ்ப்பாணம்,ஏப்,28

நெடுந்தீவு இசை நாடக நாட்டுக் கூத்து மன்றத்தின் அனுசரணையுடன் பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்தும் சத்தியவான் சாவித்திரி இசைநாடகம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 8 மணிக்கு நெடுந்தீவில் நடைபெறவுள்ளது. கலாபூஷணம் மெற்றாஸ் மயிலின் தயாரிப்பில் உருவான இந்த நாடகத்தில் அரியாலை நடிகமணி செல்வம், பருத்தித்துறை பரராசசிங்கம், பளை இரத்தினகுமார், கொக்குவில் சரவணமுத்து, அளவெட்டி முருகானந்தம்,விஜயபாஸ்கரன் கலாவித்தகர் வ.தயாநிதி, மாவை பிரதீபன் உள்ளிட்ட பல முக்கிய கலைஞர்கள் பங்கேற்கவுள்ளனர். (எ-204)

# கிளிநொச்சியிலிருந்து வந்த குடும்பஸ்தரைக் காணவில்லை

## மனித உரிமைகள் குழுவில் முறைப்பாடு

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தனது தாயாரைப் பார்ப்பதற்கு வந்த சமயம் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் காணாமற்போய்விட்டார் எனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனந்தநகர், கிளிநொச்சியைச் சேர்ந்த 26 வயதுடைய செல்வராஜா செல்வரஞ்சன் என்ற இரு பிள்ளைகளின் தந்தையே காணாமற் போனவராவார்.

கடந்த வருடம் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணம் அச்செழுவில் வசிக்கும் தனது தாயாரைப் பார்ப்பதற்காக இவர் யாழ்ப்பாணம் வந்தார் என்றும் அதன் பின்னர் இதுவரை அவர் வீடுதிரும்பவில்லை என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் காணாமற்போனோர் விசாரணை அதிகாரி செல்வி ரி.மொறின் மேற்கொண்டு வருகிறார். (ஐ-7)

# வடக்கில் காணாமற் போனமை: மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை நூல் வடிவில்

வடக்கில் காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொகுப்பு நூலாக வெளியிட்டிருக்கின்றது.

கலாநிதி தேவநேசன் நேசையாவைத் தவிசாளராகக் கொண்டு நியமிக்கப்பட்ட இந்த விசாரணைக்குழுவில் கே.எச்.கமிலஸ பெர்னாண்டோ, திருமதி ஜெஸீமா இஸ்மாயில், எம்.சீ.எம். இக்பால் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட இக்குழுவின் அறிக்கையே 240 பக்கங்களைக் கொண்ட தொகுப்பு நூலாக வெளியிடப்பட்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினதும் (UNDP) சுவீடன் நாட்டு சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையத்தினதும் (SIDA) அனுசரணையுடன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இந்த நூலை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை கடந்த 2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (ஐ-7)

# மேல்மாகாணசபை ஒத்திவைப்பை எதிர்த்து ஐ.தே.க. இரண்டாவது நாளாகவும் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஏப்.28

மேல்மாகாணசபை முதலமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக நியமிக்கப்படும் ஆணைக்குழு மூன்று வாரங்களில் தனது விசாரணைகளை முடித்துக்கொள்ளும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? எனக் கேள்வி எழுப்பிகின்றார் மேல்மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவர் கீர்த்திசிறி கஹடபிட்டிய.

மேல்மாகாணசபை ஜனநாயகத்துக்கு விரோதமான முறையில் ஒத்திவைக்கப்பட்டதை ஆட்சேபித்து ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் நேற்று முதலமைச்சரின் அலுவலகத்தின் முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். இதனால், மேல்மாகாணசபை முதலமைச்சரின் அலுவலகத்திற்குப் பலத்த பாதுகாப்புக்கள் போடப்பட்டிருந்தன.

மாகாணசபை அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டதை எதிர்த்து சபை அலுவலகம் முன்பாக ஐ.தே.க. நடத்திய இரண்டாவது நாள் ஆர்ப்பாட்டம் இது.

ஐ.தே.கவின் மேல்மாகாணசபை உறுப்பினர்கள் அரசுக்கும், முதலமைச்சருக்கும் எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வண்ணம் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு உரையாற்றிய கீர்த்திசிறி கஹடபிட்டிய தெரிவித்ததாவது:-

பிரச்சினைக்கு முகங்கொடுக்கமுடியாத முதலமைச்சர் ஓடி ஒழித்துக்கொண்டார்.

ஜனநாயகத்திற்கே சாவுமணி அடித்துவிட்டார் ஜனாதிபதி. குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கும் முதலமைச்சருக்கான தீர்ப்பை வழங்கவேண்டியது இந்த மாகாணசபைதான். அதைவிடுத்து முதலமைச்சருக்கு எதிரான குற்றஞ்சாட்டுக்கள் குறித்து விசாரிக்க குழு நியமிக்கப்படும் என்றும், அதன் விசாரணைகளுக்காகவே மாகாணசபை அமர்வுகள் பிற்போடப்பட்டிருக்கின்றன என்றும், ஆளுநர் கூறுவது 'மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப்போடும்' ஒரு செயலாகும்.

விசாரணைக்குழு மூன்று வாரங்களில் தனது விசாரணைகளை முடித்துக்கொள்ளும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

ஜனாதிபதியினால் ஏற்கனவே, நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுக்கள் டசின் கணக்கில் இருக்கின்றன. பல வருடங்களாகியும் அவற்றின் முடிவு என்ன என்பது பரகசியம். வீட்டிற்கு அனுப்ப வேண்டிய முதலமைச்சரைப் பாதுகாக்கவே ஜனாதிபதியும் ஆளுநரும் முனைக்கின்றனர்.

பக்கச்சார்பற்று நடக்க வேண்டிய முதலமைச்சர் ஓர் அரசியல்வாதியைப் போன்று நடந்துகொள்கிறார் - என்றார். (எ-க)

# பொல்காவலை ரயில் கடவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகமோசமாக இருக்கிறது என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. ஆபத்தான நிலையிலிருந்த 9 பேர் கொழும்புத் தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

**சாரதி, நடத்துநரின் கவனயீனம்**

விபத்தில் சிக்கிய பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநரின் கவனயீனம் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டது என்று பொலீஸார் கூறுகின்ற னர்.

குறிப்பிட்ட பஸ் ரயில் கடவையை அண்மித்த வேளை, காவலாளி வீதித்தடை 'கேற்றை' மூட எத்தனித்தார். பஸ்ஸில் இருந்து இறங்கிய நடத்துநர், காவலாளியை மீறி ரயில் தண்டவாளத்தில் நின்றுகொண்டு பஸ்ஸை விரைவாகச் செலுத்திக் கடவையைக் கடக்கும்படி சாரதிக்கு அறிவுறுத்தினார் எனப் பொலீஸார் கூறுகின்றனர்.

பஸ் கடவையைக் கடக்க முயல்கையில் வேகமாக வந்த ரயில். பஸ்ஸை மோதிப் பந்தாடி இழுத்துச் சென்றது.

கொழும்பில் இருந்து கண்டி நோக்கி வந்து கொண்டிருந்த கடுகதி ரயிலே கண் இமைக்கும் வேளையில் பஸ்ஸைப் பந்தாடியது.

60 ஆசனங்களை மட்டுமே கொண்ட இந்த சொகுசு பஸ்ஸில் 75 பேருக்கு மேல் பயணம் செய்துள்ளனர் என்று கூறப்படுகிறது. விபத்துக்குள்ளான இந்த பஸ் HD 2500 என்ற இலக்கத்தைக் கொண்டது எனப் பொல்காவலைப் பொலீஸார் கூறினர்.

விபத்து நடந்த இடத்திற்கு நேரடியாகச் சென்ற வடமேல் பிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் அசோக ரத்ணவீர மீட்புப் பணிகளை நெறிப்படுத்தினார்.

விபத்து நடந்த இடத்தில் இருந்து 500 மீற்றர் தூரத்திற்கு பஸ் இழுத்துச் செல்லப்பட்டதாகவும், அப்போது பஸ் தீப்பற்றி எரிந்ததாகவும் விபத்தை நேரில் கண்டவர்கள் கூறினர்.

நேற்று மாலை வரை விபத்து நடந்த இடத்திலிருந்து 33 சடலங்கள் மீட்கப்பட்டன. மேலும் சில சடலங்கள் தீயில் கருகி உருத்தெரியாமற் போயிருக்கலாம் என்று பிரதிப் பொலீஸ்மா அதி பர் அசோக ரத்ணவீர தெரிவித்தார்.

மீட்கப்பட்ட 33 சடலங்களும் அடையாளம் காண்பதற்காக குருநாகல் போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. உயிரிழந்தவர்களில் ஒருவர் கலகெதர பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் அமரவன்ஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காயமடைந்த 30 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஐந்து பேருக்கு அவசர சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட 9 பேர் கொழும்பு விபத்துச்சேவைகள் பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்"என குருநாகல் போதனா வைத்தியசாலை அத்தியட்சகர் ஆனந்த குணசேகர தெரிவித்தார். விபத்துத் தொடர்பாக விசேட பொலீஸ் குழு ஒன்று விசாரணைகளை நடத்திவருகின்றது.

போக்குவரத்துத்துறை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா நேற்றுக்காலை சம்பவ இடத்துக்கு நேரில்சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார். விபத்துக் குறித்து விரிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி அவருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, விபத்துத் தொடர்பான செய்திகள் கிடைத்தவுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டார். விபத்தில் காயமடைந்து குருநாகல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருபவர்களையும் அவர் பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

குருநாகல், பொல்காவலை, கேகாலை ஆகிய வைத்தியசாலைகளுக்கு மேலதிகமான வைத்தியர்களையும், தேவையான மருந்து வகைகளையும் அனுப்பிவைக்கும்படி சுகாதார அமைச்சுக்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உத்திரவிட்டுள்ளார்.

பிரதமரின் உத்தரவிற்கமைய விசேட வைத்தியர்களையும், மருந்து வகைகளையும் அங்கு அனுப்பி வைத்துள்ளதாக சுகாதார அமைச்சு அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

**சாரதி கைது**

விபத்துக்குள்ளான சொகுசு பஸ்ஸை ஓட்டி வந்த சாரதியும், நடத்துநரும் விபத்தின்பின் தலைமறைவாகி உள்ளனர்.

நேற்றுமாலை பஸ்ஸின் சாரதி கைதுசெய்யப் பட்டார் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்த ரயில் விபத்துச்சம்பவம் தொடர்பில் ஆழ்ந்த அதிர்ச்சியையும், அனுதாபத்தையும் வெளியிட்டிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் நேற்று அறிக்கையொன்றை விடுத்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கு[illegible]பிட்டுள்ளதாவது:-

நேற்றுக்காலை இடம்பெற்ற ரயில் விபத்து ஜனாதிபதிக்கு அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. தமது தொழில் நிமித்தம் கொழும்புக்கு வந்துகொண்டிருந்தவர்கள் துரதிஷ்டவசமான முறையில் இந்தச் சம்பவத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஜனாதிபதி ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்பில் முழுமையாக கவனஞ்செலுத்துமாறு போக்குவரத்து அமைச்சை ஜனாதிபதி கேட்டுள்ளார். காயமடைந்தவர்கள் தொடர்பிலும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு சுகாதார அமைச்சுக்கு ஜனாதிபதி பணித்துள்ளார். இதுவிடயத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு விமானப்படையினரும் கேட்கப் பட்டுள்ளனர்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவசரமாக மேற்கொள்ளப்பட்ட மீட்புப் பணிகளை அடுத்து நேற்றுமாலையில் ரயில் பாதையில் இருந்து விபத்துக்குள்ளான பஸ்ஸின் இடிபாடுகள் அகற்றப்பட்டன. அதன் பின்னர் அப்பாதையூடாக ரயில் சேவை இடம்பெற்றது எனவும் அறிவிக்கப்பட்டது. (எ-க)

# கொங்கோவில் சிறுவர் போராளிகள் அரசிடம் ஆயுதங்களை ஒப்படைப்பு

## 'யுனிசெவ்' தெரிவிப்பு



கின்ஷாஸா, ஏப்.28

மேற்கு ஆபிரிக்க நாடான கொங்கோவில் சுமார் 3 ஆயிரம் சிறுவர் போராளிகள் தங்களிடமிருந்த ஆயுதங்களை இத்தூரி மாகாண அரசிடம் ஒப்படைத்தனர் என 'யுனிசெவ்' அமைப்பு தெரிவித்துள்ளது.

கொங்கோவில் இடம்பெறும் உள்நாட்டுக் கலவரங்களிலும் கிளர்ச்சிவாத அமைப்புகளிலும் ஆயுதந்தாங்கி போரிடும் லட்சக் கணக்கான சிறுவர் போராளிகளே ஆயுதங்களை மேற்படி இத்தூரி மாகாண அரசிடம் ஒப்படைத்துள்ளனர்.

ஆயுதங்களை ஒப்படைத்த சிறுவர் போராளிகளில் 600 சிறுமிகளும் அடங்குவர் என 'யுனிசெவ்' அமைப்பின் குழந்தைகள் துறை அதிகாரி டிரிஷ் ஹிடில்ஸ்டன் தெரிவித்தார்.

சிறுவர் போராளிகள் அவர்களது இந்த துரதிஷ்ட நிலையிலிருந்து மீண்டும் அவர்களது வீடுகளுக்குச் செல்லவேண்டும். எனவே, அவர்களை கிளர்ச்சிவாத அமைப்புகளில் இருந்து விடுவிக்க வேண்டும் என கிளர்ச்சிவாத அமைப்புகளிடம் ஐ.நா. வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# லெபனானில் நிலைகொண்ட சிரிய படை முற்றாக வாபஸ்

லண்டன், ஏப்.28

லெபனான் - சிரிய எல்லைப்பகுதி நகரான பெக்கா பள்ளத்தாக்கில் நடைபெற்ற ஒரு பிரியாவிடை வைபவத்தைத் தொடர்ந்து லெபனானில் நிலைக்கொண்டிருந்த சிரியாவின் கடைசிப் படையினர் நேற்றுமுன்தினம் அங்கிருந்து வெளியேறினர்.

1976 ஆம் ஆண்டு லெபனானில் ஆரம்பித்த உள்நாட்டுக் கலவர காலத்தின் போது அங்கு நிலை கொண்ட சிரிய படை 29 ஆண்டுகளின் பின்னர் லெபனானைவிட்டு வெளியேறியுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடுமையான சர்வதேச அழுத்தம் மற்றும் பெய்ரூட்டில் நடந்த எதிர்க்கட்சிகளின் போராட்டம் என்பனவற்றைத் தொடர்ந்து இந்த படை வாபஸ் பெறும் நடவடிக்கைகள், லெபனான் நாட்டின் புதிய சகாப்தத்திற்கான ஆரம்பம் என செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார். (க-8)

# நேபாள முன்னாள் பிரதமர் பகதூர் டூபா ஜியானேந்திரா அரசால் மீண்டும் கைது!



காத்மண்டு, ஏப்.28

நேபாளின் முன்னாள் பிரதமர் ஷேர் பகதூர் டூபா நேற்று கைது செய்யப்பட்டார்.

லஞ்ச ஊழல் விசாரணைக்குழு முன் ஆஜராக மறுத்ததைத் தொடர்ந்தே அவர் கைதுசெய்யப்பட்டார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுமார் 50 பொலீஸார் நேற்றுக்காலை முன்னாள் பிரதமரின் வீட்டுக்குள் புகுந்து அவரைக் கைது செய்தனர் என்றும்-

கைது செய்யப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னரே, அமைச்சர் தான் கைது செய்யப்படபோவது குறித்து அறிந்து வைத்திருந்தார் என்றும் -

நேபாளி காங்கிரஸ் கட்சி உறுப்பினரான மினேக்ட்ரா ரிஜால் வெளிநாட்டு செய்தி நிறுவனமொன்றுக்குத் தெரிவித்தார்.

குடிதண்ணீர் ஒப்பந்த திட்ட விசாரணை ஒன்றுக்காக கடந்த புதன்கிழமை லஞ்ச ஊழல் விசாரணைக்குழு முன் ஆஜராகும்படி முன்னாள அமைச்சருக்கு அழைப்பாணை விடுவிக்கப்பட்டிருந்தது.

லஞ்ச ஊழல் விசாரணைக்குழுவின் அழைப்பாணையை டூபா புறக்கணித்ததைத் தொடர்ந்தே மேற்படி கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முன்னாள் பிரதமர் ஷேர் பகதூர் டூபா தலைமையிலான அரசைக் கலைத்து, மன்னர் ஜியானேந்திரா ஆட்சிப் பொறுப்பை முழுமையாக ஏற்றார்.

மாவோ தீவிரவாதிகளை ஒழிக்க - கட்டுப்படுத்த பிரதமர் அரசு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று குற்றஞ்சாட்டியே மன்னர் மேற்படி அரசைக் கலைத்தார்.

மன்னர் ஆட்சிப் பொறுப்பேற்றதன் பின்னர் முன்னாள அமைச்சர்கள், அரசியல கட்சித் தலைவர்கள் ஆகியோருக்கு எதிராக லஞ்ச ஊழல் விசாரணைகள் தீவிரமாக மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# பிலிப்பைன்ஸில் முதலிட சீனா முன்வந்தது

மணிலா, ஏப்.28

சீனா, பிலிப்பைன்ஸில் முதலீட்டை மேற்கொண்டு அந்த நாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு கடன்வழங்க முன் வந்துள்ளது.

உலக அரங்கில்

பிலிப்பைன்ஸின் உட்கட்டமைப்பு வசதியையும், சுரங்கத்தொழிலையும் அபிவிருத்தி செய்வதற்கு சீனா 160 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கும் என சீன ஜனாதிபதி ஹூஜிந்தாவோ தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸுக்கு சென்ற சீனக்குழுவினர் 110 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான 16 முதலீட்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். தென்கிழக்காசிய நாடுகளில் உறவுகளை விருத்தி செய்து சீனா வளர்ந்து வரும் அதன் பொருளாதார வர்த்தக முயற்சிகளுக்கு சந்தை வாய்ப்புகளை தேடுவதற்கு முனைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் - பிலிப்பைன்ஸின் ரயில்வே திட்டமொன்றுக்கு சலுகை கடனாக 50 கோடி அமெரிக்க டொலரை வழங்கவும் சீனா இணங்கியுள்ளது. (க-8)

# மலேசியப் பாடசாலைகளில் தமிழ் விருப்பத்துக்குரிய பாடமாக அறிமுகம்

## மலேசியப் பிரதமர் அறிவிப்பு

கின்ஷாஸா, ஏப்.28

மலேசியப் பாடசாலைகளில் தமிழை ஒரு விருப்பத்துக்குரிய பாடமாக அறிமுகப்படுத்தப் போவதாக மலேசியப் பிரதமர் அப்துல்லா அமது படாவி தெரிவித்துள்ளார்.

பல இனமக்கள் வாழும் நாடான மலேசியாவில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் முகமாகவே தமிழ் உட்பட சிறுபான்மையின மொழிகளையும் விருப்பப்பாடமாக சேர்க்க மலேசிய அரசு தீர்மானித்துள்ளது என அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது:-

மலேசியாவின் தேசிய மொழியான மலாய் மொழியுடன் தமிழ் மற்றும் மண்டாரின் மொழியும் கற்பிக்கப்படும்.

தேசிய பாடசாலைகளில் பஹாஷா மலாயு மற்றும் மிலாய் மொழிகள் மட்டுமே கற்பிக்கப்படுவதால் சீனர் மற்றும் இந்தியர்கள் தங்களது தாய்மொழியை கற்றுக்கொள்ள முடிவதில்லை.

அவர்களும் தாய்மொழிகளைக் கற்றுக் கொள்ளவேண்டும். இந்த நோக்கிலேயே அரசு இத்திட்டத்தை செயல்படுத்துகிறது.

தமிழ் மற்றும் மண்டாரி மொழிகள் இன்றைய சூழ்நிலையில் அவசியமானதொன்றாக கருதப்படுகின்றது. நிதியுதவி வழங்கப்படும் ஆயிரத்து 200 பாடசாலைகளில் அதிகளவு மண்டாரி மொழிகள் மட்டுமே கற்றுக்கொள்ளப்படுகிறது.

மலேசியாவில் 500 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளை இந்தியர்கள் நடத்துகின்றனர் அங்கு தமிழ் கற்றுக்கொடுக்கப்பட்டாலும் குறைந்தளவு நிதியுதவிகளே வழங்கப்படுகின்றன.

இந்தியர்களும், சீனர்களும் அவர்களால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்புகின்றனர். சில தேசியப் பாடசாலைகளிலும் தாய்மொழிகள் கற்பிக்கப்படுகின்றன.

- இவ்வாறு ஒரு வகுப்புக்கு சுமார் 15 மாணவர்களுக்கு தாய்மொழி கற்பிக்கப்படுகிறது என்று அவர் கூறினார். (க-8)

# கேரளாவில் நிலச் சரிவு 9 பேர் புதைந்து மரணம்!

இஸ்லாமாபாத், ஏப்.28

இந்திய கேரள மாநிலத்தில் காசர்போடு மாவட்டத்தில் திடீரென ஏற்பட்ட நிலச்சரிவினால் 9 பேர் உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

காசர்கோடு மாவட்டத்தில் மூலியார் எனும் இடத்தில் அணைக்கட்டுப் பணியின் போதே நேற்றுமுன்தினம் இந்த நிலச்சரிவு ஏற்பட்டதென தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலச்சரிவின் போது கட்டட ஒப்பந்தக்காரரும் தொழிலாளிகளுமே உயிரிழந்தனர் என்றும் -

ஒருவர் மண்ணுக்குள் புதைந்து காணாமல் போயுள்ளதனால் இன்னும் மீட்பு நடவடிக்கையில் மீட்புப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த மண்சரிவின் போது மயிரிழையில் மூவர் உயிர் தப்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-8)

# சுமாத்திராவில் நில நடுக்கம்

டாக்கா, ஏப்.28

இந்தோனேஷியாவின் அருகிலுள்ள சுமாத்திரா தீவில் நேற்றுமுன்தினம் அதிகாலை லேசான நில அதிர்வு ஒன்று ஏற்பட்டதென நில நடுக்க ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

ரிச்டர் அளவு கோலில் 5.1 புள்ளியாக பதிவாகியிருந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-8)

# லல்லு மீதான தாக்குதல் குறித்த குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை

## வாஜ்பாய் 'தெரிவிப்பு

புதுடில்லி, ஏப்.28

குஜராத் ரயில் விபத்தைப் பார்க்கச் சென்றபோது தன்மீது தாக்குதல் நடத்தச் சங்கப் பரிவார அமைப்புகளே காரணம் என இந்திய ரயில்வே அமைச்சர் கூறியுள்ளமை எதுவித ஆதாரமுமற்றவை. எனவே, அவர் பதவி விலகவேண்டும் என இந்திய முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்றுமுன்தினம் நடந்த ப.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் கூட்ட முடிவின் பின்னர் செய்தியாளர்களுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது:-

பாரதீய ஜனதாக் கட்சி மற்றும் சங்கப் பரிவார அமைப்புகளுக்கு எதிராக ரயில்வே அமைச்சர் கூறியுள்ள குற்றச்சாட்டுக்கள் எதுவித ஆதாரமும் இல்லாதவை.

அவர் தெரிவித்துள்ள புகார் குறித்து நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை அறிக்கை செய்யப்போவதாக உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல் அறிவித்திருந்தார். ஆனால், அவரது குற்றசாட்டுகள் ஆதாரமற்றவை என்பதனால் அறிக்கை எதனையும் அவர் தாக்கல் செய்யவில்லை.

பொய் புகார் கூறியுள்ள வல்லுபிரசாரத்தைப பதவியிலிருந்து நீக்க வேண்டும். அவரது குற்றச்சாட்டுகள் கடும் ஆட்சேபத்திற்குரியவை.

சங்கப் பரிவார அமைப்புகளின் புகழுக்கு களங்கம் ஏற்படுத்தக்கூடிய வகையிலான இந்தக் குற்றச்சாட்டுகளைக் குறிப்பிலிருந்து அகற்றவேண்டும்.

தற்போது நாடாளுமன்றத்தில் நிகழும் சம்பவங்கள் ஜனநாயக நடைமுறைகளுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்று அவர் கூறினார். (க-8)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head office
No.500, Galle Road.
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86, PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14, New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47, Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ் ⇆ கொழும்பு
யாழ் ⇆ திருகோணமலை ⇆ கொழும்பு



ஜேர்மனியின் கூபர்க் நகரில் நடைபெறும் பொம்மை கண்காட்சியில் விதவிதமான பொம்மைகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. ஜேர்மன் கலைஞர் ஹெர்மான் என்பவர் புதிய பாப்பரசர் 16 ஆம் பெனடிக்ற் பதவி ஏற்றதை நினைவு கூரும் வகையில் தான் தயாரித்துள்ள கரடிக்குட்டி பொம்மைகளுக்கு பாப்பரசரின் மாதிரி உடையை அணிவித்துள்ளார். இவ்வாறு 265 கரடிக்குட்டி பொம்மைகளை உருவாக்கி உள்ளார். பாப்பரசரின் உடையில் ஒரு பொம்மையையே படத்தில் காண்கிறீர்கள். (8)



# நீதி நியாயத்தைச் சமமாக அணுகுதல்: பிராந்தியக் கூட்டம் தென்மராட்சியில்

தென்மராட்சி,ஏப்.28

தென்மராட்சிப் பிரதேசத்திற்கான நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்டத்தின் பிராந்தியக் கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி பி.ப. 2மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனமும் அரசமைப்பு விவகார, தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சும் ஒன்றிணைந்து இக்கூட்டத்தினை நடத்தவுள்ளன.

கருத்திட்டத்தின் அறிமுக உரையினைத் தேசியக் கருத்திட்டக் கூட்டிணைப்பாளர் திருமதி விவேகா சிறிவர்த்தன த சில்வாவும் - கருத்திட்டத்திற்கான அரசமைப்பு விவகார அமைச்சின் பங்களிப்பு பற்றி அமைச்சின் செயலாளர் திருமதி மல்காந்தி விக்கிரமசிங்கவும் உரையாற்றவுள்ளனர். இக்கூட்டத்தில் கலந்துகொள்ள பிரதேசத்தைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் உட்படப் பலர் அழைக்கப்பட்டுள்ளனர். (த-117)


## பாலின் விலை அதிகரிப்பு

எமது சங்கம் 01.05.2005 ஆம் திகதியிலிருந்து ஒரு லீற்றர் பாலின் விலை ரூபா 32/- ஆக அதிகரிக்கவுள்ளது.

தற்போதைய விநியோகச் செலவீனங்கள் அதிகரிப்புக் காரணமாக இவ்விலை அதிகரிப்பதானது தவிர்க்கமுடியாதுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (சி-42545)(32-26-14-15)

## UNIT

இனி இப்போதைக்கு இல்லை இச்சலுகை

எமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க

UNIT OFFER 30.04.2005 வரை நீடிக்கப்பட்டுள்ளது

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கணனியுடனும்

COMPUTER TABLE/PRINTER/
SCANNER/UPS and Filter Glass,
Dust Cover & Mouse Pad Totally Free

ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

Possible which impossible

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.

## இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம் புதிய கணனி வகுப்புகள் ஆரம்பம்

Ms Office - (Dur- 4 months)----- Fees: 1500/-
Desk Top Publishing - (Dur. 4 months)----- Fees: 1500/-
Children programe - (Dur. 5 months)----- Fees: 500/-
Word Typing
Paint
Games

- பதிவுக்கட்டணம் இல்லை.
- கட்டணங்கள் தவணை அடிப்படையில் செலுத்தலாம்.
- புதிய பிரிவுகள் ஆரம்பம்: 01.05.2005 மாலை 5.00மணி

இணுவில் பொதுநூலகம்,
பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி,
இணுவில். (44727)(32-14-15-26)


## திருநெறியத் தமிழ் மறைக்கழகம் விசேட அறிவித்தல்

ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் திருநெறிய தமிழ் மறைக்கழகம் நடத்தும் பண்ணிசை, மனனப்போட்டி விண்ணப்ப முடிவுதிகதி 01.05.2005 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிகள் யாவும் முன்னர் குறிப்பிட்ட திகதியின்படி 15.05.2005 ஞாயிற்றுக்கிழமை மு.ப.8.30 மணிக்கு இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் மணிமண்டபத்தில் நடைபெறும். மேற்படி மன்றம் வீணை, வயலின் வகுப்புகளை நடத்தவுள்ளதால் இதில் பங்குபற்ற விரும்புவோர் பெயர், முகவரியை இணுவில் பொது நூலகத்தில் பதிவு செய்யவும்.

தி.நெ.த.ம.கழகம்,
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில்,
இணுவில்.
(44728)(32-14-15-26)

## 24 ஆவது பிறந்தநாள் நினைவும் 11 ஆம் மாத நினைவஞ்சலியும்



### நடராசா தயாளன் (சூரன்)

மண்ணில் நீ பிறந்து இன்று 24 வருடங்கள்
விண்ணில் சென்று பதினொரு மாதங்கள்
பாரினில் நீ செய்த சாதனைகள் பல பல
உன் நினைவு என்றும் எம்மனதில் நீங்காது
ஆன்மா சாந்திபெற இறையருளை வேண்டி
இறைஞ்சியே நிற்கின்றோம்.

குறுக்கு றோட்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (44718)(32-14-15-26)

என்றும் நீங்கா நினைவுடன்:
அண்ணன் - தயாபரன் (குடும்பம்),
சி.தர்மலிங்கம் (குடும்பத்தினர்).

## பாதணி உற்பத்தியாளர்களுக்கு வதிரியில் கூட்டம்

குடத்தனை,ஏப்.28

பாதணி உற்பத்தியாளர்களுக்கான கூட்டமொன்று நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு வதிரி தமிழ்மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அனைத்துப் பாதணி உற்பத்தியாளர்களையும் கலந்துகொண்டு நன்மை அடையுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (3-78)

## ஊடகவியலாளருக்கான இரண்டாம் கட்டப் பயிற்சி பிற்போடப்பட்டது

தென்மராட்சி,ஏப்.28

தேசிய அரசறிவியல் நிறுவனத்தினால் யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு நாளையும் நாளைமறுதினமும் நடத்தப்படவிருந்த இரண்டாம் கட்டப் பயிற்சி வகுப்புகள் பிற்போடப்பட்டுள்ளன.

கொழும்பில் நடைபெறவுள்ள மே தின நிகழ்வுகளை முன்னிட்டு இப்பயிற்சி வகுப்புகள பிற்போடப்பட்டுள்ளன என்று யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் யோகராஜன் அறிவித்துள்ளார்.

யாழ்மாவட்ட ஊடகவியலாளர்களுக்குக் கடந்த மார்ச் மாதம் 16, 17ஆகிய திகதிகளில் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(த-117)

## மானிப்பாய் பகுதிக்கு வலுக்குறைந்த மின்சாரம்

நவாலி,ஏப்.28

மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதிப் பகுதிக்கு வலுக்குறைந்த மின்சாரம் வழங்கப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மாலை 6 மணிக்குப் பின்னர் மின் குமிழ்கள மங்கிய நிலையிலேயே ஒளிர்கின்றன எனவும் 7மணிக்குப் பின்னர் 'ரியூப் பல்ப்'புகள் முற்றாக எரிய மறுக்கின்றன எனவும் தெரிவித்தனர்.

இதனால், மின் பாவனையாளர்கள் பல கஷ்டங்களையும் சிரமங்களையும் எதிர்நோக்குவதுடன், மாணவர்கள் விளக்கு வெளிச்சத்தில் தமது கல்வியைத் தொடரவேண்டிய நிலைக்குத தள்ளப்பட்டுள்ளனர்.

இவற்றைச் சீர்செய்ய சம்பந்தப்பட்டவர்கள உடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று இப்பகுதி மக்கள் கேட்கின்றனர்.

(த-100)

## சிற்ப ஆக்கத்திறன் போட்டி முடிவுகள்

நல்லூர், ஏப்.28

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நுண்கலைத் துறையினரால் நடத்தப்பட்ட சிற்ப ஆக்கப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதலாம் இடத்தைப் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இ.ராஜ்குமாரும் இரண்டாமிடத்தை ம.பார்த்தீபனும் மூன்றாவது இடத்தை சங்கானையைச் சேர்ந்த ஏ.கே.பிரசாத்தும் பெற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கான பரிசில் தொகையாக முறையே மூவாயிரம், இரண்டாயிரம், ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

யாழ். ஒஸ்மானியக் கல்லூரியைச் சேர்ந்த என்.வீ.எஸ்.நூர்ஜகான், சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த க.சுரேன் ஆகியோர் சான்றிதழ் பெறுவதற்காகத் தெரிவாகினர்.(த-111)

## அபிவிருத்திக் குழுக்கூட்டம்

குடத்தனை, ஏப்.28

கரவெட்டி பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நாளை 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கரவெட்டி பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளின் அபிவிருத்திப் பணிகள் மற்றும் நெல்லியடி நகர விஸ்தரிப்புப் பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-78)

## ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.28

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையின் ஆதரவுடன் ஆன்மீக நிகழ்வின் 125 ஆவது தொடரை நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'அறநெறி' என்னும் தலைப்பில் இ.பிரைணாவும் 'கந்தனின் மகிமை' என்னும் தலைப்பில் ச.ஜெயவதனியும் 'உண்மையே உயர்வு' என்னும் தலைப்பில் யோ.நிருஜாவும் 'உண்மை வழிபாடு' என்னும் தலைப்பில் சி.கிருத்திகாவும் பேசுவர்.

தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவிகளின் குழுப்பாடலும் மாணவிகளான ஞா.வைஷ்ணவி, நா.கார்த்திகா, ஜெ.லோஜனா ஆகியோரின் பண்ணிசையும் இடம்பெறும். (த-202)


## புதிய பிரிவுகள் ஆரம்பம் External Degree

2005, 2006 பிரிவுகளுக்கானது
(Jaffna University)

G.A.Q. | 1st in Com. | B.A. | B.Com.

ஆரம்பம்: 30-04-2005 9.30 a.m.

aat (Sri Lanka)
Stage II & State III

Medium - Tamil & English Exam - August

ஆரம்பம்: 30-04-2005 11.30 a.m Saturday

Fuather Details
Director:
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road
(Near Commercial Bank),
Jaffna. (சி-42538)(21-14-15-26)


## OBITUARY

### JOHN THAMBIRATNAM CHELLIAH

(Retd.Vice Principal, St.John's college, Jaffna)

Beloved husband of Saraswathy Chelliah (Retd. Principal, Chundikuli Girls' College), loving father of Indrani, father - in - law of Navaratnarajah, grandfather of Yemi and Denu, son of late Richard and Lucy Chelliah of Uduvil, brother of late Daisy, Lily and Mary, entered glory on 25.04.2005 in Canada. Funeral will take place on Saturday 30th April at 2.00 pm in Canada. Please accept this intimation.

Mrs.G.E.S.Chelliah
83 Parkwoods Village Drive,
Apt.304 Don Mills,
Toronto M3A3R8, Canada.
T.P.: 0014164499512.

G.R.Kirubairajah
(Nephew)
TP: 222-2446

(44717)(32)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 07 - 01 - 1982



விண்ணில் 01 - 05 - 2002

### செல்வன் கந்தசாமி தினேஷ்

(தீபன்)

அன்னிய நாடு செல்ல நினைத்தாயோ?
அரைவழியில் யமன் வந்தானோ?
தீபமாக எமது குடும்பத்தில் ஒளி கொடுத்தாயோ?
தீபனே தீபம் அணைந்ததோ?
எண்ணியும் பார்க்கவில்லை இதயத்தில்
இடி போல ஏங்க வைத்தாயோ – நீ மறைந்து
ஆண்டுகள் மூன்றாகி விட்டதே – ஆனாலும்
நெஞ்சம் அணையவில்லையே!

ஆ.கந்தசாமி,
அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு.
(44700)(21-14-15-26)

அப்பா, அம்மா,
சகோதரர்கள் – ரமேஸ், சதீஸ், ரதீஸ்.
சகோதரி – கோகிலவாணி.

## மரண அறிவித்தல்

### திருமதி மேரி லோகநாயகி அருளானந்தசாமி

(செல்லாக்கா)



வல்வெட்டித்துறை, சிவபுர வீதியைப் பிறப்பிடமாகவும் "ராஜ்மஹால்', 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி லோகநாயகி அருளானந்தசாமி அவர்கள் 27-04-2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தசாமியின் அன்பு மனைவியும் A.G. செல்வராசா (செல்வம் எண்ணெய்க்கடை - திருநெல்வேலி), உலகராசா, யோசேப் இரத்தினராசா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வேஜினியா (ஜெயா), காலஞ்சென்ற தங்கராணி, றோகினி, புஸ்பராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

"ராஜ் மஹால்",
107, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம். (44732)(26-14-15)

தகவல்:
A.G. செல்வராசா
(செல்வம் - மகன்)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# புதிய மார்க்கத்தை நாடுவது நல்லது

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானம் தொடர்பாக இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சேர்ந்து உருவாக்கவேண்டிய பொதுக்கட்டமைப்பு தொடர்ந்தும் கானல் நீராகி வருகின்றது.

இந்தக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசு, புலிகள் ஆகிய இரண்டு தரப்புகளிடையேயும் பல சுற்றுப் பூர்வாங்கப் பேச்சுக்கள் அவையவற்றின் சமாதானச் செயலகங்களின் பிரதிநிதிகள் மூலம் நடத்தப்பட்டாயிற்று. பல ஆவணங்கள் பரிமாறப்பட்டுவிட்டன. பல யோசனைகள் குறித்துக் கலந்தாலோசிக்கப்பட்டுவிட்டது. இணக்கத்தை ஏற்படுத்தச் சில திருத்த யோசனைகளை அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினர் சமர்ப்பித்துவிட்டனர். அவற்றைத் தாங்கள் ஏற்றுக் கொள்கின்றனர் எனப் புலிகள் தெரியப்படுத்தியும் விட்டனர். ஆனாலும், பொதுக்கட்டமைப்பு விவகாரம் முன்நகர்வதாக இல்லை.

தனது உள்நாட்டு அரசியலில் தன்னுடைய தேவைகளை - இலக்குகளை - அடைவதற்காகப் பொதுக்கட்டமைப்பைப் பகடைக்காயாக்கி, காய்களை நகர்த்தி, அரசியல் சித்து விளையாட்டு நடத்திக்கொண்டிருக்கிறது இலங்கை அரசு. தென்னிலங்கை அரசியலில் பேரினவாதிகள் நடத்தும் இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டுக் காரணமாக, வடக்கு - கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோரின் அவதி - அவலம் - தொடர்கதையாக நீடிக்கின்றது.

ஏற்கனவே இரண்டு தசாப்த கால கொடிய யுத்தத்தினாலும் அதற்கு முற்பட்டகாலத்தில் இருந்து பேரினவாதிகளின் திட்டமிட்ட குடியேற்றங்கள் மற்றும் இன ஒழிப்பு, அடக்குமுறை நடவடிக்கைகளினாலும் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தில் அத்தகைய பாதிப்புற்ற மக்களுக்கு உடனடி, அவசர மனிதாபிமான உதவிகளோ மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளோ முன்னெடுக்கப்படவில்லை.

இந்த யுத்தநிறுத்த காலத்தில் - அமைதி முயற்சிகளுக்கான சமயத்தில் - முன்னையகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகளை நிறைவுசெய்வதற்கான வழிவகைகள் குறித்துப் பேசப்பட்டுக்கொண்டிருந்தவேளையில்தான் கடந்த டிசெம்பரில் ஆழிப்பேரலையின் அதிரடித் தாக்குதல் நிகழ்ந்தது.

சுமார் இருபது ஆண்டு காலக் கொடூர யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்பேசும் மக்களுக்கு அவசரமாக நிறைவுசெய்ய வேண்டிய மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகசபை ஒன்றை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது.

இப்போதுபோல அந்த ஏற்பாட்டையும் செயலுருப் பெற விடாமல் - அதற்கான முயற்சிகள் பலன்தரக்கூடியதான ஏற்பாடுகளைச் செய்யாமல் - சுமார் இரண்டு ஆண்டு காலம் இழுத்தடித்தது அரசு. அந்நிலையில்தான் ஆழிப் பேரலைத் தாக்கம் நிகழ்ந்தது. அத்தாக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து மக்களை மீட்பதற்கான அவசர - அவசிய - பணிகளை முன்னெடுப்பதற்குப் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டு, அது இப்போது இழுத்தடிக்கப்படுகின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான மூலவிடயங்களைச் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் ஆற, அமர இருந்து ஆராய்ந்து ஒருமுடிவை எட்டுவதற்குக் காலஞ்செல்லும் என்பதால் அதற்கிடையில் தமிழ்பேசும் மக்களின் உடனடித் தேவைகள், பிரச்சினைகள் போன்றவற்றைக் கவனிப்பதற்கு இடைக்கால நிர்வாகசபை அமைக்கப்படவேண்டும் என்று சகல தரப்புக்களும் இணங்கின. அதற்கான பேச்சு - முயற்சி - நடந்துகொண்டிருந்த சமயத்தில் ஆழிப்பேரலை வந்ததால் பொதுக்கட்டமைப்புக் குறித்துப் பேசவேண்டியதாயிற்று. இதுதான் இன்றைய உண்மைநிலை. ஆனால், தென்னிலங்கை இன்று என்னசெய்கின்றது?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான மூலப்பேச்சுகளுக்கு ஒருதேவையே இங்கு இப்போது இல்லாததுபோன்றும் - இடைக்காலத் தீர்வாக 'வடக்கு - கிழக்கு இடைக்கால அதிகாரசபை' ஒன்றை நிறுவும் கட்டாயமும் இல்லாதது போன்றும் - ஏதோ பொதுக்கட்டமைப்புப் பிரச்சினையே நாட்டில் தீர்க்கப்படவேண்டிய ஒரேயொரு பெரிய விவகாரமாக இருக்கின்றது என்ற மாதிரியும் - புதியதோர் தொனியில் செயற்பட்டு வருகின்றது. அத்தகைய மாயத் தோற்றச் சிந்தனைப் போக்கைச் சர்வதேச மட்டத்திலும் ஏற்படுத்தத் தென்னிலங்கை அரசும் அங்குள்ள அரசியல் தலைமைகளும் அரசியல் முறைமைகளும் தற்போது முயன்று வருகின்றன.

பொதுக்கட்டமைப்பு என்ற விவகாரத்தைத் தீர்க்கப்பட முடியாத ஒரு பெரிய பிரச்சினையாக்கி, அதுகுறித்துக் குழப்பத்தை ஏற்படுத்திக் காலத்தை இழுத்தடிப்பதன் மூலம், 'இடைக்கால அதிகாரசபை' மற்றும் இனப் பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காண்பதற்கான மூல விடயங்கள் பற்றிய பேச்சுகள் போன்ற விவகாரங்களே நாட்டில் இல்லை என்ற நிலையை ஏற்படுத்தத் தென்னிலங்கை அரசு முயல்கிறது.

அதாவது, நாட்டின் மூலப்பிரச்சினையை மூடிமறைப்பதற்காகப் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தைப் பெரிய சர்ச்சையாக்கி, ஊதிப்பெருக்கவைத்து நாடகமாடுகின்றது தென்னிலங்கை அரசு.

இந்தச் சதித்திட்டத்திற்குத் தமிழர் தரப்புப் பலியாகி விடக்கூடாது.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தீர்வு ஒன்றை எட்டுவதற்குக் காலவரையறை செய்து, விடயத்தை முன்னெடுத்துத் தீர்ப்பதற்குத் தமிழர் தரப்பு முயலவேண் டும். அந்தக் காலவரையறைக்குள் விவகாரம் தீர்க்கப்படாவிட்டால் 'கிட்டாதாயின் வெட்டென மற' என்பது போல விடயத்தைக் கையாண்டு, இவ்விவகாரத்தில் உரியதை அடைவதற்கு வேறுவழிகளை நாடுவதே நல்லது:

# யாழ்.ஆஸ்பத்திரிப் பணியாளருக்கு புதுவிதக் காய்ச்சல் பரவுகின்றது!

## இதுவரை 6 பேர் பீடிப்பு! தடுப்பு நடவடிக்கை தீவிரம்!!

யாழ்ப்பாணம்.ஏப்.28

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒரு புதுவிதமான காய்ச்சல் பரவிவருகின்றது.

இந்தப் புதுவிதமான காய்ச்சலினால் வைத்தியர்களும் தாதிமார்களுமே பெரும்பாலும் பீடிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி எஸ்.சிவன்சுதனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

இத்தகைய ஒருவிதக் காய்ச்சல் பரவுவது உண்மைதான்.

இது பெரும்பாலும் நெருப்புக் காய்ச்சலாகத்தான் இருக்கும் எனக் கருதுகின்றோம். இந்தக் காய்ச்சலை குளிகைகளால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

ஊசிகள் மூலமே கட்டுப்படுத்த முடியும். எனவே, அது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரைக்கும் மூன்று வைத்தியர்களும் மூன்று தாதிமார்களும் இந்தக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நீர், உணவு போன்றவற்றாலே இந்த நோய் பரவும் வாய்ப்பு உள்ளது.

எனவே, வைத்தியசாலையில் பணிபுரிபவர்கள் மிக அவதானத்துடன் விழிப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தற்போது வைத்தியசாலையில் பணிபுரிபவர்களுக்குத் தினமும் இந்த நோய்க்கான தடுப்பு மருந்து வழங்கப்படுகிறது.

பெரும்பாலும் இந்தக் காய்ச்சல் நோயாளிகளிடமிருந்தே வைத்தியர்களுக்கும், தாதிமார்களுக்கும் பரவி இருக்கலாம்.

இது தொடர்பாக வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகள் [illegible] வித அச்சமும் கொள்ளத்தேவையில்லை.

இது மேலும் பரவாமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். (த-13)

# வார்ட்டுகளுக்கு 'லிப்ற்' வசதி அடுத்தமாதம் வந்து சேரும்!

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.போதனா வைத்தியசாலையின் 7 ஆம், 8ஆம், 9 ஆம், 10 ஆம் வார்ட்டுகளுக்கான 'லிப்ற்' (மின்தூக்கி) இயந்திரம் மே மாதம் இங்கு எடுத்துவரப்படவுள்ளது.

இத்தகவலை வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.பத்மநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

மேற்படி விடுதிகளுக்கு 'லிப்ற்' வசதி இன்மையால் நோயாளிகள் மாடி வழியாகத் தூக்கிச் செல்லப்படுகின்றனர். இதனால் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இது தொடர்பாக ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளீர்களா? என்று கேட்டதற்கே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மேற்படி நோயாளர் விடுதிகளுக்கான 'லிப்ற்' இயந்திரத்தைப் பொருத்துவதற்கான ஆயத்த வேலைகள் முடிவடைந்த நிலையில் உள்ளன. 'லிப்ற்'றுக்கான இயந்திரம் இங்குவந்து சேரவில்லை. இதனால்தான் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையிடம் தொடர்புகொண்டு கேட்டபோது அவர்கள் மே மாதத்தில் இயந்திரம் எடுத்து வருவதாகவும் அந்த இயந்திரம் பொருத்தும் பணியை மே மாத நடுப்பகுதியில் நிறைவு செய்து தருவதாகவும் உறுதியளித்துள்ளனர் - என்றார். (த-13)

# சரசாலையில் இன்று 'வேரடிமண்' நிகழ்வு

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டப்பிரிவு சரசாலைப் பகுதிப் பெண்களுடன் இணைந்து வேரடிமண் நிகழ்வை நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று பிற்பகல் ஒரு மணிக்கு மட்டுவில் கமலாசனி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜும் சிறப்பு விருந்தினர்களாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவன நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் தே.தேவானந்த், சரசாலை சரஸ்வதி வித்தியாலய அதிபர் தே.ஜெமனி, மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலைவாணி ஆகியோரும் கலந்துகொள்வர். (த-202)

# ஆசிரியர் தொழிற்சங்கங்களின் மேதினக் கூட்டம் கொழும்பில்

அச்சுவேலி,ஏப்.28

ஆசிரியர்களின் உரிமைகள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யக்கோரி இலங்கையில் உள்ள எட்டுக்கு மேற்பட்ட முன்னணி ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கூட்டமாக இணைந்து கொழும்பில் மேதினக் கூட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளன.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம், தரம் பெற்ற அதிபர்கள் சங்கம் இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், இலங்கை சுதந்திர ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட எட்டுக்கும் மேற்பட்ட ஆசிரியர் சங்கங்கள் என்பன இணைந்து கூட்டாக மேதினத்தைக் கொண்டாடத் தீர்மானித்துள்ளன.

இலங்கை கல்வி ஊழியர் சிக்கனக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இந்த மேதினக் கூட்டத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (த-11)

# 'கலைமுகம்' சஞ்சிகை வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம்,ஏப்.28

திருமறைக் கலாமன்றத்தின் காலாண்டு வெளியீடான 'கலைமுகம்' சஞ்சிகையின் ஜனவரி - மார்ச் மாத இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் நீ.மரியசேவியர் அடிகள், தார்மிகி, செல்வி திருச்சந்திரன், வி.பி. தனேந்திரா, யோசப்பாலா, யோ.ஜோண்சன் ராஜ்குமார், க.தியடோர் பாஸ்கரன் ஆகியோரின் கட்டுரைகளும் -

சோ.பத்மநாதன், நீர்கொழும்பு தருமலிங்கம், மு.யாழவன், தானாவிஷ்ணு, எஸ்.யோகலிங்கம், அல்வி, யோ.ஜெஸ்ரின் யோவான், ஜெனோ, சூரியநிலா, எஸ்.எ. அருட்செல்வன் ஆகியோரின் கவிதைகளும் -

ந.சத்தியபாலன், செம்பியன் செல்வன், சி.கதிர்காமநாதன், தபின் ஆகியோரின் சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன.

இவற்றுடன் வேறுபல அம்சங்களையும் தாங்கி இந்த இதழ் வெளிவந்துள்ளது. (த-202)

# செலிங்கோ காப்புறுதி நிறுவன கிளை நெல்லியடியில் திறப்பு

செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தின் கிளை ஒன்று நேற்று நெல்லியடியில் திறந்துவைக்கப்பட்டது.

நேற்று நண்பகல் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு யாழ். கிளையின் பிராந்திய முகாமையாளர் எஸ்.தவசீலன் தலைமை வகித்தார்.

பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் மேளதாளங்களுடன் நிகழ்விடத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ஏர்வின் ஜெயவர்த்தனா கிளையை நாடாவெட்டி திறந்துவைத்தார்.

மங்கள விளக்கினை ஏர்வின் ஜெயவர்த்தன, செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தின் தொழில்நுட்ப முகாமையாளர் ஆனந்த குலதுங்க உட்படப் பலர் ஏற்றிவைத்தனர். ஏர்வின் ஜெயவர்த்தனாவுக்கு வாடிக்கையாளர் ஒருவர் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார். நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் செலிங்கோ நிறுவன உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (த-7)

# கொழும்பில் கல்வி கற்ற இரு மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து கற்க அனுமதி

## சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டதால் நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப்.28

ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் தாயை இழந்த கொழும்பு சென்.தோமஸ் கல்லூரியில் கல்வி பயிலும் இரு மாணவர்களை யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் கல்வியைத் தொடர யாழ்.நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கந்தையா ஆசைப்பிள்ளை ஜீவநாதன் என்பவர் செய்த முறைப்பாட்டை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் ஜீவானந்தம் சாமுவேல் தேவகுமாரன் (வயது- 14), ஜீவானந்தம் சொலமன் பிரேமகுமாரன் (வயது -12) ஆகிய மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்திற்கொண்டு இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

பிரஸ்தாப இரு மாணவர்களின் தாயாரான திருமதி ஜீவானந்தம் மஞ்சுளா என்பவர் கடந்த ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி கொழும்பிலிருந்து ஹிக்கடுவைக்குச் சென்றுகொண்டிருந்த போது அப்பிரதேசத்தில் ஏற்பட்ட கடல் அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்து விட்டார் எனவும், இவர்களின் தந்தையார் கடந்த ஏழு வருடங்களுக்கு மேலாக இவர்களைக் கைவிட்டு வெளிநாட்டில் வசிப்பதாகவும், கொழும்பில் தமது தாயாருடன் தங்கியிருந்து கொழும்பு சென்.தோமஸ் கல்லூரியில் கல்வி பயின்று வந்த இவர்கள் தற்போது தாயை இழந்துள்ளமையால் அங்கிருந்து கல்வியைத் தொடர முடியாதுள்ளதாகவும், அவர்களை யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் கல்வியைத் தொடர மன்று அனுமதிப்பதுடன், மாணவர்கள் இருவரையும் அவர்களது தாயின் மூத்த சகோதரரான கந்தையா ஆசைப்பிள்ளை ஜெகநாதன் என்பவரிடம் கையளிக்க வேண்டுமெனவும் முறைப்பாட்டுக்காரர் தமது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார்.

மாணவர்கள் இருவரும் தமது தாயாரை இழந்துள்ளமையால் அவர்கள் தமது மாமனாரான கந்தையா ஆசைப்பிள்ளை ஜெகநாதனின் பாதுகாப்பில் யாழ்ப்பாணத்தில் வாழவேண்டியிருப்பதைக் கவனத்திற்கொண்ட மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, குறித்த இரு பிள்ளைகளின் கல்லூரி விடுகைப்பத்திரம், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் உள்ளிட்ட சகல ஆவணங்களையும் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரிக்குச் சமர்ப்பிப்பதற்கெனக் கையளிக்குமாறு கொழும்பு சென்.தோமஸ் கல்லூரி அதிபருக்கும், மாணவர்களை அவர்கள் கொழும்பு சென்.தோமஸ் கல்லூரியில் கற்ற வகுப்பிலிருந்து எந்தவித தடங்கலுமின்றி கல்வியைத் தொடர்வதற்கு அனுமதிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளார். (8)

## நாளை

சித்திரை 16
வெள்ளிக்கிழமை
29.04.2005
திதி : பஞ்சமி
காலை 07.49 வரை
ஷஷ்டி
பின்னிரவு 05.27
நட்சத்திரம் : பூராடம்
பின்னிரவு 3.25 வரை
சுபநேரம் : 05.58 - 07.28
ராகுகாலம் : 10.28 - 11.58
(யாவும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

துன்பங்கள் ஏற்படுவது இயற்கை. அவற்றை எப்படிச் சந்திக்கிறோம் என்பதைப் பொறுத்தே வெற்றி தோல்விகள் அமைகின்றன. – பி.சி.கணேசன்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனைக்கு

புத்தூர் - சுன்னாகம் வீதியில் தெற்குப் பக்கமாக 600 மீற்றர் தூரத்தில் அச்செழு வடக்கில் 51 பரப்புத் தோட்டத்துடன் கிணறும் தென்னை மரங்களும் உள்ள காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.செல்வரத்தினம் 'தாயகம்' ஈவினை, புன்னாலைக்கட்டுவன். (44662)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969 இல் பிறந்த கனடா குடியுரிமையுடைய எஞ்சினியர் மணமகனுக்கு படித்த நற்குணமுள்ள அழகிய மணமகள் தேவை. தொடர்புக்கு 302/1, நாவலர் வீதி, உபதபாற்கந்தோர் அருகில் ஆனைப்பந்தி. T.P. 0777 570163. (44708)

யாழ.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 39 வயது, உயர்நிலைக் கனேடியப் பட்டதாரிக்கு 29 - 33 வயதிற்கு இடைப்பட்ட மணப்பெண் தேவை. மணமகன் கனேடியக் குடியுரிமை பெற்றவர் (தென்மராட்சி விரும்பத்தக்கது). தொடர்பு: திருமதி இ.சரவணமுத்து, திருமதி த.சின்னையா பிள்ளை, கேணியடி வீதி, மீசாலை மேற்கு. T.P.: 077-9084848 aasai 33@yahoo.ca (44586)

### கைமாறிவிட்டது

சுப்பிரமணியம் அச்சுதன் என்பவரது சைக்கிள் (லுமாலா) திருநெல்வேலிச் சந்தியில் கைமாறிவிட்டது. மாறி எடுத்தவர் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். இல.35, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி. T.P.: 021 4590254 (44715)

### பணிப்பெண் தேவை

சமையல் வேலைகள் நன்கு தெரிந்த அனுபவம் உள்ள 35 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட உடல் ஆரோக்கியம் உள்ள பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். உடனடியாக நேரில் தொடர்பு கொள்ளவும். P.T.பாலன், இல.45, சிவகுருநாதன் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 5989. (43284)

## வாராந்த நிகழ்வு

குடத்தனை ஏப்.28

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வில் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'முக்காலமும் தெளிந்த கண்ணனின் அருளாட்சி' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெறவுள்ளது. இந்தச் சொற்பொழிவினை சைவப் புலவர் திருமாறன் ஐயர் நிகழ்த்துவுள்ளார்.(த-78)


### விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

யாழ்.போன்சொப்

10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம் (A 43495)

THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆங்கில மூலம் பாலர் பாடசாலை - ஆங்கிலம் விக்னேஸ்வரன் ஆச்சாரி. தமிழ் தர்ஜினி

426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

TEL - 077 6751649 (44722)(21-17-15)


# நம்பிக்கையில்லாப் பிரேரணையை மே17இல் மீளக் கொண்டுவருவோம்

## மேல்மாகாண எதிர்க்கட்சித் தலைவர் உறுதி

மேல்மாகாணசபை அமர்வுகள் இப்போதைக்குப் பிற்போடப்பட்டாலும் மே மாதம் 17ஆம் திகதி சபை கூடும்போது முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மீண்டும் கொண்டு வருவோம். இதில் எந்த மாற்றமும் இல்லை. இவ்வாறு தெரிவித்தார் மேல் மாகாண சபையின எதிர்க்கட்சித் தலைவர் கீர்த்தி சிறி கஹட்டபிட்டி

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

மாகாணசபைகள் சட்ட வரைவுகளுக்கு அமையவே மேல்மாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை முன் வைக்கப்பட்டது. சபையின் நடைமுறைகளுக்கு ஏற்ப சபைச் செயலாளரிடம் பிரேரணை ஒப்படைக்கப்பட்டு நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி நிரலிலும் அது உள்ளடக்கப்பட்டிருந்தது.

முதலமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நிரூபிக்கக்கூடிய சகல ஆதாரங்களும் எம்மிடம் இருக்கின்றன. நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஜே.வி.பி.யினரும் ஆதரவு தரவுள்ளனர். முதலமைச்சரின் போக்கைக கண்டித்து ஜே.வி.பி குழுத் தலைவர் விசேட அறிக்கை ஒன்றையும் வெளியிட இருந்தார்.

ஜே.வி.பியினர் மட்டுமன்றி ஜனாதிபதியின் தலைமையிலான ஸ்ரீ.ல.சு.கட்சிப் பிரதிநிதிகள் பலரும் கூடப் பிரேரணைக்கு ஆதரவு தரவிருந்தனர். எமக்கு 80வீதமான ஆதரவு இருந்தது.

தோல்வியை ஜீரணிக்க முடியாமலேயே மேல்மாகாணசபை அமர்வுகளைப் பிற்போடும்படி ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். ஆளுநரும் அதைக்கேட்டு பொம்மை போன்று செயற்பட்டுள்ளார்.

முதலமைச்சர் ஒருவருக்கு எதிராக முறைபபடி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டிருக்கும் வேளையில் சபை அமர்வுகளைப் பிற்போடும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை. இதுதொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தி வருகின்றோம். ஜனாதிபதி மேல் மாகாண சபையை ஒத்தி வைத்ததுபோல் அதனைக் கலைத்து விடவும் திட்டமிடலாம். ஜனாதிபதிக்குத் தைரியம் இருந்தால் சபையைக் கலைத்து விட்டு மீண்டும் தேர்தலை நடத்தட்டும். அதில் நாம் வெற்றி பெறுவது உறுதி - என்றும் கூறினார்.

தமது ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்காக மேல்மாகாணசபை அலுவலகத்திற்குச் சென்ற சமயம் வழமைக்கு மாறாக சபை மண்டப வாயில் மூடப்பட்டு பூட்டுப்போடப்பட்டிருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

"பெருந்தொகையான பொலீஸாரும், இராணுவத்தினரும் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர். கொழும்பு மாவட்ட எம்.பி.மேர்வின் சில்வாவின் தலைமையில் குண்டர் கோஷ்டிகள் காணப்பட்டது. அதேவேளை, வடமத்திய மாகாண சபை முதலமைச்சர் பேர்ட்டி பிரேமலால் உட்பட நான்கு முதலமைச்சர்கள் மாகாண சபைக் கட்டடத்திற்குள் திரண்டிருந்தனர்.

"மேல்மாகாணசபை முதல்வர் எக்காரணம் கொண்டும் சபா மண்டபத்திற்குள் எங்களை அனுமதிக்கமுடியாது என்று கூறினார், ஆனால அதற்கான அதிகாரம் அவருக்கில்லை என்பதை தெளிவுபடுத்திய பின்னரே எம்மால் சபைக்குள செல்ல முடிந்தது. இவையெல்லாம் ஜனாதிபதியின் சதித் திட்டங்கள். மாகாணசபை மண்டபத்தில் விரும்பத்தகாத சூழ்நிலை ஒன்றை உருவாக்குவதற்காகவே முதலமைச்சர் தனது ஆதரவாளர்களையும், குண்டர்களையும் அங்கு குவித்து வைத்திருந்தார்." -என்றும் கீர்த்தி சிறிகஹட்ட பிட்டிய செய்தியாளர்களிடம் மேலும் கூறினார். இந்தச செய்தியாளர் மாநாட்டில் மாகாணசபை எதிர்கட்சித தலைவருடன் ஐதேக.மேல் மாகாண சபை கொறடா லஷ்மன் அபேகுணவர்தன, பேச்சாளர் சுஜீவ சேனசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனா(க)

# மே.மாகாண சபை முன்னால் ஐ.தே.க. ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஏப்.28

எதுவித அர்த்தமும் இன்றி, மேல் மாகாண சபையை ஒத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுத்த மேல்மாகாண ஆளுநருக்கு எதிராகவும் நம்பிகைகையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவர ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்குமென்று மேல்மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கர்த்தி கஹட்டப்பிட்டிய தெரிவித்தார்.

மேல் மாகாணக் கட்டடத்திற்கு முன் நேற்றுக காலை ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபை உறுப்பினர்கள் மத்தியில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னதாக மேல் மாகாணசபை அமர்வுகள் எந்தவிதமான முன் அறிவித்தல்களும் இன்றி நள்ளிரவில் திடீரென ஒத்தி வைக்கப்பட்டதைக கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சி மாகாண சபை உறுப்பினர்கள் சபை முன்றிலில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

மேல் மாகாண சபை முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு நேற்று நடைபெறவிருந்தது. இதற்கான ஏற்பாடுகளும் வழமைபோல் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ஆனால், சிறிதும் எதிர்பாராத வகையில் ஜனாதிபதியின் ஆலோசனையின் படி மேல் மாகாண சபை ஆளுநர் அலவி மௌலானா கூட்டத் தொடரை மே 17ஆம் திகதி வரை ஒத்தி வைத்தார்.

மேல் மாகாணசபை ஆளுநரின் இந்த அறிவித்தல் நள்ளிரவு 12 மணிக்குப் பின்னரே வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டது. இதனால் பெரும்பாலான மாகாணசபை உறுப்பினர்களுக்கு நேற்றுக்காலை பத்திரிகைகளைப் பார்த்த பின்னரே இந்த விடயம் தெரியவந்தது.

அரசின் இந்தத் தீர்மானம் ஜனநாயக விரோதமானது என்றும் இதன் மூலம் மாகாண சபை உறுப்பினர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்றும் ஆட்சேபனை தெரிவித்தே ஐ.தே.க. மாகாணசபை உறுப்பினர்கள் சபை முன்றிலில் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# 'பொப்லெப்' திட்டச் செயலமர்வு; தீவக வலய ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.28

தீவகக் கல்வி வலயத்தின் 'பொப்லெப்' திட்டப் பாடசாலைகளுக்கான இருநாள் செயலமர்வு நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் தீவகக் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் இச் செயலமர்வு நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் தீவகக் கல்வி வலயத்தில 'பொப்லெப்' செயற்றிட்டத்திற்குத் தெரிவு செயயப்பட்ட பாடசாலைகளான அனலைதீவு சதாசிவா வித்தியாலயம், நயினாதீவு மகா வித்தியாலயம், நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம், வேலணை கிழக்கு மகா வித்தியாலயம். மண்கும்பான் அ.த.க.பாடசாலை, வேலணை மேற்கு செட்டிப்புலம் அ.த.க. பாடசாலை, நெடுந்தீவு ஸ்ரீ நாகபூஷணி நயினாதீவு வித்தியாலயம், மண்டைதீவு றோ.க.த.க. பாடசாலை, நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் -

நெடுந்தீவு மாவிலந்துறை அ.த.க. பாடசாலை, நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலயம், நெடுந்தீவு ஸ்ரீஸ்கந்தா வித்தியாலயம், வலந்தை வடக்கு அ.த.க.பாடசாலை, காரைநகர் பாலவோடை அ.த.க.பாடசாலை, காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம், எழுவைதீவு முளைத்தீவு அ.த.க பாடசாலை, காரைநகர் ஊரி அ.மி.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளிலும் தரம் 4 இல் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியாகளையும் வலய அலுவலகத்தின் நூலக 'பொப்லெப்' இணைப்பாளர், ஆங்கில உதவிக் கல்விப் பணிபாளர், ஆங்கில சேவைக் கால ஆசிரிய ஆலோசகரையும் கலந்து கொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் கேட்டுள்ளார். (த-202)

## உயர்தர மாணவர் வருடாந்த ஒன்று கூடல்

யாழ்ப்பாணம்,ஏப்.28

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றம் நடத்தும் வருடாந்த ஒன்றுகூடலும் மதிய விருந்துபசாரமும் நாளை மறுதினம் சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் ச.மகிந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவரும் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய கலாநிதி ப.புஷ்பரட்ணம் கலந்து கொள்வார். (த-202)


## முதல்வது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY

யாழ்ப்பாணம் கோயில் வீதியைச் சேர்ந்த

திரு திருமதி ரஞ்சன் - பபி

தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன்

டெறிக்ஷன்

முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் இன்று 28.04.2005 வியாழக்கிழமை கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அண்ணா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், தொட்டப்பா, தொட்டம்மா, மச்சான்மார்களான அனுஸ்ரிகன், ஜொய்ல்ரன், பபிராஜ், றோகணராஜ் மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் ஆசீருடன் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.




தகவல்:
S. ரஞ்சன்

17, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(44690)(42-21-17-15)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

28.04.2005

1st HAPPY BIRTHDAY

கிருபாகரன்-வசந்தலா தம்பதியினரின் செல்வப் புதல்வன் அருச் (ARUSH) தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 28.04.2005 வியாழக்கிழமை கனடாவில் அவருடைய இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை அம்மப்பா (பிறேமச்சந்திரன்), அம்மம்மா (லங்கா தேவி), சித்திமாரான சந்திர கலா, வற்சலா, மாமன்மாரான பிரபாகர், பிரஜாந்த், பூட்டி தையல்நாயகி( கனடா) பேர்த்தி .சரஸ்வதி மற்றும்




அம்மப்பாமார், அம்மம்மாமார், சித்திமார், மாமாமார் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் வண்.கொண்டலடி வீநாயகர் அருளால் சகல கலைகளும் பெற்று, சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம்நலத்துடன் வாழ வேண்டுமென்று மனமார வாழ்த்துகின்றார்கள்.

(44716)(42-21-17-15)

16, கனகசபை அவனியூ,
யாழ்ப்பாணம்.

தகவல்:
க.பிறேமச்சந்திரன்
(அம்மப்பா)

# தமிழனே தமிழை அழித்தாலன்றி தமிழ் மொழி என்றும் சாகாது!



நல்லூர்,ஏப்.28

ஈழத் தமிழன் இருக்கும்வரை தமிழ் சாகாது. தமிழனே தமிழை அழித்தாலன்றி தமிழ் சாகாது.

இவ்வாறு தமிழீழக் கலைபண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை கூறினார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் மன்றத்தின் முத்தமிழ்விழா கல்லூரி மண்டபத்தில் சி.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

புதுவை இரத்தினதுரை அங்கு பேசும் போது கூறியதாவது:-

'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்று நேற்றைய தமிழையே வைத்துக்கொண்டு தமிழுக்கு விழாக்களை எடுக்கிறோம். நாம் கற்கும் தமிழ், நாம் படைக்கும் தமிழ் என்ற நிலை வரவேண்டும். வள்ளுவன், கம்பன், பாரதி எல்லோருமே நேற்றைய தமிழர்கள்.

"நாமார்க்கும் குடியல்லோம்" போன்ற தேவாரங்கள் மூலம் அந்நியர் ஆதிக்கத்திற்கு எதிராகக் குரல் எழுப்பியவர்கள் நாவுக்கரசர், சம்பந்தர் ஆகியோர் இது போன்ற எமது வீரத்தை உணர்த்தும் தேவாரங் களைக் கைவிட்டு, எங்களுடன் வளைந்து போகக்கூடிய "காதலாகிக்கசிந்து கண்ணீர் மல்கி", "மாசில் வீணையும் மாலை மதியமும்" போன்ற தேவாரத்துடன் நிற்கின் றோம். காலத்திற்கு ஏற்றவைகளை மறந்து போகின்றோம்.

இன்று 56 ஆயிரம் இணையத்தளங்களைக் கொண்டு தமிழ் வாழ்கிறது. இங்கிருந்து சென்ற தலைமுறை பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்று தமிழ் மொழியில் இருப்பவற்றை பிற மொழிகளுக்குக் கொண்டு செல்கிறது. எனவே, தமிழ் வளரும்; தமிழைத் தமிழன் அழித்தாலன்றி வேறு யாராலும் தமிழை அழிக்க முடியாது.

நாங்கள் பல அழிவுகளைப் பார்த்திருக்கிறோம். புல்லாந்திகள், புலுனி போன்ற பறவைகள் பல அழிந்துவிட்டன. தமிழ் அழியும் என்றால் அது எப்போதோ அழிந்திருக்கும். ஈழத்தமிழன் இருக்கும் வரை அது அழியாது. இது கும்பிடுபூச்சிகளின் காலமல்ல - என்றார்.

மன்றத்தலைவர் இராஜேஸ்வரன் தமது தலைமையுரையில்:-

உலக அரங்கில் தமிழுக்கு அபாயநிலை தோன்றியுள்ளது. நாவுக்கு மட்டுமே தமிழ் என்ற நிலை ஏற்படக்கூடாது. தமிழை வாழ்விக்க விழிப்புடன் தொண்டாற்ற வேண்டிய பொறுப்பு ஆசிரியர் சமூகத்திடம் உள்ளது. இதிலிருந்து அவர்கள் நழுவி விட முடியாது. அதனைக் காப்பதுதான் தமிழ்களாகிய எமக்குக் கௌரவம் - என்று கூறினார்.

### முத்தமிழ் என்பது தமிழரின் கலாசாரம்

பேராசிரியர் எஸ்.சிவஞானசுந்தரம் (நந்தி) பேசும்போது கூறியதாவது:-

இன்றைய மாணவர்களுக்குப் பல பிரச்சினைகள். என்ன தேவை என்பதை அவர்கள் யோசிக்கிறார்கள். அவர்களை ஒரு மனிதனாக உருவாக்குபவன் தான் நல்ல ஆசிரியன். சமுதாயத்திற்குத் தேவையான நுட்பமான கருவி ஆசிரியர்கள். முத்தமிழ் என்பது தமிழர்களுடைய கலாசாரம்தான். அது எங்களுடன் ஊறியிருக்கிறது.

விவேகானந்தரின் "பலமானது வாழ்க்கை; பலவீனம் மரணம்" என்ற வாசகத்தை அதிபரின் அறையில் பார்த்தேன். அவரின் வீரத்திற்குப் பக்கபலமாக அமைந்தது ஆன்மீக உணர்வுதான். மாணவர்களை இருட்டிலிருந்து ஓர் ஆசிரியர் வெளியுலகிற்குக் கொண்டு வருகிறாறென்றால் அவர் பரந்த சிந்தனையாளராக இருத்தல் வேண்டும். ஆசிரியர்கள் ஒழுக்கமுள்ளவர்களாக இருந்தால் அவர் படிப்பிக்காமலே மாணவனுக்கு ஒழுக்கம் வரும். பல இடங்களிலும் ஆசிரியர்களை மாணவர் நோக்குகிறார்கள். கல்வியில் அர்ப்பணிப்பு, பக்தி, ஒழுக்கம் என்பன தேவை. எமது சமூகத்தை வளர்க்க வேண்டும் என்ற ஒரே நோக்குடன் செயற்படுமாறு ஆசிரியர்களிடம் தயவுடன் கேட்கின்றேன் - என்றார்.

கல்லூரி முதல்வர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சிரேஷ்ட விரிவுரையாளர் கா. கணபதிப்பிள்ளை, மன்றக் காப்பாளர் விக்னேஸ்வரி கந்தசாமி ஐயர் ஆகியோரும பேசினார்கள்.

நாடகப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப் பட்டன.

(ப-111-204)

# நலிவடையும் பொருளாதாரத்தை கூட்டுறவுமூலம் மேம்படுத்துவோம்

## நூல் வெளியீட்டு நிகழ்வில் உரை

நல்லூர்,ஏப்.28

கூட்டுறவுத் துறையை மேம்படுத்துவதன் மூலம் நலிவடைந்துவரும் பொருளாதாரத்தை மேம்படுத்தலாம் இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பும் தேவை.

- இவ்வாறு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவுச் சங்கப் பதிவாளருமான இ. இளங்கோவன் கூறினார்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் முன்னாள் பிராந்தியக் கூட்டுறவுக் கல்லூரி அதிபர் இ.சுப்பிரமணியம் எழுதிய 'கூட்டுறவுக் கருவூலங்கள்' நூல் வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது.

ஆணையாளர் இளங்கோவன் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

முன்னைய காலத்தில் கூட்டுறவின் பின்புலம் மிகுந்த ஆற்றலைத்தேடிய போதும, அதற்கான வழிவகைகள் காணப்படவில்லை. இன்றைய நிலையில், சமூகத்தின்பால் அதனைக் கொண்டுசெல்வதில் பல புதிய உத்திகளைக் கையாளவேண்டும். இதற்குத் துறைசார்ந்த முழுமையான மாற்றங்கள் தேவை. சுயாதீனமாகத் தனக்குத் தேவையானதைத் தேர்ந்தெடுக்க வழியமைக்கவேண்டும். ஏனைய பணியாளர்களுடன் கூட்டுறவுத்துறை சார்ந்த பணியாளர்களை நோக்கும்போது அவர்கள் பின்தள்ளப்பட்டவர்களாகவே காணப்படுகிறார்கள். அவர்கள் இன்றைய தகைமையோடு இணைந்து தனது படிமானத்தை மாற்றி முன்செல்லத்தக்கதாக அமைக்க வேண்டும் - என்றார்.

பெ.கனகசபாபதி தனது தலைமையுரையில் கூறியதாவது:-

கால ஏற்ற இறக்கத்திற்கு உகந்த மாதிரிச் சட்டங்களை உள்ளடக்கியதான கூட்டுறவுத்துறை சார்ந்த நூல் ஒன்று கொழும்பில் வெளியிடப்பட்டது. இதனை விட கூட்டுறவின் தந்தையான வீரசிங்கம் உட்பட இரண்டொருவர் கூட்டுறவு தொடர்பாக வெளியிட்ட ஒருசில நூல்களைத் தவிர பெரிய அளவில் கூட்டுறவு பற்றிய நூல்கள் வெளிவந்ததாக இல்லை. வெளிவந்த நூல்களும் கூட்டுறவுத் துறை சார்ந்த பிற நாடுகளில் காணப்படும் சட்ட திட்டங்களை உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளன. இதில் தரப்பட்டுள்ள சாராம்சங்களை ஒவ்வொருவரும் தெரிந்துவைத் திருத்தல் வேண்டும். கூட்டுறவுத்துறை தொடர்பான நூலை வெளியிடுவதில் எமது சபை பெருமைப்படுகிறது - என்றார்.

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராசா பேசும்போது -

இதுவரை காலமும் இல்லாதவாறு பிரிட்டன், ஜேர்மனி, டென்மார்க், இஸ்ரேல் போன்ற வெளிநாடுகளின் வளர்ச்சியுடன், இலங்கையின் நிலையையும் ஒப்பிட்டு சுயமொழியில் வெளிவந்த நூல்கள் வேறு எதுவும் இருப்பதாக இல்லை.

ஆசிரியர் தனது முழுமையான அனுபவங்களினூடாக ஒரு சிறந்த கூட்டுறவுக் கருவூலத்தைத் தந்துள்ளார். கூட்டுறவுத் துறை மாணவர்கள் மட்டுமன்றிப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் கூட இந்த நூல் பெரிதும் பயனளிக்கும் - என்றார்.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் எஸ். சுப்பிரமணியசர்மா, பொ.சண்முகசுந்தரம், நூலாசிரியர் இ.சுப்பிரமணியம் உட்படப் பலர் பேசினார்கள்.

வணிகத்துறைத் தலைவர் தேவராசாவிடம் இருந்து நூலின் முதற்பிரதியை இ.குமாரசுவாமி பெற்றுக்கொண்டார்.

(ப-111-204)

# தமிழைச் சிறப்புடன் வளர்ப்பது காலத்தின் கட்டாய தேவை

## கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தலைவர்

முல்லைத்தீவு, ஏப்.28

தமிழர் அல்லாத வேற்றுமொழியினர் எல்லாம் தங்கள் கையெழுத்துக்களைத் தாய்மொழியில் இடும்போது தமிழன் மட்டும் வேற்றுமொழியை நாடுகிறான்.

இது வேதனைக்குரிய விடயம். தாய் மொழியை சிறப்புடன் வளர்க்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கத் தலைவர் வே.பரமநாதப்பிள்ளை.

முல்லைத்தீவு மாவட்டத் தமிழ்ச் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அங்கு உரை நிகழ்த்திய தமிழ்ச் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:-




தெய்வத் தமிழில் பிறந்துவளர்ந்து தமிழுக்காக சங்கம் அமைத்து வளர்க்கும் நிலையில் இன்று நாம் உள்ளோம். உயர்மொழியால் தமிழ்மொழி இன்று செம்மொழியாக்கப்பட்டபோதும் தமிழ் மொழியைப் பேணுவாரைக்காண்பது அரிதாகவுள்ளது.

உலகத்தில் உள்ளவர்கள் தமது தாய் மொழியை தமது அரசுக்கூடாக சீராகவும் சிறப்பாகவும் வளர்க்கிறார்கள். தமிழ ஆட்சி மொழியாக்கப்பட்ட பின்னும் இங்கு தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகிறது.

இது கவலைக்குரிய விடயம். இந்த நிலை மாறவேண்டும். பேச்சும் மூச்சும் தமிழுக்காக என வாழ்ந்தவர்கள் தமிழர்கள். எதிர்காலச் சந்ததி தமிழை புறக்கணிக்கவிடாது தமிழுடன் வாழப் பழக வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கம் தமிழ்வளர்க்க அரும்பணியாற்றுகிறது. திருக்குறள் ஓதி திருமணம் செய்வோரைக் கௌரவிப்பதுடன், தமிழ்த் திருமணங்களை ஊக்குவிக்கிறது. இதுமட்டுமன்றி, தமிழில் அர்ச்சனை புத்தகங்களை வெளியிட்டுள்ளதுடன், ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை செய்தலை தொடக்கிவைத்துள்ளது. தமிழில் குழந்தைகளுக்குப் பெயரிட்டு தமிழை வளர்க்கத் துணை செய்கின்றது.

தமிழ்ச் சமூகத்தினர் தமிழை மறக்காது தமிழை வளர்க்க பாடுபடவேண்டும். அதற்கு எமது சங்கம் துணைபுரியும், அங்குராப்பணம் செய்துள்ள முல்லைத்தீவு மாவட்டத் தமிழ்ச்சங்கமும் தமிழுக்காக சேவையாற்ற வேண்டும் - என்றார். (ப-204)

# புதிய கல்வி மறுசீரமைப்புகளை உள்வாங்காமையால் மாணவர்கள் கல்வித்தரம் வீழ்ச்சியடைகிறது

## வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் கவலை



வலி.தெற்கு,ஏப்.28

பெரும்பாலான அதிபர்களும் ஆசிரியர்களும் புதிய கல்வி மறுசீரமைப்புத் திட்டங்களை உள்வாங்கி அனுசரித்து நடக்கும் தன்மையை நடைமுறையில் கடைப்பிடிக்காதமை யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைவதற்கு ஒரு காரணம் எனக்கூறலாம்.

வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை அதிபர்களை இராமநாதன் கல்லூரிக்கு அழைத்து பாடசாலை செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குகள், கல்விச்செயற்பாடுகள் பற்றி கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் விரிவாக எடுத்துரைத்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கற்றல் - கற்பித்தல் முறைகளில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். பழைய கற்பித்தல் முறைகளை விடுத்து, கல்விச் சீர்திருத்த முறைகளுக்கேற்ப மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் 1960 - 1970 காலப் பகுதியில் யாழ். மாவட்டம் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தை வகித்தது. இன்று கல்வித்தரத்தில் 40 - 50 சதவீதமானதாக யாழ். மாவட்டம் இருப்பினும், சிங்கள, முஸ்லிம் மாவட்டத்தின் கல்விநிலை இதனைவிட அதிகரித்துள்ளது. புதிய பாடவிடயங்களை அவர்கள் ஏற்றுக்கொண்டு கல்விச் சீர்திருத்தங்களுக்கமைய செயலாற்றி வருவதே அதற்குக் காரணம்.

பரீட்சை முறைகளில் தற்போது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஐந்தாம் ஆண்டு பரீட்சையில்கூட கணிதம், விஞ்ஞானம், அழகியல், ஆக்கத்திறன் போன்ற பாடங்கள் புகுத்தப்பட்டு புதிய கருத்துக்களை மாணவர்கள் அறியவேண்டியுள்ளது. வினாத்தாள்களை மட்டும் வழங்கி அறிவை வளர்த்து விடமுடியாது. விடைத்தாள்கள் பகுப்பாய்வு செயற்பட்டு பின்னூட்டல் செய்யப்படவேண்டும்.

பாடசாலைகளுக்குத் தரப்படும் குணநல உள்ளீடுகளைத் தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நூலக வசதிகள், விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் செய்து தரப்பட்டும்கூட பல பாடசாலைகளில வாசிப்புப் பழக்கம் வளரவில்லை. விஞ்ஞானகூடச் செயல்முறை பயிற்சிகள் இடம் பெறுவதில்லை. செயல்முறைக் கற்றலில மாணவரை ஈடுபடுத்தவேண்டும். கணனிகள் இருந்தும் பல பெரிய பாடசாலைகளில் அவற்றைப் பயன்படுத்தும்தன்மை குறைவாகவே உள்ளது. கணனிகள் பார்வைக்குரிய அழகுப் பொருள்களாக வைக்கப்படுகின்றன. இந்த நிலைகள் மாற்றப்பட வேண்டும்.

தமிழ்த்தின, ஆங்கிலதினப் போட்டிகள் போன்றவற்றில் பாடசாலைச் செயற்பாடுகள் அதிகரிக்கப்படவேண்டும். யாழ். மாவட்டம் மீண்டும் தனது கல்வித் தரத்தினை உயர்த்திக்கொள்ளப் பழைய முறைகளைக் கைவிட்டுத் தற்காலத்துக்கேற்ற புதிய கல்விச் சீர்திருத்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் - இவ்வாறு கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

(ப-152-204)

வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

**முக்கிய அறிவித்தல்**

31.05.2004 இற்கான கிராமிய வங்கி கணக்கு மீதிகள் கணக்காய்வாளர்களால் உறுதிப்படுத்தப்படவிருப்பதால், குறித்த கிராமிய வங்கிகளில் கணக்குகளை வைத்திருப்போர் பின்வரும் திகதிகளில் முற்பகல் 9.00 தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை தங்கள் கையேடுகளைச் சமர்ப்பித்து மீதிகளை உறுதிப்படுத்துமாறு கேட்கப்படுகின்றனர்.

| | |
|---|---|
| கோப்பாய் கிராமிய வங்கி - | 02.05.2005, 03.05.2005, 04.05.2005, 12.05.2005 |
| உரும்பிராய் கிராமிய வங்கி - | 05.05.2005, 06.05.2005, 09.05.2005, 12.05.2005 |
| நீர்வேலி கிராமிய வங்கி - | 10.05.2005, 11.05.2005, 12.05.2005 |

நீர்வேலி. பொதுமுகாமையாளர்.

(சி.42425) (39-18-34)


# தந்தை செல்வாவின் நினைவுதினம் தீபங்கள் ஏற்றி அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

தந்தை செல்வாவின் 28 ஆவது நினைவு தினமான நேற்றுமுன்தினம் தீபங்கள் ஏற்றி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நினைவுதின நிகழ்வுகள் நடை பெற்றன.

நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற இந்த நிகழ்விற்குத் தந்தை செல்வா அறங்காவலர் குழுவின் தலைவர் அருட்கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமை வகித்தார்.

மேடையில் வைக்கப்பட்டிருந்த தந்தை செல்வாவின் திருவுருவப்படத்துக்குப் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் சி.பத்மநாதன் சுடர் ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து திருவுருவப்படத்துக்கான மலர் மாலையினை தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுவின் தலைவர் அருட்கலாநிதி எஸ்.ஜெபநேசன் அணிவித்தார்.

வரவேற்புரையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவும் தலைமையுரையினை அருட்கலாநிதி எஸ்.ஜெபநேசனும் நிகழ்த்தினர்.

'இலங்கைத் தமிழரும் சுயாட்சி உரிமையும்' என்னும் தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.பத்மநாதன் நினைவுப் பேருரையாற் றினார். அறங்காவலர் குழுவின் பொருளாளர் எஸ். குலநாயகம் நன்றியுரை நிகழ்த்தினார். (3-7)

## வவுனியாவில் ரயர்க் கடைமீது திங்களன்று இரவு குண்டுவீச்சு

வவுனியா,ஏப்.28

வவுனியாவில் ஏ-9 வீதியில் அமைந்துள்ள ரயர்க்கடை ஒன்றின்மீது திங்களன்று இரவு பெற்றோல் குண்டு ஒன்று வீசப்பட்டது.

இதனால், அங்கு வைக்கப்பட்டிருந்த ரயர்கள் எரிந்தன என்றும் -

தனிப்பட்ட காரணங்களே குண்டுவீச்சுக்குக் காரணம் என்றும் - வவுனியா பொலீஸார் தெரிவித்தனர். (3-164)


**JAFFNA DIRECTORY** விரைவில்...

யாழ். மாவட்டத்திற்கான முழுமையான தொலைபேசி மற்றும் முகவரிக் கோவை

எல்லா வீடுகளிலும், அலுவலகங்களிலும், வியாபார நிறுவனங்களிலும் தினம் பயன்படுத்தும் முப்பதாயிரம் பிரதிகள்

உங்கள் விவரங்களை இலவசமாகப் பிரசுரிக்க இன்றே தயாராகுங்கள்........ (44689)


## வலிகாமம் அதிபர்கள் கூட்டம்

வலி.தெற்கு, ஏப்.28

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட 1ஏபி, 1சி பாடசாலை அதிபர்களுக்கான முக்கிய கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு வலிகாமம் வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(3-152)

## வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

வலி.தெற்கு, ஏப்.28

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சாந்தைக் கிராமத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ்வாழும் பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சாந்தை விநாயகர் சனசமூக நிலையத்தில் வைத்து 'றீடோ' நிறுவனத்தினரால் இக்கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வறுமைக்கோட்டின் கீழ்வாழும் எழுபது மாணவர்கள் தமது கல்வித்தரத்தை மேம்படுத்திக்கொள்ளும் வகையில் இக்கற்றல் உபகரணங்களைப் பெற்றுக்கொண்டனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணிய சர்மா, றீடோ நிறுவனத்தின் மீளாய்வு உத்தியோகத்தர் என். சிறீகாந், றீடோ நிறுவனத்தின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் ரி.ஜெயக்குமார் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கினர்.

(த-152)


**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்**

புவியில் 27 ✽ 01 ✽ 1926



இறைபதம் 29 ✽ 03 ✽ 2005

**அமரர் கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை**

(ஓய்வூதியர், இலங்கை மின்சாரசபை)

அன்பாய் அரவணைத்து எமை வளர்த்த தந்தையே!
பாசமிகு அப்பாவே!
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு இறைவனடி சேர்ந்தீரோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

இன்று (28.04.2005) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.45, புவனேஸ்வரி அம்பாள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர் சார்பில்:
வே.சிவகுமாரன் (எழுதுவினைஞர்.யாழ்.பல்கலைக்கழகம்).
வே.தூயகுமாரன (பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ்.பல்கலைக்கழகம்).

(44676) (39-18-34)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

மலர்வு 02 - 01 - 1970

உதிர்வு 29 - 03 - 2005



திருமதி **ஜெயகாந்தன் ஜெயக்குமாரி**

மாதமொன்று சென்றும் மறக்க
முடியவில்லை– உன் பிரிவை
பாதி வழியில் எனைத் தவிக்கவிட்டு
பறந்து சென்றதேனோ?

இன்று (28.04.2005) வியாழக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் கலந்துகொள்வதோடு தொடர்ந்து இடம் பெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்தியடி,
கச்சாய் வீதி, கொடிகாமம். - கணவன்.

(44657) (39-18-34)

**தேவை**

1) சாதாரண தொழிலாளர்கள் வயதெல்லை 25 - 50 வரை
2) தாதி பயிலுநர்கள் - பெண்கள் வயதெல்லை 20 - 40 வரை

க.பொ.த. (சாதாரணதரம்) 6 பாடங்களில் சித்தி.

விண்ணப்பிக்கும் முகவரி:
பணிப்பாளர்,
**சென்றல் நேசிங் ஹோம்**
350, பலாலி வீதி, திருநெல்வேலி.

(44703)(26-14-15)

**நினைவுகள் சுமந்த முதலாவது அகவையில்**

மலர்வு 07 + 06 + 1964

உதிர்வு 09 + 05 + 2004



அமரர் **இரஞ்சினிதேவி பாலகுமரன்**
(B.Sc. Dip. in Ed)
ஆசிரியர் யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

ஈராறு மாதங்கள்
மறைந் தோடி விட்டன
உன் நினைவுகள் என்றும்
என் மனதை விட்டு மறையாது
உன் முகத்தில் பூத்த புன்முறுவல்
என் நினைவில் நிற்கிறது
உன் எண்ணங்கள்
வார்த்தைகள்
என் நெஞ்சில் நிறைகின்றன.

கணவர் ப. பாலகுமரன்
கலாசாலை வீதி
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

# குடாநாட்டில் பல வீதிகளை தரம் உயர்த்த நடவடிக்கை

தென்மராட்சி,ஏப்.28

யாழ்மாவட்டத்தில் நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றினால் பராமரிக்கப்படும் சில வீதிகள் தரமுயர்த்தப்பட்டு வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் கையளிக்கப்படவுள்ளன.

பேருந்து சேவையில் ஈடுபடும் வீதிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், பாடசாலைகள கூடுதலாக உள்ள வீதிகள், மக்களை மீளக குடியமர்த்தக் கூடியவாறான வீதிகள் தரமுயர்த்தப்படவுள்ளன.

உள்ளூராட்சி சபை எல்லைகளுக்குள் அவ்வாறான வீதிகள் இருப்பின் அவ்வீதிகளின் வரைபடங்களில் முக்கியமான இடங்கள் குறிப்பிடப்பட்டு, வீதியின் பெயர், நீளம், அகலம், தன்மை ஆகிய விவரங்களுடன் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களை யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் வீ.இராசையா கேட்டுள்ளார். (த-117)

# புங்கன்குளம் பகுதியில் மண்அகழ்வு தீவிரமடைகிறது

யாழ்ப்பாணம்,ஏப்.28

அரியாலை புங்கன்குளம் ரயில் நிலையப் பகுதியில் கடந்த ஒரு வாரகாலத்திற்கு மேலாக சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது என்று அப்பகுதி மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் காடுகள் வளர்ந்து இருந்தது என்றும் அதனை ஊரவர்களும் மாநகர சபையினரும் அழித்துச் சுத்தப்படுத்தியுள்ளனர் எனவும் - இதனாலேயே, தற்போது சட்டவிரோதமாக மண் அகழும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உரியவர்களுக்கு அறிவித்தும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுககப்படவில்லை.

எனவே, பிரதேச அபிவிருத்தியில் கவனமெடுப்பவர்கள் இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து எமது பிரதேசத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டுமென்று அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (3-203)



மின்சாரத்திணைக்களம் மற்றும் மின்சார சபையில் 35 வருட கால சேவையாற்றிய பொறியியல் உதவியாளர் எஸ்.ரீ.கணநாதனுக்கு -

அவர் இறுதியாகப் பணிபுரிந்த மின்பாவனையாளர் சேவை நிலையத்தில், யாழ்.புறநகர்ப் பகுதி மின் அத்தியட்சகர் அ.அருள்நாதன் தலைமையில் அண்மையில் சேவை நலன் பாராட்டு விழா நடைபெற்றது.

இலங்கை மின்சார சபையின் வடமாகாண இணைப்பதிகாரியும் வடக்கின் பிரதிப் பொது முகாமையாளருமான இ.முத்துரத்னானந்தம், விழாவில் எஸ்.ரீ.கணநாதனுக்கு மாலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம். *(அ)*

# கணிதபாட முன்னேற்றப் பரீட்சை சனியன்று பாடசாலைகளில்

ஜி.சீ.ஈ.சாதாரணதர பரீட்சையில் கணிதபாட அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் கல்வி அமைச்சும் பரீட்சைத் திணைக் களமும் இணைந்து கணிதபாட முன்னேற்றப் பரீட்சையினை நாளை மறுதினம் சனிக்கிழமை நடத்தவுள்ளன.

இவ்வருடம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தத்தம் பாடசாலைகளிலேயே இப்பரீட்சைக்குத் தோற்றுவர். இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பாட ஆசிரியர்கள் உரிய வேளையில் பாட அலகினைப் பூர்த்திசெய்துகொள்ளுமாறு வலிகாமம் வலய பாடசாலைகளின் கணிதபாட ஆசிரியர்களுக்கு கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுகுமாரன் அறிவித்துள்ளார். (3-152)

# கல்விச் செயலமர்வுகள்

வலி.தெற்கு,ஏப்.28

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வொன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது. தரம் 7 தொடக்கம் 11 வரையான வகுப்பு களில் மேற்படி பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இச்செயலமர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (3-152)

★ ★ ★

வலிகாமம்,ஏப்.28

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 2, தரம் 5 கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மொழித்திறன் விருத்திச் செயலமர்வொன்று நடைபெறவுள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் தரம் 5 ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறும்.

தரம் 2 ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் இரண்டாம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிதொடக்கம் மாலை 5.30 மணிவரை நடைபெறும்.

இச் செயலமர்வின்போது மொழித்திறன் விருத்தி தொடர்பான வேலைத்திட்டம் தயாரிக்கப்படும் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.நாகராசா தெரிவித்தார். (3-152)

# சாவகச்சேரி கலைமன்றத்தைப் புனரமைக்க ரூ.50 லட்சம் ஒதுக்கீடு

சாவகச்சேரி, ஏப்.28

சாவகச்சேரி சிவன்கோயில் வீதியில் சேதமடைந்த நிலையில் காணப்படும் தென்மராட்சி கலைமன்றம் மீள புனரமைக்கப்படவுள்ளது.

இக்கலைமன்றம் கலாசார மண்டபமாக 50 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்தக் கலைமன்றம் 1984 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நிறுவப்பட்டு பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

அந்தக் காலப்பகுதியில் தென்மராட்சிப் பிரதேச செயலாளராகப் பணிபுரிந்த எஸ்.துரைராஜா வின் வழிப்படுத்தலில் இக் கட்டடம் புனரமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-31)

# குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் மறுகணமே பதவிவிலகத் தயார்

## மேல் மாகாண முதல்மைச்சர் சவால்!

கொழும்பு,ஏப்.28

தம்மீதான விசாரணைகளில் தாம் குற்றவாளியென்று நிரூபிக்கப்பட்டால் மறுகணமே முதலமைச்சர் பதவியைத் தூக்கியெறிந்துவிடத் தயார் என்று பகிரங்கமாக அறிவித்துள்ளார் மேல் மாகாண சபை முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே.

மேல்மாகாண முதலமைச்சர் தமது அலுவலகத்தில் செய்தியாளர் செவ்வாய்க்கிழமை மாநா டொன்றை நடத்தினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேல்மாகாண சபையில் ஜே.வி.பியினர் ஆளும் கூட்டணிக்குள் இருக்கின்றனர் எனினும், அவர்கள் இப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தோள்மேல் அமர்ந்திருக்கின்றனர். ஆளுங்கட்சிக்குள் இருக்கும் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொள்ளவேண்டுமே தவிர பிளவுகளை ஏற்படுத்தக் கூடாது. ஆனால், ஜே.வி.பி.இந்த விடயத்தில் அப்படி எதனையும் செய்யவில்லை.

இவ்வாறான நிலையில் என்மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணைகள் இடம்பெறவுள்ளன. அவற்றை நான் துணிவுடன் எதிர்கொள்வேன். இதில் என்மீது எந்தக் குற்றமும் இல்லை என்பதை நிரூபிக்க முடியுமென நான் கருதுகிறேன். நான் குற்றவாளியென நிரூபிக்கப்பட்டால் மறுகணமே பதவியிலிருந்து விலகிவிடுவேன்.

- இவ்வாறு முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார். [illegible]

# விற்றமின் 'ஏ' மருந்து வழங்கும் இடங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.28

சுகாதார சேவைத்திணைக்களம், யுனிசெவ் என்பவற்றின் அனுசரணையுடன் 'விற்றமின் ஏ' மருந்து வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

மருந்து விநியோகிக்கும் இடங்கள் வருமாறு:

**சாவகச்சேரி**
**சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு**

தச்சன்தோப்பு, அம்பிகா மாதர் சங்கம், கைதடி மத்திய மருந்தகம், மட்டுவில் தெற்கு வேற்பிள்ளை நூலகம், சரசாலை கிராம சபை அலுவலகம், மட்டுவில் ஆரம்ப சுகாதார நிலையம், மந்துவில் ஆரம்ப சுகாதார நிலையம், நுணாவில் பொது நூலகம், கல்வயல் குடும்ப நல சேவை உத்தியோகத்தர் அலுவலகம், சங்கத்தானை நகரசபை - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகிய இடங்களிலும் -

கச்சாய் ஆரம்ப சுகாதார நிலையம், கொடிகாமம வெள்ளாம் பொக்கட்டி நூலகம், மீசாலை புத்தூர் சந்தி நூலகம், கொடிகாமம் கிராம சபை, உசன் ஆரம்ப சுகாதார நிலையம், தவசிகுளம், மிருசுவில் மத்திய மருந்தகம், வரணி மத்திய மருந்தகம் ஆகிய இடங்களிலும் மருந்துகள் விநியோகிக்கப்படும்.

**கோப்பாய்**
**சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு**

தம்பாலை கிராம அபிவிருத்திச் சங்கம், அச்சுவேலி சுற்றயல் கூறு, ஆவரங்கால் மத்தி ஆரம்பப் பாடசாலை, புத்தூர் மத்திய மருந்தகம், கலைமதி சனசமூக நிலையம், வாதரவத்தை ஆரம்ப சுகாதார நிலையம், சிறுப்பிட்டி கிராம அபிவிருத்திச்சங்கம், நீர்வேலி கிராம அபிவிருத்திச் சங்கம், அச்செழு ஆரம்ப சுகாதார நிலையம், ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகிய இடங்களிலும் -

உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் மத்திய மருந்தகம், உரும்பிராய் கிழக்கு செல்வபுரம் நூலகம்,கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய் சனசமூக நிலையம், கட்டப்பிராய் கிராம அபிவிருத்திச் சங்கம், கோண்டாவில் மத்திய மருந்தகம், கோண்டாவில மத்திய மருந்தகமும் மகப்பேற்று நிலையமும், கொக்குவில் மத்திய மருந்தகம், கல்வியங்காடு சைவப் பாடசாலை ஆகிய இடங்களிலும் -

திருநெல்வேலி காளி கோவிலடி, திருநெல்வேலி கிராம அபிவிருத்திச் சங்கம், திருநெல்வேலி கலாமன்றம், குளப்பிட்டி, ஆறுகால்மடம் ஆகிய இடங்களிலும் மருந்துகள் விநியோகிக்கப்படும்.

**ஊர்காவற்றுறை**
**சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு**

காரைநகர் I சுற்றயல் கூறு, காரைநகர் II, காரைநகர் III, காரைநகர் மாவட்ட வைத்தியசாலை, தம்பாட்டி, நாரந்தனை, மெலிஞ்சிமுனை, புளியங்கூடல் ஆரம்ப சுகாதார நிலையம், அனலைதீவு சுற்றயல் கூறு, எழுவைதீவு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய இடங்களிலும் -

அல்லைப்பிட்டி கிராம சுகாதார நிலையம், மண்டைதீவு கிராம சுகாதார நிலையம், வேலணை கிராமிய வைத்தியசாலை, சரவணை கிராம சுகாதார நிலையம், புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை, புங்குடுதீவு அம்பலவாணர் அரங்கு, நயினாதீவு சுற்றயல் கூறு, நெடுந்தீவு சுற்றயல் கூறு ஆகிய இடங்களிலும் மருந்துகள் விநியோகிக்கப்படும்.

**தெல்லிப்பழை**
**சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு**

தாவடி ஆரம்ப சுகாதார நிலையம், இணுவில் மத்திய மருந்தகம், சங்குவேலி ஆரம்ப சுகாதார நிலையம், கந்தரோடை நூலகம் (சிகிச்சை நிலையம்),ஏழாலை மத்திய மருந்தகம், உடுவில் மத்திய மருந்தகம், ஏழாலை மயிலங்காடு மாதர் சங்கம், புன்னாலைக் கட்டுவன் மத்திய மருந்தகம், வசாவிளான் ஆரம்ப சுகாதார நிலையம், தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் -

மல்லாகம் மத்தி குளமங்கால், மல்லாகம், பன்னாலை நூலகம், அளவெட்டி ஆரம்ப சுகாதார நிலையம், சீனன்கலட்டி ஆரம்ப சுகாதார நிலையம், மல்வம் உடுவில் தெற்கு, சுன்னாகம் மத்திய மருந்தகம் ஆகிய இடங்களிலும் மருந்துகள் விநியோகிக்கப்படும்.

**மானிப்பாய்**
**சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு**

சங்கானை சுற்றயல் கூறு, பண்ணாகம் ஆரம்ப சுகாதார நிலையம், தொல்புரம் மத்திய மருந்தகம், வட்டுக்கோட்டை மத்திய மருந்தகம், வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலை, நவாலி கிறிஸ்தவ இளைஞர் மன்றம், முள்ளி ஆரம்ப சுகாதார நிலையம், சாவற்காடு ஆரம்ப சுகாதார நிலையம், மானிப்பாய் மத்திய மருந்தகம - மகப்பேற்று நிலையம், சுதுமலை குணடடி நூலகம் ஆகிய இடங்களிலும் -

கட்டுடை ஆரம்பப்பாடசாலை, பிரான்பற்று ஆரம்ப சுகாதார நிலையம், இளவாலை மத்திய மருந்தகம், பண்டத்தரிப்பு கிராமிய வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் மருந்துகள் விநியோகிக்கப்படும்.

**பருத்தித்துறை**
**சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு**

வள்ளாங்குளம், கட்டைக்காடு, மருதங்கேணி, ஆழியவளை, உடுத்துறை, வத்தராயன், வெற்றிலைக்கேணி, செம்பியன்பற்று, மாமுனை, மருதங்கேணி வடக்கு -

தும்பளை கிழக்கு, 4ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை, கற்கோவளம், மாதனை, இன்பருட்டி, வியாபாரிமூலை, மணற்காடு, குடத்தனை, அம்பன், ஆதிகோவிலடி வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலுள்ள நலன்புரி நிலையங்களிலும் -

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை, தொண்டைமானாறு ஆரம்ப சுகாதார நிலையம், பொலிகண்டி, திக்கம், புலோலி மேற்கு, பருத்தித்துறை மேற்கு, பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை, புற்றளை, துன்னாலை கோவில் கடவை, கட்டைவேலி ஆகிய இடங்களிலும் -

துன்னாலை குடவத்தை, வல்வெட்டி, சோளங்கன், மணியகாரன் தோட்டம், கப்புது, கரவெட்டி விக்னேஸ்வரா, கரவெட்டி மத்திய மருநதகம் கரவெட்டி கௌந்தில், கம்பர்மலை, அல்வாய் கிராமசபை ஆகிய இடங்களிலும் -

இமையாணன் மாதர் சங்கம், கரணவாய் வடகரு ஆரம்ப சுகாதார நிலையம், உடுப்பிட்டி இலகடி நூலகம், வதிரி ஆகிய இடங்களிலும் மருந்துகள் விநியோகிக்கப்படும்.

**யாழ்ப்பாணம்**
**சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு**

நாவலர் மகப்பேற்று நிலையம், நமசிவாயம் ஆரம்பப் பாடசாலை, சென்.நிக்கலஸ் பாடசாலை, அரியாலை மகப்பேற்று நிலையம், வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம், சுவாமியார் சிகிச்சை நிலையம், பாஷையூர் சனசமூக நிலையம், யாழ்.மத்திய மருந்தகமும் மகப்பேற்று நிலையமும், மாணவர் கல்வி நிலையம் (ஜே/67), ஏவாமரியா ஆரம்பப்பாடசாலை ஆகிய இடங்களிலும் -


ஜூபிலி மகப்பேற்று நிலையம், நல்லூர் சன சமூக நிலையம், முருகன் சனசமூக நிலையம், ஆத்திசூடி சனசமூக நிலையம், சித்த மருத்துவ வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் மருந்துகள் விநியோகிக்கப்படும். [illegible]

# மனிதனை அவனது அறிவுக்கு ஏற்ப ஞானமார்க்கத்தில் இட்டுச் சென்று ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிகாட்டுபவர் பகவான் சத்தியசாயி பாபா

**வடபிராந்திய சத்தியசாயி சேவா அமைப்புக்களின் அழைப்புக்கிணங்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார் பேராசிரியர் அனில்குமார். புட்டபர்த்தி ஸ்ரீ சத்தியசாயி உயர்கல்வி படிப்புப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றும் இவர், பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் தெலுங்கு மொழிச் சொற்பொழிவுகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியைக் கடந்த பல ஆண்டுகளாக மேற்கொண்டுவரும் பாக்கியம் பெற்றவர். கடந்த 25ஆம் திகதி யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அவர் நிகழ்த்திய ஆன்மீகச் சொற்பொழிவின் தொகுப்பின் ஒரு பகுதியை இன்று வாராந்த சாயி சிந்தனைப் பகுதியில் தருகிறோம்.**

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவுக்கு அருகில் இருந்து தொண்டு செய்யும் பாக்கியம் பெறறவன் என்ற வகையில் பகவான் வாழ்ந்து வரும் புட்டபர்த்தியிலுள்ள பிரசாந்தி நிலையத்தைப் பற்றியும் தெய்வீக மகிமை பொருந்திய அம்மானின் அருட்கடாட்சம், அறிவுரை, போதனை என்பவை குறித்தும் உங்களுக்கு விளக்கிச் சொல்லக் கிடைத்த இந்த வாய்ப்புக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

புட்டபர்த்தி அமைதியும் அழகும் புனிதமும்



நிறைந்த பிரதேசமாகும். பகவான் பாபா அங்கு வாழ்ந்து வருவதால் அந்த இடம் மேலும் பெயரும் புகழும் பெற்று விளங்குகின்றது. புட்டபர்த்தி என்பதற்கு புற்றுகள் நிறைந்து காணப்படும இடம் எனக் கருத்துண்டு. 'பேனுகொண்டா' என்ற கிராமத்துக்கும் சித்ராவதி என்ற ஆற்றுக்கும் அருகில் அமைந்துள்ள புட்டபர்த்தியில் பிரசாந்தி நிலையத்தில் தங்கியிருந்து உலகம் முழுவதிலும் வாழும் தமது அடியார்களுக்குப் போதனைகள் புரிந்துவரும் பகவானின் அடியார்கள் உலகில் 150 நாடுகளில் பரந்து வாழ்ந்து வருகின்றனர்.

பகவான் பாபாவின் போதனைகளால் கவரப்பட்டு அவரது தரிசனத்தைப் பெறுவதற்காக உலகில் பல பாகங்களிலிருந்தும் தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் பிரசாந்தி நிலையத்தில் கூடுகிறார்கள். இவர்களிடையே வயதில் குறைநத சிறு குழந்தைகள் முதல் வயது முதிர்ந்தோர் வரை பல தரப்பட்ட பக்தர்களும் அடங்கியுள்ளனர். அவர்கள் வெவ்வேறு மொழி பேசுபவர்களான போதிலும், வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களான போதிலும், வெவ்வேறு மதப்பிரிவுகளைப் பின்பற்றுவோராக இருந்த போதிலும் பகவான் பாபாவின் அருள் உரையால் கவரப்பட்டு - அவரது வார்த்தைகளில் பூரண நம்பிக்கை வைத்து - அவரது அற்புத சக்திக்குக் கட்டுப்பட்டு - அவர் தரிசனம் வேண்டிக் கூடுகின்றனர்.

### தர்மத்தை அறிவுறுத்தும் போதனைகள்

பகவான் பாபாவின் போதனைகள் தர்மத்தை வலியுறுத்தும் வகையிலமைந்தவை. தர்மத்தின் அடிப்படையில் நாம் இம்மனிதப் பிறவியில் எவ்வாறு வாழவேண்டுமெனப் போதிக்கும் வகையிலமைந்தவையே பகவான் பாபாவின் அருளுரைகள். பகவான் பாபாவுக்குச் சகல மொழிகளும் பரிச்சயமானவையே.

நாம் குறிப்பிட்ட இடத்துக்குச் செல்ல வேண்டுமானால் அந்த இடத்தைச் சென்றடையக் கூடிய சரியான பாதையைக் கண்டறிந்து அந்த வழியில் பயணித்தாலே சிரமமின்றி, இலகுவாக எமமால் குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைய முடியும். அதேபோன்று தர்மத்தை நோக்கி நாம் பயணிக்க விரும்பினால் அதைத் தேடி நாம் சரியான திசையில் பயணித்தாக வேண்டும். அதற்காக எம்மைத் தயார்ப்படுத்தி வழிகாட்டும் வகையில் அமைந்தவையே பகவான் பாபாவின் போதனைகளாகும்.

எமது ஆசைகள் நிறைவேறும் போது கடவுளில் எமக்கு விசுவாசம் ஏற்படுகின்றது. அதேவேளை, எமது ஆசைகள் நிறைவேறாத வேளையில் அந்த விசுவாசமும் குறைவடைகிறது. நாம் எப்போதும் கடவுள் மீது அசையாத நம்பிக்கை வைத்தல் வேண்டும். எமது அந்த நம்பிக்கை உறுதியான, விசுவாசமிக்க எந்தவேளையிலும் அசைக்க இயலாத நம்பிக்கையாக அமையுமானால் நிச்சயம் ஆண்டவனின் அனுக்கிரகம் எமக்குக்கிட்டியே ஆகும் என்பதைப் பகவான் பாபா எப்போதும் வலியுறுத்திக் கொள்கிறார்.

### மனப்பக்குவத்தைத் தரும் போதனைகள்

மனித மனம் மணிக்கூண்டின் 'பெண்டுலம்' போன்றது. புகழ்ச்சியும் வெற்றியும் கிட்டும் வேளையில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. அதே வேளை, கஷ்டமும் தோல்வியும் ஏற்படும் வேளையில் எமது மனம் துக்கமுறுகிறது. ஆனால், வெற்றியையும் தோல்வியையும் ஒன்றாகக் கருதத்தக்க, புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் சமமாகக் கருதத்தக்க மனப்பக்குவத்தை மனிதனுக்கு வழங்குவதே பகவான் பாபாவின் போதனைகளாகும். இந்தவகையில், பிரசாந்தி நிலையம் ஆறுதலையும், சாந்தியையும் வழங்கத் தக்கதென்ற கருத்தில் அமைந்த நிலையமாகும். சாந்தி என்பது மனஆறுதலையும் அமைதியையும் வழங்கும். பிரசாந்தி என்பது பூரணமான மனச்சாந்தியை வழங்கும் இடமென்ற கருத்தைக் கொண்டது.

### சத்திய சாயி பாபாவின் நான்கு வேதங்கள்

மனித வாழ்வில் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கும் பெற்றோர்கள், ஏதோ ஒரு வேளையில் பிள்ளைகளிடம் எதிர்பார்க்கும் விடயங்களும் உண்டு. அது சுயநல நோக்கில் அமைந்த செயற்பாடு. ஆனால், ஆண்டவனாகிய சாம்ப சிவா தன் அடியார்களிடம் எந்தவிதப் பிரதிபலனையும் எதிர்பார்த்து அவர்களுக்கு அருள் சுரப்பதில்லை. 'சாம்ப' என்ற தொடர் கருணைமிக்க தாய் எனும் அர்த்தம் கொண்டதாகும். 'சிவா' என்ற பதம் தந்தையைக் குறிப்பதாகும். எனவே, சாம்ப சிவா என்பது தெய்வீகத்தன்மை வாய்ந்த அம்மையப்பனைக் குறிப்பதாகும். தெய்வீகத் தன்மை வாய்ந்த இந்தச் சாம்பசிவா தனது பக்தர்களிடமிருந்து எதனையும் எதிர்பார்ப்பதில்லை. அந்த வகையில் பகவான் சத்யசாயி பாபாவும் சாம்பசிவாவை ஒத்தவரே. அவருக்குத் தனியான - தமக்கென - தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் எதுவும் கிடையாது. அவர் சாதாரண மனித உணர்வுகளால் புரிந்து கொள்ளப் படமுடியாத மகான். சத்யசாயி பாபா என்ற உச்சரிப்பில் அதர்வண, எதுர்வேத, சமவேத மற்றும் ரிக்வேத ஆகிய நான்கு வேதங்களும் உள்ளடங்கியுள்ளன.

பாபா என்ற வார்த்தையில் உள்ள நான்கு ஆங்கில எழுத்துக்களும்கூட நான்குவித அர்த்தங்களை உள்ளடக்கியிருப்பதை நான் உணர்கிறேன். முதலாவது எழுத்தான B என்பது உண்மை நிலையை உணர்த்துவதாகவும், இரண்டாவது எழுத்தான A என்பது மனிதனின் விழிப்புணர்வுத்தன்மையை வலியுறுத்தும் வகையிலும் மூன்றாவது எழுத்தான B மனிதனின் வாழ்க்கை அனுபவத்தினூடாக தெளிவையும் சுட்டிக்காட்டும் அதேவேளை, இம்மூன்று நிலைகளின் அனுபவங்களினூடாக மனப்பக்குவ நிலையடையும் வேளையில் பரமானந்தநிலை எமக்கு வாய்க்கப்பெறும். அந்த எல்லையற்ற நிரந்தர மகிழ்ச்சி நிலையான பரமானந்த நிலையையே நான்காவது எழுத்தான A சுட்டிக்காட்டி நிற்கிறது.

அந்த வகையில், உலக லௌகீகங்களில் உழன்று இன்பம், துன்பம், மகிழ்ச்சி, சோகம், திருப்தி, அதிருப்தி ஆகிய உணர்வுகளில் சிக்கி அல்லலுறும் மனித மனத்துக்கு பகவான் பாபா தமது அருட்போதனைகள் மூலம் அன்பான, கனிவான, அரவணைப்பின் மூலமும் பேரானந்த நிலையடையும் மார்க்கத்தைக் காட்டி, நாம் இம்மனிதப் பிறவி எடுத்த பயனை அடைய வழிகாட்டுகிறார். அந்த வகையில் நான் பகவான் பாபாவை இரட்டைப் பட்டத்துக்கு உரிய தகுதி கொண்ட மகானாகவே காண்கின்றேன்.

பற்று மற்றும் அன்பு என்ற பதங்களுக்கிடையே நிறைய வேறுபாடு உண்டு. பற்று என்பது சாதாரண மனிதர்கள் மத்தியில் நிலவும் பரஸ்பர ஈர்ப்பு உணர்வு மட்டுமே. மனிதனின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் உருவாகும் மனஈர்ப்பே பற்று எனக் கொள்ளப்படுகின்றது. இப்பற்று சந்தர்ப்பச் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றமுறத்தக்கது. பற்று என்பது நிபந்தனையின் அடிப்படையில் கொடுத்துப்பெறும் வகையான வியாபாரம் போன்றது. மனிதப் பிறவி எடுக்கும் எவருக்கும் மரணம் நிச்சயம்; இது நியதி; இதனை மாற்ற எவராலும் இயலாது. இந்த யதார்த்த நிலையைப் புரியவைக்கும் வகையிலமைவதே பகவானின் போதனைகளாகும்.

அன்பு என்பது தூய்மையானது; எந்த வித நிபந்தனைகளோ, கட்டுப்பாடுகளோ அற்று வியாபித்து விளங்குவது அன்பு; அதற்கு எல்லை எதுவும் கிடையாது. அன்பு காலத்துக்கு அப்பாற்பட்டது. பற்று எவ்விதம் நமது தூய உடம்புடன் சம்பந்தப்பட்டுள்ளதோ அதே போன்று அன்பு என்பது ஆத்மீகத்துடன் சம்பந்தப்பட்டது. கண்ணுக்குப் புலப்படாத அந்த இறைசக்தியை நோக்கி மனித மனத்தை ஈர்த்துச் செல்வதே உண்மையான அன்பு.

அன்பு தன்னலமற்றது; பொதுநலன் வேண்டிச் சிந்தித்துச் செயலாற்ற மனிதனைத் தூண்டுவதும் அன்பே.

இந்த ஆத்மீக விளக்கங்களைத் தம் அடியார்களுக்கு எடுத்துக்கூறி, அவர்கள் மனங்களில் சத்தியம், நேர்மை, உண்மையான உழைப்பு இவற்றின் சிறப்புகளைப் பதியவைத்து அவர்களை ஆத்மீக முன்னேற்றம் அடையச்செய்யும் வகையிலமைபவையே பகவான் பாபாவின் அருளுரைகள்.

### சத்தியம் என்றுமே மாறுவதில்லை

சத்தியம் என்றசொல்லிலே 'உண்மை' என்ற அர்த்தம் அடங்கியுள்ளது 'சத்' என்ற பதம் தந்தையையும் 'அயா' என்ற பதம் தாயையும் குறிககின்றது. எனவே, 'சத்தியா' என்ற வார்த்தை உண்மையும் கருணையும் கொண்ட பெற்றோரைக் குறிப்பதாகும் உலக உண்மைகள் யாவும் விஞ்ஞான பூர்வமான நிறுவல்களின் அடிப்படையில் அமைந்தவையே. விஞ்ஞான பூர்வமான நிறுவல்களை உண்மை எனக்கொண்டாலும் அந்த உண்மை (Facts) மாற்றமடையும் தன்மை வாய்ந்தது. ஆனால், சத்தியம் என்றுமே மாறுவதில்லை. அது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாற்றமுறாத - உறுதியான - நிலை கொண்டமைவது.

சத்தியமே கடவுள். அக்கடவுளை அடைய வழிகாட்டும் பகவான் பாபா ஒரு கண்டிப்பான, தவறுகளைத்திருத்தும் தன்மை கொண்ட - சரியானதைத் தேர்ந்தெடுக்கும் திறமையை வழங்கத்தக்க சரியான பாதைக்கு இட்டுச் சென்று வழிகாட்டும் திறன் கொண்ட - அன்பும் கருணையும் இரக்கமும் கொண்டு தம் அடியார்களுக்கு அருளும் தந்தை போன்றவர். 'அயா'



பேராசிரியர் அனில்குமார்

என்ற சொல்லின் மூலம் சுட்டிக்காட்டப்படும் அன்னை அன்புக்கு இலக்கணமாய்த் திகழ்பவள். அன்னையின் அன்புக்கு அகிலத்தில் எதுவும் ஈடாகாது. அந்த வகையில் அன்னையும் தந்தையுமாகி உலகத்து, ஜீவராசிகள் மீது அன்புமழை, கருணைமழை பொழியும் ஆண்டவன் உண்மையே வடிவானவன். இத்தகைய பண்புகள் கொண்டு நம்மத்தியில் உலா வரும் பகவான் பாபாவும் ஆண்டவனுக்கு சமமானவரே.

அதேவேளையில், ஆண்டவன் எங்கும் வியாபித்திருக்கிறான் என்ற தத்துவத்தின் அடிப்படையில் நாம் ஆண்டவனின் ஒரு பகுதியே. ஆணடவன் எங்களில் நிறைந்திருக்கிறான். ஆயினும், உலகில் சிற்றின்ப ஈடுபாட்டில் மயங்கி நாம் உண்மையில் தத்துவத்தை உணர இயலாத நிலையில் வாழ்கிறோம். இவையாவும் உலக சநதோஷங்களே. இந்தச் சந்தோஷங்கள் புலன்களுடன், நம்உடம்புடன் சம்பந்தப்பட்டவை. இச்சந்தோஷங்களுக்கு எப்போதும் இரட்டை நிலை உண்டு. இன்று சந்தோஷமளிக்கும் ஒருவிடயம். நாளை துக்கத்தைத் தருவதாக மாறக்கூடும். எனவே, இந்த லௌகீக சந்தோஷங்கள் நிலையற்றவை; மாற்றம் காணத்தக்கவை; அவற்றில் ஈடுபாடு காட்டுவதால் நாம் யோக, போக மற்றும் ரோக வயப்பட்டு எமது ஆன்மா அல்லல் உறுகிறது. இத்தகைய சிற்றின்பங்களில் மூழ்கிச் சிரமப்படுவதாலேயே நமது ஆன்மா பிறப்புக்கள் எடுத்து தனது கன்ம வினைகளை போக்க முனைகிறது.

இந்நிலையிலிருந்து ஆன்ம ஈடேற்றம்பெற வழிகாட்டுவதே பகவான் சத்திய சாயி பாபாவின் போதனைகள். எமது ஆன்மா ஆனந்த நிலையை எய்த பகவானின் வழிகாட்டல் நமக்கெல்லாம் அருமருந்தாய் அமைகின்றது.

### ஆனந்த நிலையை எய்த.....

ஆனந்த நிலை உண்மையான பக்தியினால் எட்டப்படுவதாகும். அது மனம், மொழி, வாக்கு, காயங்களுக்கு அப்பாற்பட்டது. அது பரிசுத்தமானது; அது தெய்வீகத் தன்மை கொண்டது; அதனாலேயே நாம் ஆண்டவனைப் பரமாத்மா என்கிறோம். எமது ஆத்மாக்களை ஈடேற்றும் பரமாத்மாவை எமக்கு வழிகாட்டியாக் கொள்கிறோம்.

தொகுப்பு:
பொன்வேளன்

ஒரு பலூனில் அல்லது ஒரு ரயரில் காற்று அடைக்கப்படும்வேளை அது மட்டுப்படுத்தப்படுகிறது; கட்டுப்படுத்தப்படுகின்றது.

அந்த நிலையே எமது ஆத்மாவாகும். ஆனால், பரமாத்மாவின் நிலையோ பிரபஞ்ச ரீதியில் வெட்டவெளியில் வியாபித்திருப்பது; அதற்குத் கட்டுப்பாடோ, தடைகளோ கிடையாது; அது சர்வமும் வியாபித்துள்ளது. அந்தப் பரமாத்மாவை அடையும் மார்க்கத்தை - ஞான வழியை - எமக்கெல்லாம் எமது சிற்றறிவுக்கு ஏற்ற விதத்தில் எளிமையான வழிகளில் புரிய வைக்கும் பணியில் எம்மையெல்லாம் நல்வழிப்படுத்தி ஞான மார்க்கத்துக்கு இட்டுச் செல்லும் பணியை மேற்கொண்டுள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் வழிகாட்டலில் நாம் ஆன்ம ஈடேற்றம் அடைய முயல்வோம்.

(வளரும்).

## வீதியைப் புனரமைக்குமாறு பிரதேச சபைக்கு மகஜர்

கோண்டாவில்,ஏப்.28

உரும்பிராய் மேற்கு, ஸ்ரீ வைத்தீஸ்வரா சனசமூக நிலைய வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி சனசமூக நிலைய நிர்வாகிகள் வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

அண்மையில் அப்பகுதியில் இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வில் வைத்து பிரதேச சபைச் செயலாளர் இ.இராசதுரையிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

மகஜரைப் பெற்றுக்கொண்ட வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் இ.இராசதுரை இந்த வீதியால் பயணஞ்செய்யும் மக்கள் எதிர்நோக்குகின்ற இன்னல்களைக் தானும் அவதானித்துள்ளார் என்றும் - கூடிய விரைவில இந்த வீதியை முழுமையாகப் புனரமைப்பதற்கு முயற்சி எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். நாற்பது வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாத இந்த வீதி குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இதனால், மழை காலங்களில் இவ்வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

(த-49)

## குருநகர் மீன்வாடி இப்போது திருத்தப்படுகிறது

குருநகர்,ஏப்.28

குருநகர் மீன்வாடி, குருநகர் கடற்றொழிலாளர் சங்கங்கள் மற்றும் குருநகர் குத்தகையாளர் சங்கம் ஆகியவற்றின் பங்களிப்புடன் திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. நாளாந்தம் மீன்கொட்டி விற்பனை செய்யப்படும் இடத்தில் சேதமடைந்துள்ள பகுதி மற்றும் வியாபாரிகள் அமர்ந்திருந்து மீன் விற்பனை செய்யும் மண்டபக் கூரை ஆகியவை புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இப்புனரமைப்பு வேலைகள் காரணமாக மீன் விற்பனை இந்த மீன்வாடியின் கிழக்குப் பகுதியில் நடைபெற்று வருகிறது.

இதேநேரத்தில், குருநகர் சீநோர் இராணுவ காவலரண் பகுதியில் இருந்து இந்த மீன் வாடியை பின்நோக்கிச் செல்லும் தரைப்பாதை சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது. இப்பாதை திருத்தப்படாததால் இந்த மீன்வாடியில் நாளாந்தம் மீன் வாங்கச் சென்றுவரும் பொதுமக்கள், தொழிலாளர்கள் மற்றும் மீன் வியாபாரிகள் போக்குவரத்து நெருக்கடியை எதிர் நோக்குகின்றனர்.

(த-51)

## ஞானச்சுடர் நாளை வெளியீடு

குடத்தனை, ஏப்.28

தொண்டைமானாறு செலவச்சந்நிதி ஆலய சைவகலைப் பண்பாட்டுப் பேரவையால் மாதாந்தம் வெளியிடப்படும் ஞானச்சுடர் ஆத்மீக சஞ்சிகையின் ஏப்ரல் மாத வெளியீட்டு விழா நாளை 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆலயச் சூழலில் அமைந்துள்ள ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நூலின் வெளியீட்டுரையை எஸ்.தேவதாசனும் மதிப்பீட்டுரையை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் சி.நடராசாவும் நிகழ்த்துவர்.

(த-78-36)

பாடசாலைகள் வலைபந்தாட்டம்

# 15, 19 வயதுப் பிரிவுகளில் யூனியன் மாவட்டச் சம்பியன்

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்டு வந்த வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 15, 19 வயதுப் பிரிவுகளில் வெற்றி பெற்று மாவட்டச் சம்பியனாகத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தெரிவானது.

கடந்த 23ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் உடுவில் மகளிர் கல்லூரியில் இறுதியாட்டங்கள் இடம்பெற்றன.

15 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதின. இந்த ஆட்டத்தில் 16:14 என்ற புள்ளிக்கணக்கில் யூனியன் வெற்றிபெற்றது.

17 வயதுப் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரியும் யூனியன் கல்லூரியும் மோதின. இதில் உடுவில் மகளிர் 24:21 என்ற புள்ளிக் கணக்கில் வென்றது.

19 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மெதடிஸ்த பெண்கள் கல்லூரியும் மோதின. இந்த ஆட்டத்தில் யூனியன் கல்லூரி 37:27 புள்ளிகளால் மெதடிஸ்த கல்லூரியைத் தோற்கடித்தது.

இந்த மூன்று பிரிவுகளிலும் முதலிடம், இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகள் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றவிருக்கின்றன. (3)

## தென்மராட்சிப் பிரதேச தடகளப் போட்டிகள்

தென்மராட்சி,ஏப்.28

தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் எதிர்வரும் 7, 8ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன.

கொடிகாமம் அரசினர் தமிழ் வித்தியாலய மைதானத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் போட்டிகள் நடைபெறும்.

இறுதிநாள் நடைபெறவுள்ள இறுதிப் போட்டிகளுக்கு யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார்.

தடகளப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் எஸ்.சதீஸ்குமார் மேற்கொண்டு வருகிறார்.

(3-117)

## விளையாட்டு

# கூடைப்பந்தாட்ட வீரர்களை ஒன்றுகூடுமாறு அழைப்பு

மாவட்ட அணித் தெரிவிற்காக

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட ஆண்கள் அணி விரைவில் தெரிவு செய்யப்படவிருக்கின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களுக்கு இடையில் நடைபெறவுள்ள போட்டிகளில் யாழ்.மாவட்ட அணியும் பங்குபற்றவிருக்கின்றது.

அதற்காக யாழ்.மாவட்ட அணி தெரிவு செய்யப்படவுள்ளது.

ஆகவே, கனிஷ்ட, சிரேஷ்ட வீரர்கள் அனைவரையும் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கூடைப்பந்தாட்டத் திடலில் ஒன்று கூடுமாறு யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்க செயலாளர் சு.அகிலன் கேட்டுள்ளார். (த-190)

# மகளிர் உதைபந்தாட்டம் பத்து அணிகள் களத்தில்

## ரசிகர்கள் கிண்டல் செய்யக்கூடாது என அறிவுறுத்து

வலி.வடக்கு,ஏப்.28

குடாநாட்டில் உதைபந்தாட்டத் துறையில் முதற்றடவையாக பல மகளிர் அணிகள் களமிறங்கியுள்ளன.

பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடைபெறும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டிகளில் அந்த அணிகள் பங்குபற்றி வருகின்றன.

தென்மராட்சியில் ஆறு கழகங்களும் கரவெட்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் தலா இரண்டு கழகங்களுமாக மொத்தம் பத்து அணிகள் களமிறங்கியுள்ளன.

கடந்த வருடமே யாழ்.பிரதேச செயலர் பிரிவில் மகளிர் அணிகள் உதைபந்தாட்டப் போட்டியில் பங்குபற்ற ஆரம்பித்துவிட்டன. ஆனால், இந்த ஆண்டில் கூடுதலான அணிகள் களம் இறங்கியுள்ளதாக விளையாட்டுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

மகளிா அணிகள் ஆட்டங்களில் பங்குபற்றும் போது அவர்களின் உடல், உள நிலை பாதிக்காத வகையில் போட்டிகளை நடத்த வேண்டியுள்ளதால் ரசிகர்கள் ஆட்டத்தை ரசிக்கும் போது தேவையற்ற வகையில் கிண்டல் செய்யக்கூடாது என அறிவுறுத்தப்படுகின்றனர்.

இத்துறையில் மகளிர் மேலும் சிறப்பாக மிளிர்வதற்கு ரசிகர்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று விளையாட்டுத் துறைசார்ந்தோரும் விளையாட்டு அபிமானிகளும் சுட்டிக்காட்டுகின்றனர். (3-86)

வீரவேங்கை காவேரி நினைவு

# வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டி மின்னொளியில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

வீரவேங்கை காவேரி ஞாபகார்த்தமாக தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவில் வட-அல்வை இளங்கோ விளையாட்டுக்கழகம் மினனொளியில் நடத்தும் வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்று முதல் மூன்று தினங்கள் இடம்பெறும் இச்சுற்றுப்போட்டியின இறுதியாட்டம் நாளை மறுதினம் நடைபெறும்.

இறுதியாட்டத்தில் பிரதம விருந்தினராகப் பொறியியலாளர் வே.சிவயோகன் கலந்துகொள்வார்.

இந்தச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு.

❋ வல்வை வி.க. எதிர் தீப ஜோதி வி.க.

❋ பருத்தித்துறை ஐக்கிய வி.க. எதிர் ஆவரங்கால் மத்தி வி.க.

❋ மதியொளி 'பி' வி.க. எதிர் நக்கீரன் வி.க.

❋ சென். தோமஸ் வி.க. எதிர் விக்கிரமன்ஸ் வி.க.

❋ மகாத்மா வி.க. எதிர் மதியொளி 'ஏ' வி.க.

(3)

## சங்கானையில் விளையாட்டுப் போட்டி

சங்கானை,ஏப்.28

சங்கானை சிலம்புப்புளியடி இந்து இளைஞர் மன்றத்தினரால் வருடந்தோறும் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டி நாளைமறுதினம் சனிக்கிழமை சங்கானை ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

நாளை நடத்தப்படும் மரதன் ஓட்டப்போட்டி மைதானத்தில் இருந்து புறப்பட்டு சங்கானைச் சந்தை, சித்தன்கேணி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, பிரான்பற்று ஊடாக மைதானத்தை மீண்டும் வந்தடையவுள்ளதாகவும் இப்போட்டியில் வயது வித்தியாசமின்றி எவரும் பங்குகொள்ளலாம் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(3-29)

# நல்லூர் கல்விக் கோட்டத்தின் மெய்வன்மைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.28

நல்லூர் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் பூர்த்தியாகியுள்ளன.

இந்தப் போட்டிகளில் 11, 13, 15 வயதுப் பிரிவுகளின் முடிவுகள் நேற்றைய உதயனில் வெளியாகின.

17, 19 வயதுப் பிரிவுகளின் முடிவுகள் வருமாறு:

### 17 வயதுப் பிரிவு

#### ஆண்கள்

**100 மீற்றர் -** எஸ்.சியாம்குமார் (யாழ். இநதுக கல்லூரி), பி.நவயுகன் (யாழ்.இந்துக் கலலூரி), ஜீ.தணிகைவாசன் (பெரியபுலம் ம.வித்தி.).

**200 மீற்றர் -** எஸ்.சியாம்குமார் (யாழ். இநதுக் கல்லூரி), யூ.தனுஷன் (கனகரட்ணம் ம.ம.வித்தி.), பி.தசாகரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**400 மீற்றர் -** ஏ.அன்ரன் (யாழ்.இந்துக் கல்லூரி), கே.தனுஷன் (யாழ்.இந்துக் கல்லூரி), பி. தசாகரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**800 மீற்றர் -** பி.சுபாகர் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ்.கோகுலராஜ் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.தினேஸ்குமார் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**1500 மீற்றர் -** எஸ்.தினேஸ்குமார் (கொக்குவில இந்துக் கல்லூரி), எஸ்கோகுலராஜ் (யாழ். இந்துக் கல்லூரி), ரி.கௌசிகன் (யாழ். இந்துக் கல்லூரி).

**நீளம் பாய்தல் -** எஸ்.சியாம்குமார் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ்.அரவிந்தன் (யாழ். இந்துக் கல்லூரி), கே.லக்ஷன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**தததி மிதித்துப் பாய்தல் -** பி.நிதர்சன் (கொககுவில் இந்துக் கல்லூரி), ரி.கோசிகன் (யாழ். இந்துக் கல்லூரி), வி.அனோஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**குண்டு எறிதல் -** எஸ்.துமேஷன் (யாழ். இந்துக கல்லூரி), கே.ஜவாகர் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.இந்துஹசன் (நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை).

**தட்டு எறிதல் -** எஸ்.வாகீசன் (யாழ்.இந்துக் கல்லூரி), எம்.விஜிதரன் (முத்துத்தம்பி ம. வித்தி.), ஜீ.நிஷாந்தன் (முத்துத்தம்பி ம.வித்தி.).

**ஈட்டி எறிதல் -** எஸ்.வாகீசன் (யாழ்.இந்துக் கல்லூரி), ரி.கபில்பிரசாத் (நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை), ஆர்.கிருஷ்ணா (நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை).

**4x100 அஞ்சல -** யாழ்.இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கனகரட்ணம் ம.ம.வித்.

**4x400 அஞ்சல் -** யாழ்.இந்துக் கல்லூரி, கனகரட்ணம் ம.ம.வித், கொக்குவில் இந்துக் கல்லூரி.

#### பெண்கள்

**100 மீற்றர் -** ஏ.மாதுரி (கனகரட்ணம் ம.ம.வித்தி.), எஸ்.சத்தியப்பிரியா (பெரியபுலம் ம.வித்தி.), ஆர்.கஜனி (நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை).

**200 மீற்றர் -** எஸ்.சத்தியப்பிரியா (பெரியபுலம் ம.வித்தி.), பி.நளாயினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஆர்.ஜஸ்மின் (கனகரட்ணம் ம.ம.வித்தி.).

**400 மீற்றர் -** எஸ்.ரபிகா (கொக்குவில் இந்துக கல்லூரி), எஸ்.ஜனனி (கொக்குவில் இநதுக் கல்லூரி), பி.நிஷாந்தினி (பெரியபுலம் ம.வித்தி.).

**800 மீற்றர் -** ஆர்.சம்சுகை (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.ரபிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆர்.ரதினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**1500 மீற்றர் -** ஆர்.சம்சுகை (கொக்குவில் இநதுக் கல்லூரி), பி.நர்மதா (கொக்குவில் இந்துக் கல்லூரி), பி.நிஷாந்தினி (பெரியபுலம் ம.வித்தி.).

**நீளம் பாய்தல் -** ஏ.மாதுரி (கனகரட்ணம் ம.வித்தி.), எஸ்.சத்தியப்பிரியா (பெரியபுலம் ம.வித்தி.), யூ.கௌசல்யா (முத்துத்தம்பி ம.வித்தி.).

**குண்டு எறிதல் -** ஏ.அபிநயா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வை.அர்ச்சனா (பெரியபுலம் ம.வித்தி.), எம்.துர்க்காஜினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**தட்டு எறிதல் -** ஜே.சர்மிளா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எஸ்.கார்த்திகா (கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தி.), வை.அர்ச்சனா (பெரியபுலம் ம.வித்தி.).

**ஈட்டி எறிதல் -** ஏ.அபிநயா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எஸ்.கோபிகா (நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலை), ரி.லக்ஷனா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**4x400 அஞ்சல் -** யாழ்.இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, முத்துத்தம்பி ம.வித்தி.

### 19 வயதுப் பிரிவு

#### ஆண்கள்

**100 மீற்றர் -** எஸ்.சனாதன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ்.சுலக்சன் (யாழ். இந்துக் கல்லூரி), வி.திவாகர் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**200 மீற்றர் -** கே.சாண்டில்யன் (யாழ். இந்துக் கல்லூரி), வி.திவாகர் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜீ.அமரேஷ் (யாழ். இந்துக்கல்லூரி)

**400 மீற்றர் -** கே.சாண்டில்யன் (யாழ். இந்துக கல்லூரி), எஸ்.ஜனகன் (யாழ். இந்துக் கலலூரி), ஆர்.செந்தூரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி),

**800 மீற்றர் -** எஸ்.ஜனகன் (யாழ். இந்துக் கல்லூரி), கே.தர்ஜினன் (யாழ். இந்துக் கல்லூரி), ரி.சாருஜன் (உயரப்புலம் ம.வித்தி.)

1500 மீற்றர் - எஸ்.சரவணபவநாதன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ்.ஜனதன் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ்.ராதேஷ் (கனகரட்ணம் ம.ம.வித்தி.).

**நீளம் பாய்தல் -** கே.சதீஸ்குமார் (யாழ். இநதுக் கல்லூரி), நி.டினேஸ் (முத்துத்தம்பி ம.வித்தி.), கே.ராகுலன் (யாழ்.இந்துக் கல்லூரி).

**குண்டெறிதல் -** எஸ்.ரஜீபன் (யாழ்.இந்துக் கல்லூரி), எஸ்.சுனிர்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.ரஜிந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**தத்திமிதித்துப் பாய்தல் -** எஸ்.ரஜிந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே.சதீஸ்குமார் (யாழ்.இந்துக் கல்லூரி), வி.திவாகர் (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**உயரம் பாய்தல் -** கே.சதீஸ்குமார் (யாழ். இந்துக் கல்லூரி), எஸ்.சாந்தன் (யாழ்.இந்துக் கல்லூரி), ரி.தினேஷ் (முத்துத்தம்பி ம.வித்தி.).

**தட்டெறிதல் -** ரி.நிறஞ்சன் (யாழ்.இந்துக் கல்லூரி), ரி.ஜெயந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.செரூஜன் (யாழ்.இந்துக் கல்லூரி).

**ஈட்டியெறிதல் -** ரி.ஜெயந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.சிவாஸ்கர் (யாழ்.இந்துக் கலலூரி), என்.சஜீவன் (யாழ்.இந்துக் கல்லூரி).

**4X100 -** யாழ்.இந்துக் கல்லூரி, முத்துத்தம்பி ம.வித்தி.,

**4X400 -** யாழ்.இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி.

#### பெண்கள்

**100மீற்றர் -** ஆர்.மீராகினி (கொக்குவில் இநதுக் கல்லூரி), எம்.ஜனனி, ஆர்.சிந்துஜா (கனகரட்ணம் ம.ம.வித்தி.)

**200 மீற்றர் -** ரி.அனுசியா (கனகரட்ணம் ம.ம.வித்தி.), இ.வினோஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆர்.மீராகினி (கொக்குவில் இந்துக் கல்லூரி).

**400மீற்றர் -** எம்.உஷாஜினி (கொக்குவில் இந்துக்கல்லூரி), ரி.தீபா (கனகரட்ணம் ம.ம.வித்தி.), ஏ.அமுசியா (செங்குந்த இந்துக் கலலூரி).

**800 மீற்றர் -** என்.சாலினி (செங்குந்த இந்துக கல்லூரி), எஸ்.கௌசிகா (கொக்குவில் இநதுக் கல்லூரி), கே.அனுசியா (செங்குந்த இந்துக் கல்லூரி).

**1,500 மீற்றர் -** என்.சாலினி (செங்குந்த இந்துக் கல்லூரி), எஸ்.கௌசிகா (கொக்குவில் இநதுக்கல்லூரி), கே.அனுசியா (செங்குந்த இநதுக்கல்லூரி).

**நீளம் பாய்தல் -** எஸ்.லாவண்யா (கொக்குவில் இந்துக்கல்லூரி), இ.வினோஜா (கொக்குவல் இந்துக் கல்லூரி), ரி.பிரியதர்சினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

**குண்டெறிதல் -** ரி.சிறிசத்தியா (கனகரட்ணம் ம.ம.வித்தி.), கே.மயூரிதினி (கனகரட்ணம் ம.ம.வித்தி.), எஸ்.தர்மினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**உயரம்பாய்தல் -** எஸ்.ஜெனிதா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ரி.தீபா (கனகரட்ணம் ம.ம. வித்தி.), எஸ்.கஜிந்தா (செங்குந்த இந்துக் கல்லூரி)

**தட்டெறிதல் -** கே.மயூரிதினி (கனகரட்ணம் ம.ம.வித்தி.), எம்.ஜரோசனா , இ.வினோஜா (கொககுவில் இந்துக்கல்லூரி).

**ஈட்டியெறிதல் -** ரி.சிறிசத்யா (கனகரட்ணம் ம.ம.வித்தி.), கே.மயூரிதினி (கனரட்ணம். ம.ம.வித்தி.), எஸ்.நிஷாந்தி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

**4X100 அஞ்சல் -** கொக்குவில் இந்துக் கல்லூரி, கனகரட்ணம் ம.ம.வித்தி., செங்குந்த இந்துக்கல்லூரி. (முற்றும்) (3-203)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**தோற்றம் - 16.12.1953**

**மறைவு - 29.03.2005**



## அமரர் யோகவதி பாலசந்திரன்

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

அன்பென்ற கண்ணியிலே எம்மையரவணைத்து
ஒன்றாக்கி வாழவைத்த அக்கா!
எமதன்புக்குரியவரே ! அன்னையென இருந்து
எமதில்லஞ் சிறக்க வாழ்ந்தவரே !
உமக்கு நாமென்ன இடர் செய்தோம் எம்மைவிட்டு
காலனுனைக் கவர்ந்தானோ !
நல்லபடி வாழுங்கள் நல்லாயிருங்கள்
என இல்லமமைத்துத் தந்தீரே !
நல்லமனம் கொண்டு நற்பண்புகள்
தான்கொண்டு நற்பணிகள் பல செய்தீரே
வெல்லமுடியாது காலனை என்றென்றியோ
சடுதியாய் எமைவிட்டுப் பிரிந்தீர் அக்கா
காலமெலாம் உன் நினைவால் கரைந்துருகி
நிற்கவிட்டீர் கண்ணின் மணியே அக்கா
ஞாலமிருக்கும் வரை உம் நினைவை நாம்
மறவோம் உங்கள் ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

-சகோதர சகோதரிகள்

உருக்கமிகு பத்தினியாய் உவந்திருந்தீர்
உற்ற துணையாய் எனக்கு
விருப்பமிகு வாழ்க்கையிலே காலமெல்லாம்
கணப்பொழுதும் பிரிந்தறியோமே
நெருக்கமிகு பாசத்தில் துடிக்கின்றேன்
யோகம் உன் நினைவில்
சுருக்கவழி கண்டு எனைப்பிரிந்து
எங்கு சென்றாய் அம்மா?

பரராஜ சேகரன் காலைப்பூசை கண்டல்லல்
உணவுண்ண மாட்டாயே
பாரெல்லாம் போற்றும் பாபா பஜனை
செய்வதையும் மறந்தனையே
ஊரெல்லாந் தேடினுங் கிடைக்காத
உத்தமியே யோகம்
நீயில்லா வாழ்வு மொரு வாழ்வா?
ஏன் தவிக்க வைத்தாயம்மா!

- கணவன்.

இன்று (28.04.2005) வியாழக்கிழமை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யோகா மருந்தகம்,
இணுவில் தெற்கு.

குடும்பத்தினர்

(44729)(51-17-34)

## விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தினது கல்வியாண்டு 2004/2005 ஆம் ஆண்டுக்குரிய பட்டப்பின் பொது நிர்வாகக் கற்கைநெறியின் இரண்டாம் அரையாண்டுக்குரிய விரிவுரைகள் எதிர்வரும் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

வழமையான நேர அட்டவணைப்படி விரிவுரைகள் தொடர்ந்து நடைபெறும் என உயர் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி க.கந்தசாமி அறிவித்துள்ளார். (த)

## தென்மராட்சி வலய அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலையைச் சேர்நத அதிபர்களுக்கான விசேட கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் கேட்டுள்ளார். (த-204)

## வேலூர் இராமகிருஷ்ண மடத்தலைவர் சமாதியடைந்தார்

யாழ்ப்பாணம்,ஏப்.28

வேலூர் இராமகிருஷ்ண மடத்தின் 13 ஆவது உலகளாவிய தலைவர் வணக்கத்திற்குரிய சுவாமிகள் ரங்கனாதானந்த மகராஜ் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3.51 மணியளவில் கொல்கத்தாவில் சமாதியானார்.

இவரது இறுதிக்கிரியைகள் நேற்று கொல்கத்தாவில் இடம்பெற்றன.

சுவாமிகளின் மகாசமாதியை முன்னிட்டு பருத்தித்துறை இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குப் பூஜைவழிபாடுகள், பஜனை எனபன இடம்பெறவுள்ளன. (3-203)

**வேலையாள் தேவை**

பருத்தித்துறையில் உள்ள கோழிப்பண்ணையில் வேலை செய்வதற்கு ஆள் தேவை. நல்லொழுக்கம் உள்ளவரும், தங்கியிருந்து வேலை செய்யக் கூடியவரும் விரும்பத்தக்கது. மேதிலக விவரங்களுக்கு:

**ஸ்ரீராம் கால்நடைத்தீவன விற்பனை நிலையம்,**
பஸ்நிலையம்,
பருத்தித்துறை.
T.P.: 077 3086972.

(சி.42544)(42-15)

GAMA Abacus Academy™

GAMA அபாக்கஸ்

LIVE DEMO

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு
யாழ் இந்துக் கல்லூரியில் நேரடி நிகழ்வு

உங்கள் கேள்விகளும் குழந்தைகளின் பதில்களும்
356+954+658+326+781 = ?
கண்ணிமைக்கும் நேரத்தில் பதில் தரும் குழந்தைகள் காணத்தவறாதீர்கள்
GAMA அபாக்கஸ் பயிற்சிபெறும் குழந்தைகளின் அரிய செயல்கள்
உங்களால் முடியாததை உங்கள் குழந்தை சாதித்துக்காட்டுகிறான்!

- புலமைப்பரிசில் பரீட்சையில் அதியுயர் புள்ளிபெற்று சித்திபெற...
- உங்கள் குழந்தைகளின் ஞாபக சக்தி அதிகரிக்க...
- பாடசாலைக்கல்வியில் வேகமும் துல்லியமும் பெற்றிட...

இது ஏமாற்று வேலையல்ல!!
பயிற்சி மூலம் உங்கள் குழந்தையாலும் முடியும்





யாழ்ப்பாணத்தில் பயிற்சி நிலையங்கள்

| | | | |
|---|---|---|---|
| நிலவு.com<br>275, யாழ் வீதி,<br>மானிப்பாய்.<br>0777 740413 | FOCUS Net Café<br>120, அரசடி வீதி,<br>யாழ்ப்பாணம். | KMC<br>850,ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>077 6412366 | பராசக்தி அச்சகம்<br>79, கே.கே.எஸ் வீதி,<br>கொக்குவில் சந்தி |

# தமிழினத்தின் உணர்வுகளை சர்வதேசத்துக்கு உரத்து ஒலிக்க மேதினத்தில் அணிதிரள்வோம்!

## கிளிநொச்சி எழுச்சிப் பேரவை அறைகூவல்

கிளிநொச்சி,ஏப்.28

தமிழினத்தின் உணர்வுகளைச் சர்வதேச சமூகத்திற்கும், பேரினவாதிகளுக்கும் எடுத்துக் காட்டும் பொருட்டு மேதினப் பேரணியில் அனைவரும் அணிதிரள்வோம்.

- இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேதினம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

அடக்கு முறையாளர்களால் தொழிலாளர்கள் அடக்கப்பட்டு - அவர்கட்கு உழைப்பிற்குத் தகுந்த ஊதியம் மறுக்கப்பட்டு - கடுமையான தொழில்வதைப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளமையை எதிர்த்து தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட புரட்சியே இன்று சர்வதேச தொழிலாளர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இத் தினத்திலே தமிழீழ மக்கள் ஆகிய நாமும் அடக்குமுறையிலிருந்து எமது தேசியத்தைக் காக்கும் வகையில் - தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் கொள்கை இலட்சிய வேட்கைக்குச் செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு மே 1இல் கிளர்ந்து எழுவோம்.

அன்றைய தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய ஆர்ப்பாட்ட எழுச்சிப் பேரணியும் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளதால், தமிழீழ மக்கள் ஒவ்வொருவரையும் இப்பேரணிக்கு அணிதிரளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிங்கள ஆளும் வர்க்கத்தின் சிங்களப் பேரினவாதிகளால் நடத்தப்பட்டுவரும் எமது தேசிய [illegible]த்துக்கு எதிரான இன ஒடுக்குமுறைக்கு எதிராக நாம் பேரணியுடன் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்கூறும் வகையில், எமது கோஷங்களை எழுப்புவதற்கு அணிதிரளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எமது தேசியத் தலைவர் எமக்கு ஒரு படையை உருவாக்கி தமிழீழத் தாயகத்தையும், தேசியத்தையும் காப்பாற்றும் வகையில் 'அவலத்தைத் தந்தவனுக்கே அவலத்தைத் திருப்பிக் கொடு' எனும் தாரக மந்திரத்துடன் எமது போராட்டத்தை முன்னெடுத்துவருகிறார்.

இதனைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் மே 1இல் நடைபெறும் தொழிலாளர் போராட்டத்தில் பங்குகொண்டு எமது உணர்வுகளைச் சர்வதேச சமூகத்திற்கும் பேரினவாதிகளுக்கும் எடுத்துக்காட்டும் பொருட்டு, இப் பேரணியில் அனைவரும் பங்குகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-204)

## அழகியல் கலாமன்ற பிராந்திய நிலையம் பளையில் திறக்கப்படும்

வட்டக்கச்சி,ஏப்.28

கிளிநொச்சி அழகியல் கலா மன்றத்தின் பளையில் ஒரு பிராந்திய நிலையத்தினை ஆரம்பிக்கவுள்ளனர். இப்பிராந்திய நிலையம் பளைப் பிரதேச செயலகத்திற்கு அருகில் உள்ள கட்டடத்தில் இயங்கவுள்ளது.

இந்த நிலையத் திறப்பு விழா எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் இந்த நிகழ்வில பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நிலையத்தினைத் திறந்து வைக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (த-405)

## மாதாந்த கலை நிகழ்வு

வட்டக்கச்சி,ஏப்.28

கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தின் மாதாந்த கலை நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இதில் மாணவர்களது கலை நிகழ்வுகளும் 'பாடுவோர் பாடலாம்' எனும் சிறப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.(த-405)

# பாடசாலை மாணவருக்கு முதலுதவிப் பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி, ஏப்.28

வன்னி மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு பாடசாலை மாணவர்களுக்கு முதலுதவிச்சேவைப் பயிற்சி வகுப்புகளை நடத்திவருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் கடந்த மாதம் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் 3 நாள்கள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

தொடர்ந்து கிளிநொச்சி மத்திய கல்லூரி, முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம் என்பவற்றிலும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை -

மேற்படி படைப்பிரிவு மனிதவள மேம்பாட்டுப் பகுதியுடன் இணைந்து நலன் பேணும் அலுவலர்களை உருவாக்கும் பயிற்சி நெறியை ஆரம்பித்து நடத்திவருகின்றது.

அத்துடன், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் குழந்தைகளுக்கான ஒரு தொகுதி உடைகளையும் அன்பளிப்புச் செய்துள்ளது. (த்-202)

# வெதுப்பகப் பயிற்சி நிலையம் பரமன்கிராயில் திறந்துவைப்பு

பரந்தன்,ஏப்.28

'ஐ.எல்.ஓ' நிறுவன நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகம் பரமன்கிராய்ப் பகுதியில் வெதுப்பக உற்பத்திப் பொருள்கள் பயிற்சி நிலையம் ஒன்றைத் திறந்து வைத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வெளிக்கள அலுவலர் அ.சிவலிங்கம் தலைமையில் கடந்த 18 ஆம் திகதி இந்தத் திறப்பு விழா நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை கடற்புலிகளின் பூநகரிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அமுதன் ஏற்றிவைத்தார். பெயர்ப்பலகையை பொருண்மிய மதியுரையக பணிப்பாளர் மா.சுந்தரமூர்த்தி திரைநீக்கம் செய்து வைத்தார் கட்டடத்தை பூநகரிப் பிரதேச வர்த்தக சங்கத்தலைவர் திறந்து வைத்தார்.

கடற்புலிகளின் பூநகரிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர், பூநகரி அபிவிருத்தி நிறுவனத் தலைவர், பரமன் கிராய் அ.த.க. பாடசாலை அதிபர், பொருண்மிய மதியுரையக பணிப்பாளர் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்தினர். (த-202)




# மேதின ஒழுங்கமைப்புக் குழு வட்டக்கச்சியில் அமைப்பு

வட்டக்கச்சி,ஏப்.28

மேதினத்தைச் சிறந்த முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவென வட்டக்கச்சிப் பிரதேசத்தில் ஒழுங்கமைப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் கடந்த 25 ஆம் திகதி பி.ப.3 மணிக்கு வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் வட்டக்கச்சி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ச.பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட மேதின ஒழுங்கமைப்புக் குழு உறுப்பினர்களான க.சோதிமுருகேசு, சிவபாலன் ஆகியோரும் வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடர், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் அருள் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் வட்டக்கச்சிப் பிரதேச மக்கள், பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர் இணைந்து மேதினத்தன்று கிளிநொச்சியில் இடம்பெறவுள்ள ஊர்வலத்தில் தனியாக கரடிப் போக்குச் சந்தியிலிருந்து இணைவது எனவும், ஊர்திகள், காவடியாட்டங்கள் என்பனவற்றுடன இவ் அணி செல்லும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் வட்டக்கச்சிப் பிரதேச பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர், பாடசாலை அதிபர்கள், நிறுவனத் தலைவர்கள் எனப் பெருமளவானோர் பங்குகொண்டனர். (த-405)

# கிளி.ஆஸ்பத்திரிக்கு முன்பாக பஸ்தரிப்பு நிலையம் திறப்பு

கிளிநொச்சி,ஏப்28

சுனாமி கடல் அனர்த்தத்தினால் உயிரிழந்த தாளையடியைச் சேர்ந்த அமரர் இராசையா மகேஸ்வரி என்பவரின் நினைவாக அவரது புதல்வர்களினால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக அமைக்கப்பட்ட பஸ் தரிபபு நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

செல்வி. என்.தம்பிஐயா தலைமையில் நடைபெற்ற திறப்புவிழா நிகழ்வில் தரிப்பிட நிலையத்தை கிளி. மாவட்ட வைத்திய அதிகாரி சதானந்தன் திறந்து வைத்தார்.

நினைவுப் பலகையினைத் தமிழீழ நிர்வாக சேவைத் துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன் திறந்து வைத்தார். நிகழ்வில் கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் உட்படப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இப்பகுதியில் இதுவரை காலமும் பஸ் நிலையம் இல்லாததால் மக்கள் மழையிலும் வெய்யிலிலும் மிகுந்த சிரமப்பட்டனர்.

வீதியோர மரங்களுக்கு கீழ் கால் கடுக்கக் காத்திருந்தே மக்கள் பஸ் பயணத்தை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் அங்கு பஸ்நிலையம் திறக்கப்பட்டிருப்பது மிகவும் பயனுள்ளதாக அமைகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (த-395)

# நெடுங்கேணிப் பாடசாலைகளுக்கு சூரிய மின்கலங்கள் அன்பளிப்பு

## பொருண்மிய மதியுரையகம் வழங்கியது

பரந்தன்,ஏப்.28

"ரெக் யு.எஸ்.ஏ" நிறுவனத்தின் அனுசரணையுடன் பொருண்மிய மதியுரையகம் நெடுங்கேணிப் பிரதேசத்தில் 8 பாடசாலைகளுக்கு சூரிய மின்கலங்களை வழங்கியுள்ளது.

நெடுங்கேணிப் பிரதேசத்தில் மின்சார வசதியற்ற பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற அன்னை பூபதியின் அடையாள உண் ணாவிரத நிகழ்வில் வைத்து இந்தச் சூரிய மின்கலங்கள் வழங்கப்பட்டன. நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் நெடுங்கேணிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இந்திரன் தலை மையில் நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலைகளுக்கான சூரிய மின்கலங்களை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல், வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர், வவுனியா மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் குகன், பொருண்மிய மதியுரையக கணக்காளர் சு.நேசநாதன், கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் சி.விஜேந்திரா, முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் வை.விமலேந்திரன், நெடுங்கேணி வர்த்தக சங்கத் தலைவர் ஆகியோர் வழங்கினர். (த-202)



தமிழீழ வைப்பகம் ஆண்டு தோறும் சிறுவர் தேட்டக் கணக்கினைச் சிறந்த முறையில் பேணுபவரை தேசியமட்டத்தில் தெரிவுசெய்து பரிசில் வழங்கிவருகின்றது.

கடந்த வருடம் இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட கஜேந்திரன் தமிழினியன் மதுராஞ்சனுக்கு 5 ஆயிரம் ரூபா பணப்பரிசில் வழங்கப்பட்டது. இப்பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த சித்திரைப் புதுவருடத் தினத்தன்று தமிழீழ வைப்பக முல்லைத்தீவுக் கிளையில் நடைபெற்றது.

பரிசினை அங்கு வந்திருந்த பிரமுகர்களில் ஒருவரான தெய்வேந்திரன் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் முல்லைக்கிளை மேலாளரும் பரிசு பெறுபவரின் பெற்றாரும் காணப்படுகின்றனர்.

*(வட்டக்கச்சி செய்தியாளர்)*

# மூன்று கிலோமீற்றர் தூரம் தாண்டி முன்பள்ளி செல்லும் பாலகர்கள்!

## இந்த நிலை புளியங்குளத்தில்!

புளியங்குளம்,ஏப்.28

புளியங்குளம் கிராமத்தில், முன்பள்ளிகள் எவையும் இயங்குவதில்லை. இதனால் அப்பகுதி வாசிகள் தமது பிள்ளைகளுக்கு ஆரம்பக்கல்வியை ஊட்டுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இங்கு இயங்கிவந்த முன்பள்ளி கடந்த ஒன்றரை வருடகாலமாக இயங்காது உள்ளது. இதனால் சிறார்களை சுமார் 3கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள முன்பள்ளிக்கு அழைத்துச் செல்லவேண்டியுள்ளது.

இதனால் வசதி குறைந்த பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளை முன்பள்ளிகளில் சேர்க்காது விட்டு விடுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் சிறுவர் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் கவலை தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாகப் பல்வேறு தரப்பினருடனும் தொடர்பு கொண்டபோது எவ்வித பயனும் கிடைக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-204)

# மேதின நிகழ்வுக்கான ஏற்பாடுகள் மும்முரம்

கிளிநொச்சி,ஏப்.28

கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் மேதினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 18ஆம் திகதி கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மற்றும் அரச திணைக்களத் தலைவர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், முகாமையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் எதிர்வரும் மேதினத்தை எழுச்சியுடன் நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டன.

மேதின செயற்பாட்டுக் குழுக்களும் தெரிவு செய்யப்பட்டன.

(த-202)

## விபத்துக்களில் மூவர் காயம்!

தென்மராட்சி,ஏப்.28

வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்த மூவர் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கைதடிப் பாலத்தில் மோட்டார் சைக்கிள் சக்கரம் சறுக்கியதில் தவறி வீழ்ந்து கைதடியைச் சேர்ந்த பிரதீபன் (வயது 4) என்பவரும் மோட்டார் சைக்கிளினால் மோதுண்டு மீசாலையைச் சேர்ந்த க.பொன்னுச்சாமி (வயது 62) என்பவரும இரு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் மந்துவிலைச் சேர்ந்த எஸ்தங்கராசா (வயது 55) என்பவரும் காயமடைந்தனர். (த-117)

## கவிஞர் வைரமுத்துவின் 'வீழமாட்டோம்' இறுவட்டு

### சூரிச் நகரில் வெளியிடப்பட்டது

போண்,ஏப்.28

கவிப்பேரரசு வைரமுத்துவின் 'வீழமாட்டோம்' என்னும் இறுவட்டு சுவிஸர்லாந்தின் சூரிச் நகரில் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த 10ஆம் திகதி சூரிச்சில் நடைபெற்ற அன்னையர் இல்லத்தின் 'முகிழ்ப்பு' நிகழ்விலேயே இந்த இறுவெட்டு வெளியிடப்பட்டது. இந்த வெளியீட்டு நிகழ்வில் கௌரவவிருந்தினராகத் 'தமிழினி மஞ்சரி'யின் ஆசிரியர் வ.மா.குலேந்திரன் கலந்துகொண்டார்.

இதுவரை 5ஆயிரத்து 600 பாடல்கள் திரைப் படத்திற்காக இயற்றியுள்ளார் கவிஞர் வைரமுத்து அதில் 4 பாடல்கள் மட்டுமே எழுதிய பின்னர் மெட்டமைக்கப்பட்டன. ஏனைய பாடல்கள் யாவும் மெட்டுக்களுக்கு அமைவாகவே இயற்றப்பட்டன எனவும் கவிப்பேரரசர் கூறினார் என்று தமிழினி மஞ்சரி ஆசிரியர் தெரிவித்தார்.

சூரிச்சில் கவிப்பேரரசுக்கு 'இதிகாச நாயகன்' பட்டம் வழங்கப்பட்டு பதக்கம் அணிவிக்கப்பட்டது. ஆயினும், அவர் தங்கத்தை சுனாமி நிதிக்கு வழங்கினார். 'பட்டம் எனக்கு, பதக்கம் நிதிக்கு' என்று கவிப்பேரரசு கூறியிருந்தார்.(த-202)


THE HALO TRUST

**Wanted A Plant Operator**

The Applicant should have the following qualifications:

- Experience in Excavations plants
- Previous experience required preferably with Caterpillar, Case & Terex -

Salary: Rs.12,000.00

**Please send your CVs within seven Days to:**

The Program Manager,
The HALO Trust,
655, Navalar Road, Nallur,Jaffna. (44736)



THE HALO TRUST

**Wanted a Medical Officer (Para Medic)**

The Applicant should have the following qualifications:

- Knowledge in Training workers in First Aid Training & casualty handling
- Experience in Accident Emergency & Dealing with Trauma Injuries.
- Fully Trained Para Medic Nurse or Doctor.
- Physically fit
- Excellent Command in Tamil & English
- Work outside Jaffna District when required
- Should posses a valid driving licence
- Knowledge in MS Office
- Required to manage 60 Para medics & Supplies

Starting Salary Rs.20,000.00

Please send your CVs within seven Days to :

**The Program Manager**
**The HALO Trust**
**655, Navalar Road,**
**Nallur, Jaffna.**

(44735)


## பட்டதாரிகளுக்கு போட்டிப்பரீட்சை

யாழ்ப்பாணம்,ஏப்.28

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவால் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள வெற்றிடங்களைப் பட்டதாரிகள் மூலம் நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் கீழுழைப்புப் பட்டதாரிகளுக்கான இப்போட்டிப்பரீட்சை எதிர் வரும் 8ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்கு 6ஆயிரத்து 134 பட்டதாரிகள் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டு வருவதாக வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (த-202)

## தென்மராட்சியில் 'நியாப்' திட்டக் கூட்டங்கள்

தென்மராட்சி,ஏப்.28

'நியாப் II' திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டம் பற்றி கிராம மக்களுக்கு அறிமுகம் செய்யும் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

இக்கூட்டங்கள் மே 6, 9, 10 ஆகிய திகதிகளில் அந்தந்தக் கிராமங்களில் பிரதேச செயலர் தலைமையில் நடத்தப்படவுள்ளன.

6 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கைதடி கிழக்குப் பிரிவிலும் பி.ப.3.00 மணிக்கு வெள்ளாம் போக்கட்டிப் பிரிவிலும்.

9 ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு மண்டுவில் பிரிவிலும் - 10 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு குடமியன் பிரிவிலும் பி.ப.3.00 மணிக்கு கரம்பைக்குறிச்சி பிரிவிலும் - கூட்டங்கள் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-117)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஏப்.28

அளவையூர் பண்டிதர் க.நாகலிங்கத்தின் 'செந்தமிழ் இலக்கண விளக்கம்' மூன்றாம் பாகம் அகத்திணையியலும் புறத்திணையியலும்' என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் காலை 9 மணிக்கு அளவெட்டி மஹாஜனசபை வாசிகசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ் சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இணுவில் வைத்தியசாலை டாக்டர் வை. யோகேஸ்வரன் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா, விகடகவி மு. திருநாவுக்கரசு ஆகியோர் கலந்துகொள்வர்.

நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கவிஞர் சோ. பத்மநாதனும் நயப்புரைகளை கலாநிதி பண்டிதர் செ. திருநாவுக்கரசு, பா.மகாலிங்கம், பண்டிதர் இரா. சுப்பிரமணியம், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி அ.சண்முகதாஸ், சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோரும் நிகழ்த்துவர்.

(த-202)


## 7ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 - 04 - 1912



உதிர்வு 28 - 04 - 1998

**திருமதி இராசசேகரம் அரசரத்தின அம்மாள்**

ஆண்டுகள் ஏழு ஆகிவிட்டபோதிலும்
உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை
என்றும் உங்கள் நினைவுடனேயே நாங்கள்
இப்பூவுலகில் வாழ்கின்றோம்.

9, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.



## அறிவித்தல்

### வடக்கு - கிழக்கு மாகாண சபை மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்.
விளையாட்டுத்துறை. இளைஞர் விவகார அமைச்சின் கீழுள்ள
பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை
நிரப்புவதற்காகப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2005

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் தினக்குரல், உதயன், தினமின, டெயிலி நியூஸ் ஆகிய பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்ட மேற்படி போட்டிப் பரீட்சையினை 2005மே மாதத்தில் நடத்துவதற்குப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்குரிய வினாப்பத்திரங்கள் ஏற்கனவே விளம்பரப்படுத்தப்பட்டவாறு அன்றி பின்வருமாறு அமையும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அறியத்தந்துள்ளார் என்பதைச் சகல பரீட்சார்த்திகளுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

1ஆம் வினாப்பத்திரம் - 'உளச்சார்பு' 50 பல்தேர்வு வினாக்கள் - நேரம் 1 மணித்தியாலம்

இது தேர்வு நாடியினது தர்க்க ரீதியான நியாயிப்புத் திறனையும், வாய் மொழியாகவன்றி, பிற வழிகளால் முன்வைக்கப்படும் தகவல்கள் பற்றிய செவ்விய அனுமானங்களைப் பெறுவதற்கான இயலுமையையும் மதிப்பீடு செய்யும் வகையிலமைந்த வினாத்தாளாகும்.

2ஆம் வினாப்பத்திரம் - கிரகித்தல், 04 வினாக்கள் - நேரம் 1 மணித்தியாலம்

தேர்வு நாடிக்குச் சில வாசிப்புப் பகுதிகள் வழங்கப்படும். அவ்வாசிப்புப் பகுதிகளுள் சிலவற்றிற்குச் சில மாற்றுக் கூற்றுகளும் கொடுக்கப்படும். அம் மாற்றுக் கூற்றுகளில் ஒன்றின் பொருளடக்கம் இவ்வாசிப்புப் பகுதியின் பொருளடக்கத்துடன் சிறப்புறப் பொருந்தியிருக்கும் தேர்வு நாடி மிகப் பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்தல் வேண்டும்.

ஏனைய வாசிப்புப் பகுதிகள் தொடர்பில், அவற்றின் பொருளைத் தேர்வுநாடி புரிந்து கொள்ளும் விதத்தைச் சோதிக்கும் வகையில் வினாக்கள் தயாரிக்கப்படும்.

**வே.பொ.பாலசிங்கம்,**
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம். (சி/42553)(42-33-14-45)



## தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

பணிநிலை: உத்தியோக உதவியாளர் தரம் -03

தகைமைகள்: க.பொ.த. (சாதாரணதர) தேர்வில் கணிதம் 42/கணிதம் II, தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க.பொ.த. (உயர்தர) தேர்வில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்: $\frac{3,670 - 5,070}{70 \times 20} + 6,000$

அகவை எல்லை: 19 - 25 ஆண்டுகள்

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவுசெய்யப்பட்டுக் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் **"ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை - உத்தியோக உதவியாளர் தரம் - 3"** எனக் குறிப்பிடப்பட்டு 2005-05-31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல்வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும் மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக்கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**மனிதவள மேலாளர்,**
**மனிதவளப் பகுதி, நடுவப்பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

குறிப்பு: ☞முழுமையாக நிறைவுசெய்யப்படாத, சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.

☞நிறைவுசெய்யப்பட்ட வேண்டுகைகளைப் பதிவுத்தபாலில் (**மனிதவள மேலாளர், மனிதவளப்பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ். சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி எனும் முகவரிக்கு**) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம்.

(சி-42551)(26-33-14-45)



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு இலக்கம் | 673 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 26-4-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4437663-4452456 |

வெற்றி இலக்கங்கள்

**16 23 28 42**

லக்கினம் மிதுனம்

ஜக்பொட் பரிசு ரூபா.20,37,400/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமை ரூபா. 27,68,350/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தம் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,27,599 | 10/- | 32,75,990/- |
| 2.இலக்கங்கள் | 30,110 | 20/- | 6,02,200/- |
| 1.இல + லக்கினம் | 29,547 | 30/- | 8,86,410/- |
| 2.இல + லக்கினம் | 2,774 | 100/- | 2,77,400/- |
| 3.இலக்கங்கள் | 605 | 500/- | 4,02,500/- |
| 3.இல + லக்கினம் | 73 | 5,000/- | 3,65,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 20,37,400/- | - |
| மொத்தம் | 3,90,916 | - | 71,61,750/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 71,61,750/-

4444950-4-23
4450922-1-93
4448735-1-90
4440710-0-41
4447584-2-92

## 30.04.2005
## 60ம் நாள் நினைவு
### அந்தியேட்டி



## திருமதி. தர்மசரோஜினி பஞ்சரட்ணம்

**இரண்டாம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.**

**ஓய்வுபெற்ற ஆசிரியை-பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் நிலைக் கல்லூரி**

28.02.2005 ல் இறையடி சேர்ந்த திருமதி தர்மசரோஜினி பஞ்சரட்ணம் அவர்களின் 60ம் நாள் அந்தியேட்டிக் கிரியையும் மதிய போசனமும் 30.04.2005 சனிக்கிழமை கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் மருதநகரில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் இத்தகவலை ஏற்றுக்கொண்டு சமூகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம். கால இடைவெளி போதாத காரணத்தால் தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்பமுடியாமைக்கு வருந்துகிறோம்.

அன்னார் நோயுற்றிருந்தபோது பேருதவி நல்கிய கிளிநொச்சி பொன்னம்பலம் வைத்தியசாலை மற்றும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள், ஏனைய பணியாளர்களுக்கும் இறப்பின் பின் பல வழிகளிலும் உதவி நல்கிய துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள், அருட்தந்தையர், அருட்சகோதரிகள் மற்றும் நேரில் வந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எங்கள் துயரில் பங்கு கொண்ட எல்லோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**வே. கு. பஞ்சரட்ணம்**
ஓய்வு பெற்ற அஞ்சல் அதிபர்
**திருமதி காயத்திரி யூட் (மகள்)**
மருதநகர், பரவிப்பாஞ்சான்,கிளிநொச்சி.

## ஆசிரியர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 28

தென்மராட்சிக் கல்வி வலய ஆசிரியா களுக்கான விசேட கலந்துரையாடல்கள் நாளை வெள்ளிக் கிழமை நண்பகல் 12.30 மணிக்கு பிர தேச ரீதியாக நடை பெறவுள்ளது.

கொடிகாம பிர தேச ஆசிரியர்களுக்கு திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் சாவகச்சேரி பிரதேச ஆசிரியர்களுக்கு சாவ கச்சேரி இந்துக் கல் லூரியிலும் கைதடி பிர தேச ஆசிரியர்களுக்கு கைதடி முத்துக்கும ராசாமி வித்தியால யத்திலும் நடைபெற வுள்ளது என வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சகல ஆசிரியர்க ளையும் இதில் தவ றாது கலந்துகொள்ளு மாறும் அவர் கேட் டுள்ளார். (எ)


## படிவம்

நிதி மற்றும் நிதி மறு சீரமைப்பு, தேசிய பௌதி கத் திட்டமிடல் வனசீவ ராசிகள் பாதுகாப்பு, சமூக சேவை ஆகிய திணைக் களங்களில் உள்ள வெற் றிடங்களுக்குப் பட்டதா கள் விண்ணப்பிப்பதற் கான படிவம் உண்டு.

**BHARATHY PATHIPPAKAM**
430, K.K.S. Road, Jaffna.
(சி-42552)(29-18-12)


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை நித்தியானந்தம்



நாராந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சின்னத்துரை நித்தியானந்தம் அவர்கள் 27.04.2005 அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை முத்துக்குட்டியின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பு முதலியநாச்சியின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சுப்புலெட்சுமியின் அன்புக் கணவரும் திருநிதி, காலஞ்சென்ற திருச்செல்வி, இராஜ்குமார், சுதாகரன், இராஜ்கரன், சுரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற செல்வரத்தினம் (கொழும்பு துறைமுகக் கூட்டுத்தாபனம்), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் புண்ணியமூர்த்தி, கலியாணசுந்தரம், இராசலெட்சுமி, இராசரெத்தினாம்பாள் காலஞ்சென்ற ஸ்ரீபாலன், கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் சிவமூர்த்தி, புஸ்பகலா, ஸ்ரீபிரியா, துஜாதா ஆகியோரின் மாமனாரும் சிவஜா, சிவராஜ், சிந்துஜா, மயூரன், கஜீவன், குகதர்சினி, குகபிரியா, குகாஞ்சலி, கிருத்திகா, சஜிபிரகாஸ், துவாரகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது சகோதரியின் இல்லத்தில் இன்று (28.04.2005) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திமிங்கலப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாரந்தனை வடக்கு,*
*ஊர்காவற்றுறை.*

தகவல்:
இராஜ்குமார்
(மகன் - அப்பன்),
தீபன் (மருமகன்).

(44747)(18-12-29)

## பெரியான் நாகேஸ்



கல்லூரி வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியான் நாகேஸ் அவர்கள் (26.04.2005) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கமலரின் அன்புக் கணவரும் சுரேஸின் அன்புத் தகப்பனாரும் சிவாஜினியின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற துரைராசா மற்றும் சுந்தரம், தங்கராணி, சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.05.2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் கல்லூரி வீதி இளவாலையில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இளவாலை, மட்டிவளை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி வீதி,*
*இளவாலை.*

(44746)(18-12-29)

தகவல்:
குடும்பத்தினர்.

## நாகமுத்து நவரத்தினம் (பொலிஸர்- நயினாதீவு)



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து நவரத்தினம் அவர்கள் 25.04.2005 திங்கட்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - பொன்னு தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் கமலராணி (கனடா), கலாராணி, உதயகுமார் (கனடா), சந்திரகுமார் (ஜேர்மனி), காலஞ்சென்ற ரூபராணி மற்றும் வசந்தராணி, இராசகுமார் (உரிமையாளர் - ஸ்ரீவாரி ஸ்ரோர்ஸ், கொழும்பு-13), தாரணி, காலஞ்சென்ற திலீப்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வகுமாரன் (கனடா), சிவகடாச்சம் (வர்த்தகர்), செந்தில்செல்வி (கனடா), கவிதா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் சுரேஸன், மதீஸன், ஜெஸ்மீன், கஜன், சுஜீவா, சஞ்சீவன், சயிற்றா, பயிற்றா, பூசணன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், குணரத்தினம் மற்றும் இராசரத்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மீனாம்பிகை, நடராசா, தனலட்சுமி, நாகராசா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இராசம்மா நவரத்தினம்
(மனைவி).

*நயினாதீவு -5.*

(44742)(18-12-29)

## திருமதி கார்த்திகேசு தெய்வானை



அனலைதீவு, 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1/13, பலாலி வீதி, 2 ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் தற்போது 93/13, இராசாவின் தோட்டத்தில் வசித்து வந்தவருமாகிய திருமதி கார்த்திகேசு தெய்வானை நேற்று முன்தினம் (26.04.2005) செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் அன்பு மனைவியும் அம்பலவாணர் தம்பதியின் மூத்தமகளும் கந்தையா தம்பதியின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கனகாம்பிகை மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, தம்பையா மற்றும் சுந்தரம் (கனடா), மயில்வாகனம், இரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கந்தசாமி, யோகேஸ்வரி, கணேசலிங்கம் (ராசன் - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராணி, சாந்தினி, காலஞ்சென்ற சின்னராசா ஆகியோரின் மாமியாரும் கேசிகா, சாருஜன், சாருஜா, பிரதீபன் ஆகியோரின் அப்பம்மாவும் சாந்தி, குகபரன், மைதிலி ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2005) வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் 93/13, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.மயில்வாகனம்
(மைத்துனர்).

*93/13, இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

(44743)(18-29-12)

# கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினர் திரு. ச.கிருபாகரனின் தந்தை

## தா.சடாசிவம்

**அவர்கள் கடந்த 21.04.2005 இல் இயற்கையெய்திவிட்டார்.**

**அன்னாரின் இழப்பால் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.**

நலன்புரிக் கழகம்,
வடமராட்சிக் கல்வி அலுவலகம், புலோலி.

**27.04.2005** (சி-42555)(29-18-12)


## SUBRA (14) சித்தன்கேணி

**A/L 2007** கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள் புதிய பிரிவு ஆரம்பம்.

01.05.2005 ஞாயிறு மாலை 3 மணி

★ ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
★ எமது ஆசிரியர்கள் தரமானவர்கள், தகுதியானவர்கள், நிரந்தரமானவர்கள்.
★ கடந்த கால மாணவரின் பெறுபேறே எமது திறமை

**O/L DAY CLASS** புதிய பிரிவு ஆரம்பம் 02.05.2005 திங்கள் காலை 7 மணி

★ திங்., செவ்., புத., வியா., வெள்.
காலை 7.00 - 12.00 மணிவரை
★ மாதாந்த்ம் மீட்டலும், பயிற்சிப் பரீட்சைகளும்
★ கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு
★ அனுமதிக்கு முந்துங்கள்
இப்பிரிவில் 50 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
★ சிங்களம்:- லீலாக்கிருஷ்ணன் வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

(சி-42548)(29-18-12)

## பெண் பாடகிகள் தேவை

**யாழ். மண்ணின் முன்னணி இசைக்குழுவான "ஆனந்" இசைக்குழுவிற்கு பெண் பாடகிகள் தேவைப்படுகின்றனர். திறமையும் ஆர்வமும் உள்ளவர்கள் (30.04.2005) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:**

A. ராஜ்குமார்,
K.K.S. Road
(விஷ்ணு வீடியோ முன்பாக)
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

மேலதிக தகவல்களுக்கு
T.P.: 077-6008447,
077-6102877,
222-3604.

(44739)(29-18-12)

## லக்ஷ்மி சினிமா இணுவில்

ரஜனி, அம்பிகா நடித்த

### நான் சிவப்பு மனிதன் (ரீஸ்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

(C/41381)(29-16-17)

## ராஜா யாழ்ப்பாணம்

பிரவீன், ரீமாசென், பரத், விவேக் நடித்த

### செல்லமே (ரீஸ்ஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 9.30 (பு.நே.)

விரைவில் 4. ஸ்ருடன்ஸ்

(C/41381)(29-16-17)

## நாதன்ஸ் சினிமா

யுவராஜ், சங்கீதா, விவேக் நடித்த

### தகதிமிதா

கா.நேரம்:
10.30.2.30. 6.30. 9.30 (பு.நே.)

## மனோகரா யாழ்ப்பாணம்

விஜய், ஹரிணி, வடிவேலு நடித்த

### சச்சின்



காட்சி நேரம்:
10.30 a.m., 2.30. p.m., 6.30p.m., 9.30 p.m.

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இரண்டாவது வெற்றி வாரம்
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த



காட்சிகள்:
11.00. 3.00. 7.00
10.00. (பு.நே.)


# மரண அறிவித்தல்

## திருமதி சண்முகம் புவனேஸ்வரி



சுன்னாகம், சந்தவளவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சண்முகம் புவனேஸ்வரி நேற்று (27.04.2005) புதன்கிழமை காலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - நாகிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - மீனாட்சி ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சண்முகத்தின் (ஐயாத்துரை) அன்பு மனைவியும் சிறிதரன் (சங்கானை), சிறிரதி (கொழும்பு), சிறிறஜனி (ஜேர்மனி), சிறிகுமுதினி (ஜேர்மனி), சிறிவதனி (ஜேர்மனி), சத்தியசிறி, சிறிபாலதாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் புஸ்பவதி (சங்கானை), காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் லோகநாதன் (சங்கானை), கணேசமூர்த்தி (கொக்குவில்), ராஜமனோ (கரவெட்டி), சந்திரகாந்தன், ஜஸ்மின் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் செல்லம்மா, காலஞ்சென்ற முருகேசு மற்றும் கந்தையா, ஆறுமுகம் (கனடா), குமாரசாமி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விஜயானந்தன் - பபிதா, ராகிதா, வினோப்ராஜ், பிரதா, துக்ஷா, பிரதிலீப், தர்சிகா, கௌசிகா, மதிசூதனா, நித்திலன், கபிலன், சயித்தனா, சாகித்தியன், ஆதீசன், ஆதீசனா, கரிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்தவளவு,*
*சுன்னாகம்.*

(44740)(29-18-12)

தகவல்:
சிறிதரன் (மகன்),
T.P.: 0712709866

# நோர்வே புதிதாக முன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கு விஜயம் செய்திருந்த சமயத்தில் உத்தேசத் திட்டத்துக்குப் புதிய திருத்த யோசனை ஒன்றை நோர்வேத்தரப்பு சமர்ப்பித்தது. இவ்விடயம் குறித்தும் புதிய திருத்த விவரம் குறித்தும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் தொலைபேசி மூலம் லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துக்கும் தகவல் தெரிவித்திருந்தார்.

அந்தத் திருத்த யோசனையை அப்படியே தாங்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள் எனப் புலிகளின் தலைமை நோர்வே அனுசரணைத் தரப்பினருக்கு அறிவித்துவிட்டதாக புலிகளின் உயர் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. ஆனால், அந்தத் திருத்த யோசனை தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாடு என்னவென்று இன்னும் தெரியவரவில்லை. இவ்விடயத்தில் திட்டவட்டமான பதில் ஒன்றைத் தராமல் அரசுத் தரப்பு இழுத்தடித்து வருவதாகப் புலிகள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது தொடர்பான விவகாரத்தில் கடல் விடயம் சம்பந்தமான அம்சத்திலேயே அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இணக்கம் ஏற்படாத நிலைமை நீடிக்கிறது என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

கடல் விவகாரத்தில் முக்கிய மூன்று அம்சங்களில் இணக்கம் ஏற்படவில்லை எனத் தெரிகின்றது.

★ ஆழிப்பேரலையின்போது கடல் அள்ளிச் சென்ற பொருள்களைக் கடற்பகுதியிலிருந்து மீட்டல்.

★ சேதமுற்ற சிறிய துறைமுகங்கள், துறைகள், ஜெற்றிகள், இறங்குதுறைகள், மீன்பிடித் துறைகள் போன்றவற்றைச் சீர்படுத்தித் திருத்தி அமைத்தல்.

★ கடற்கரையோரத்தில் படகுகள் கட்டுமிடங்கள் உட்பட ஏனைய கரையோரப் பிரதேசங்களைப் புதுப்பித்து மீள அமைத்தல்.

இந்த மூன்று விடயங்களும் அரசும் புலிகளும் சேர்ந்து அமைக்கும் உத்தேசப் பொதுக்கட்ட[illegible]ின் பொறுப்பாக இருக்கவேண்டும் என்று [illegible]த் தரப்பு சமர்ப்பித்த மூல யோசனைத் [illegible] தெரிவிக்கப்பட்டிருந்தது.

[illegible]திட்டத்தைப் புலிகள் ஏற்றனர். ஆனால், [illegible]ப்பினர் அதனை ஏற்கமறுத்தனர்.

[illegible] விடயத்திற்கு இணங்கினால் வடக்கு [illegible] அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குட்பட்ட திரு[illegible]மலை, மட்டக்களப்பு, காங்கேசன்துறை [illegible]ான்ற இடங்களில் உள்ள துறைமுகங்கள் ம[illegible]றும் கரையோரப் பிரதேசங்களைச் சீர் செய்[illegible]் பொறுப்பும் விடுதலைப் புலிகளை அதிகமா[illegible] கொண்ட - அல்லது புலிகளின் செல்வாக்கு [illegible] - உத்தேச பொதுக்கட்டமைப்பிடம் போய்ச் [illegible]ந்துவிடும். அரசின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்[illegible]லயே அரசின் முக்கிய அதிகாரமும் பறிபோய் [illegible]டும்" - என அரசுத் தரப்புக் கருதியது. அதனால், [illegible]த்திட்ட யோசனையை ஏற்க முடியாது என [illegible]சுத் தரப்பு ஆரம்பத்திலேயே அடித்துக் கூறி[illegible]டது.

அதனால் இத்திட்டத்திற்குப் புதிய திருத்தம் ஒன்றைப் புலிகள் முன்வைத்தனர்.

- அதன்படி கடல் அதிகாரம் தொடர்பான மேற்படி மூன்று விடயங்களினதும் பொறுப்பு உத்தேசப் பொதுக்கட்டமைப்பிடம் இருந்து விலக்கப்பட்டது. இந்த மூன்று விடயங்களையும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புலிகளும், அரசுக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசும் கவனிக்கும் என்றதொனியில் உத்தேச உடன்பாட்டில் வாசகங்களையும் சேர்த்துக் கொள்ளலாம் எனப் புலிகளின் திருத்த யோசனை தெரிவித்தது.

ஆனால், அதையும் ஏற்றுக்கொள்ள இலங்கை அரசுத்தரப்பு மறுத்தது.

மேற்படி கடல் அதிகாரம் தொடர்பான விடயங்களைப் புலிகளின் பிரதேசத்தில் புலிகளே கவனித்துக்கொள்ளலாம் என்பதை எழுத்தில் ஒப்புக்கொண்டால், அது கடலிலும் கடற்கரையோரத்திலும் தாம் விரும்பியவற்றைப் புலிகள் செய்வதற்கு ஒப்புதலும், அதிகாரமும் அரசே வழங்கியதாகிவிடும் என்றும், முல்லைத்தீவுத் துறைமுகத்தைக் கடற்புலிகளின் செயற்பாட்டுக்கு இயைந்த வகையில் புலிகள் சீரமைத்தாலும் கூட தடுக்க முடியாது போய்விடும் என்றெல்லாம் அரசுத் தரப்பு வியாக்கியானம் கூறியது.

அதனால், அந்தக் கடல் அதிகாரம் புலிகளுக்குக் கிடைக்கக்கூடியதான எந்த உடன்பாட்டுக்கும் வரமுடியாது என அரசுத் தரப்பு பிடிவாதம் பிடித்தது.

ஆனால், புலிகளும் தமது நிலைப்பாட்டிலிருந்து இறங்க - இணங்க - மறுத்தனர்.

"ஆழிப்பேரலை கடல் ஓரத்தைத்தான் தாக்கியது. கடலோரப் பிரதேசத்தைச் சேர்ந்தோருக்குத்தான் நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளைச் செய்யவேண்டியிருக்கிறது. அதைக் கூடச் செய்ய இணக்கமும் அதிகாரமும் தராத எந்தத் திட்டத்தையும் ஏற்க முடியாது" எனப் புலிகள் அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறினர்.

அதனைத் தொடர்ந்தே இவ்விடயத்தில் ஓர் இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியாக - பிந்திய - ஆகக் கடைசியான யோசனை ஏற்பாடு ஒன்றை நோர்வே பிரேரித்தது. இந்தக் கடலோரப் பிரதேச சீர்திருத்த நடவடிக்கை மூலம் புலிகள் ஏதேனும் இராணுவ நன்மைகளை அடைந்து விடுவார்கள் என்று அரசுத் தரப்பு கருதுமானால் - இந்தக் கடலோரச் சீர்திருத்தப் பணிகளைப் புலிகள் முன்னெடுப்பதாயின் - சர்வதேச அமைப்புக்களின் கண்காணிப்போடுதான் அதனை அவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்ற வாசகத்தை உத்தேச உடன்பாட்டில் சேர்த்துக்கொள்ளலாம் என்பதே நோர்வேத் தரப்பின் பிந்திய யோசனையாகும்.

அந்தப் பிந்திய யோசனையையும் தாங்கள் ஏற்கிறார்கள் எனப் புலிகள் நோர்வேக்குத் தெரிவித்துவிட்டனர். ஆனால், அரசுத் தரப்பிடமிருந்து இந்த விடயம் தொடர்பாக இதுவரை தெளிவான பதிலோ - பிரதிபலிப்போ - இன்னும் வரவில்லை என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (க-எ)

## கூட்டுக் கட்சிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தன. பெரும்பாலும் இந்தப் பேச்சு இன்று நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும் இப்பேச்சின் போதும் ஜே.வி.பி. தனது நிலைப்பாட்டை ஜனாதிபதியிடம் மாற்றமின்றி எடுத்துக்கூறுமென்று ஜே.வி.பி.யின் முக்கிய அமைச்சரொருவர் தெரிவித்தார். (எ-க)

## செங்கலடியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையிலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. மரணவிசாரணையின் பொருட்டு சடலம் வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவத்தின்போது வேறு எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று பொலீஸார் கூறினர். சந்தேகநபர்கள் எவரும் கூட உடனடியாகக் கைதுசெய்யப்படவில்லை.

ஏறாவூர் பொலீஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (எ-க)

## அறிக்கை காணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்து கண்டறிவதுடன் பரிகார ஏற்பாடுகளையும் பயனுள்ள தடுப்பு ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவேண்டும்.

வடக்கில் காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தொகுப்பு நூலாக வெளியிட்டிருந்தது. இந்த தொகுப்புநூலின் அத்தியாயம் I இல் மேற்கண்டவாறு குறிப்பிடப் பட்டுள்ளது. (விரிவான செய்தி இரண்டாம் பக்கத்தில்) (எ)

## புலனாய்வாளர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கக் கூடி கோஷங்களை எழுப்பி எதிர்ப்பு அர்ப்பாட்டங்களில் ஈடுபட்டது.

புலனாய்வுத்துறையினரைக் காப்பாற்றும் விடயம் தொடர்பில் கண்காணிப்புக் குழுவினருடன் பேச்சு நடத்த வேண்டுமென ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரியதையடுத்து, அங்கு பதற்றம் ஏற்பட்டது. இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களில் முக்கியமான ஐந்து பேர் உள்ளே சென்று கண்காணிப்புக் குழுவினருடன்பேச்சுநடத்த அனுமதிக்கப்பட்டனர்.

இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் இது விடயத்தில் கண்காணிப்புக் குழுவினால் அதிகார ரீதியான நடவடிக்கைகளை எடுக்க முடியாதென்று கூறினார். (எ-க)

## பொலீஸார் – சாரதி வாய்த்தர்க்கம்

யாழ். கஸ்தூரியார் வீதியில் நேற்றுமாலை போக்குவரத்துப் பொலீஸாருக்கும் ஹை-ஏஸ் சாரதிக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பெரும் முறுகல் நிலையை ஏற்படுத்தியது.

இந்தஆண்டுக்குரிய வரி உரிமம் வாகனத்தின் முகப்பில் ஒட்டப்பட்டிருக்கவில்லை என்றுகூறியே இருபகுதியினருக்குமிடையில் முறுகல்நிலை உருவாகியதாகக் கூறப்பட்டது. (எ-12)

## விக்குமார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமார் முன்னணியின் முக்கியஸ்தரான சந்தாலோக்க தேரர் கூறியதாவது:-

நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படும் வகையில் இந்தப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது. இதற்கெதிராக நாம் சட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவுள்ளோம். அரசமைப்பின் 143 ஆம் பிரிவிற்கமைய இந்த சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக எமது உயிரைத் தியாகம் செய்யவும் நாம் தயாராக இருக்கின்றோம். எமது சடலங்களைத் தாண்டிச் சென்றே பொதுக்கட்டமைப்பை அரசு உருவாக்கவேண்டும் - இவ்வாறு சந்தாலோக்க தேரர் மேலும் குறிப்பிட்டார். (எ-க)


CIT
Sivan Lane, Avarangal, Puttur.
அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வார இறுதி நாள் மற்றும் Group Classes ஆரம்பமாகின்றன.
விசேட புலமைப்பரிசில் திட்டத்துடன் A/L பாடவிதானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள
பொது தகவல் தொழில்நுட்பம் (GIT)
கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன.
Batch - I A/L 2006 Students
Batch - II A/L 2007 Students
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
Special Children Programs
Batch I Age 5 to 10
Batch II Age 11 to 15
A/L பரீட்சையை தொடர்ந்து ஆரம்பமாக இருக்கின்ற அனைத்து கற்கை நெறிகளுக்குமான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 01/06/2005 ற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு விஷேட சிறப்பு சலுகைக் கட்டணம் வழங்கப்படும்.
(பதிவுகளை நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் மேற்கொள்ளலாம்)
சகல கணனி உதிரிப்பாகங்களையும் உத்தரவாதத்துடன் குறுகிய காலத்தில் திருத்தி பெற்றுக்கொள்ளலாம்.
T.P. 0777-589703 e-mail - avarangalcit@yahoo.com

CATWAS.COM
Computer Academy
No.26, Somasundram Avenue, Chundukuli
T.P: 021 2223805
புதிய பிரிவுகள் 01.05.2005
1. On Line Microsoft Office. ★ One Month
2. On Line DeskTop Publishing ★ One Month
3. Microsoft Kids Program
- Diploma Courses
Ms-Office 1750/= DTP 2000/=
Hardware 1500/= Web Page 3000/=
Video Mixing 2500/=
Certificate Courses (C-42534) (38-16-29)

விக்னா கல்வி நிறுவனம்
பிரிவு-5
O/L DAY CLASS
ஆரம்பம் 04.05.05 (8.30-2.00)
★ பிரிவு 4 இற்கு இன்னும் சொற்ப அனுமதிகளுண்டு
★ பிரிவு 6 மிக விரைவில்
★ தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதிகள் செய்து தரப்படும்.
(C-42542) (38-16-29)

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்.
A/L பௌதிக இரசாயனம்
ஆசிரியர்
திரு. N.மகேஸ்வரன்
ஆரம்பம்: 30/04/2005
சனி - 5.30 P.m.
(44721) (38-16-29)

Off Set விற்பனைக்கு உண்டு
நல்ல நிலையில் உள்ள. Rota Print
Off Set Machine, Plate Maker
(Original) (14x17 Size)
விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: College of Computer
கே.கே.எஸ் வீதி கோண்டாவில் 0212227643

புதிய பிரிவுகள் ஆரம்பம் 30.04.05,02.05.05
Softview Computer College
(Authorised Councelling Centre for Queen's Park College, London. A joint Venture with Arom Menporulagam Ltd., India.)
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170, 0777846811

| COURSE | DURATION | FEES |
|---|---|---|
| Diploma in Microsoft Office | 5 Months | 1750/= |
| Diploma in Desktop Publishing | 4 Months | 2750/= |
| Diploma in Computer Programming | 8 Months | 5600/= |
| Diploma in Hardware Engineering | 4-5 Months | 3600/= |
| Diploma in Network Engineering | 4 Months | 5700/= |
| Diploma in Visual Basic | 4 Months | 2750/= |
| Diploma in Computer Science | 4 Months | 2750/= |
| Diploma in AutoCAD | 4 Months | 2750/= |
| Diploma in C++ | 4 Months | 2750/= |
| Diploma in Internet E-Mail | 2 Months | 750/= |

இப்பிரிவிற்கு மட்டும் பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

N.S.A மானிப்பாய் வீதி, உடுவில்.
A/L 2007
கலை, வர்த்தக, கணித, உயிரியல்
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
29.04.2005 வெள்ளி 4 மணி

| | |
|---|---|
| பொருளியல் | திரு. P.சண் |
| கணக்கீடு | திரு. N.சதீஸ் |
| வணிகக்கல்வி | பிரபல ஆசிரியர் |
| தமிழ் | திரு. N.சத்தியவேந்தன் |
| இந்துநாகரிகம் | திரு. S.ஜெயக்குமார் |
| அளவையியல் | திரு. P.கமல் |
| புவியியல் | திரு. N.S.சங்கர் |
| நாடகம் | திரு. K.கந்தவேள் |
| இணைந்த கணிதம் | திரு. கோணேஸ் |
| இரசாயனவியல் | திரு. பத்மநாதன் |
| பௌதிகவியல் | திரு. சர்மிலன் |
| உயிரியல | பிரபல ஆசிரியர் |

★ G.A.Q., B.A. Ist in com. வகுப்புகள் ஆரம்பம்: 30.04.2005 சனி 4 மணி.
★ தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
(44682) (33-15-17) - நிர்வாகி.

இல்வச கணனி வகுப்புக்கள் ஆரம்பம்
Sat Sun → → → 9.00 AM / 11.00PM
யாழ் மண்ணில் முதன்முறையாக Video Mixing கற்கை நெறியினை அறிமுகம் செய்த நாங்கள் உங்களுக்காக
Pinnacle Studio 9.0 கற்கைநெறியை ஆரம்பிக்கவுள்ளோம்.
இரவு நேர வகுப்புக்கள் Sat, Sun 7.30 PM
Video Mixing & Hard Ware
ஆரம்பம் Sat, Sun 6.30 PM
கற்கைநெறியினை பூர்த்திசெய்யும் அனைவருக்கும் LONDON INFO TECH நிறுவனத்தின் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
College of Computer 0212227643

A/L - தமிழ் 2006 - பகுதிII
புதிய பிரிவு: வெள்ளி 4.00
ஈழத்திலக்கிய வரலாறு
கையேடுகள் மூலம் கற்றல
நாக. தமிழிந்திரன்
★ பரீட்சை வெற்றி நோக்கம் எனின் இதுவே இறுதி வாய்ப்பு
இயக்குநர்:
BEACON - யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### சபாரத்தினம் கனகரத்தினம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம்)



நல்லூர் செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும், சரசாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் கனகரத்தினம் அவர்கள் நேற்று (2005.04.27) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சபாரத்தினம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் அமிர்தவல்லியின் (சோதி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற விநாசித்தம்பி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நவரத்தினம் ஞானாம்பிக்கை மற்றும் பேராசிரியர் மனோ சபாரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரனும், சுசீலா (TTN லண்டன்), சுபத்திரா (ஆயுள்வேத வைத்தியர்), முருகதாஸ் (பொது முகாமையாளர், நமது ஈழநாடு), கண்ணதாஸ் (ஆங்கில மொழித்துறை, யாழ. பல்கலைக்கழகம்), சுகன்யா (டென்மார்க்), ரமணதாஸ் (சுவிஸ்), விநாயகதாஸ் (கணக்காளர் - சிலிங்கோ) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் - இரவி (IBC லண்டன்), புவனேஸ்வரி (தேவி- ஆசிரியை - யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), திருமகள், சிவசுந்தரம் (டென்மார்க்), இன்பராணி, யசோதரா ஆகியோரின் அன்பு மாமனாரும் - சஞ்சயன், சஞ்சுதன், மாதங்கி, அபிநயா, வார்ஷ்நேயன், சுஜீவன், சுஜன், ராம்சுதன், அபிராமி ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சரசாலை தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (2005.04.28) வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மெய்கண்டான் வீதி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(44726) (33-15-17)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.